www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka JuDE பக்கம் 20 11/00

දිනමුරසු වාරමලර් நவ.23-29,1997

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 232

# கடல் அபாயம்

## பூச்சாண்டியும் பூசாரிகளும்




## ராஜேஸ்குமாரின் அசத்தல் கதை



படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## நசிவடையும் நம்பிக்கைகள்

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

வவுனியாவில் கைதான
வாலிபர் ஒருவர் பலியாகியுள்ளார்.
விசாரணையின் பின்னர்
மரணம் சம்பவித்துள்ளது!

நடந்தது என்னவென்று
கேட்பாரில்லை!
கண்டுகொள்ளக்கூட
ஆளேயில்லை!

பலியானவர் புலிதான்
என்று நினைத்து,
தமிழ்க் கட்சிகள்
மௌனம் சாதித்தனவா?

பலியான பின்னர்
புலியானாரா?
புலியானதால்
பலியானாரா?

எப்படியிருந்தால் என்ன,
சட்டபூர்வ விசாரணையில்
மரணம் சம்பவிப்பது
சரிதானா?

1970களில்
மறுசிரா என்னும்
பயங்கர குற்றவாளிக்கு
தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டது!

அதன் பின்னர்
ஒரு சர்ச்சை கிளம்பியது.

மறுசிரா
தூக்கிலிட்டபின் செத்தானா?
செத்த பின்னர்
தூக்கிலிடப்பட்டானா?
என்பதுதான் அந்தச் சர்ச்சை!

உடனே விசாரணைக்கு
உத்தரவிட்டது அரசு!

அப்போது இந்த விவகாரம்
கூட்டணி மேடைகளிலும்
பேசப்பட்டது!

தமிழ் ஈழமே
முடிந்த முடிபு என்று
கூட்டணி முழங்கிய காலம் அது!

சிறு பொறி கிடைத்தால்கூட
அதனைப் பயன்படுத்தி
தமிழின உணர்ச்சியை வளர்க்க
அன்றைய கூட்டணி
தவறியதே கிடையாது!

மறுசிரா போன்ற
சமூக விரோதியின் மரணத்தில்
காட்டப்படும் அக்கறைகூட
தமிழ் மக்கள் பலியாவதில்
காட்டப்படுவதில்லை
என்று சுட்டிக்காட்டினர்
கூட்டணித் தலைவர்கள்!

இன்றுவரை
அதே அலட்சியம்தான்
பிசகின்றித் தொடர்கிறது!

சுட்டிக்காட்ட
இன்றைய கூட்டணியும் சரி
முன்னாள் போராளிகளும் சரி
தயாராக இல்லை!

ஜே.வி.பி. கிளர்ச்சியை
ஒடுக்க கடந்த ஆட்சியில்
படுகொலைகள்
கட்டவிழ்த்து விடப்பட்டன என்று
இன்றைய ஆட்சியினர் கூறுகின்றனர்!

ஜே.வி.பியினராக இருந்தாலும்
கைது செய்த பின்னர்,
அவர்களை சுட்டுக் கொன்றதும்
டயரில் போட்டதும் தவறு
என்பது சரியான கூற்றுத்தான்!

ஆனால்- இந்த
மனித உரிமை அக்கறையும்
மனிதாபிமான உணர்வும்
தமிழ் பேசுவோர் விடயத்தில்
ஏன் காண்பிக்கப்படவில்லை;

போரிலே இதுபோன்ற
சம்பவங்கள் சகஜம்
என்பதுபோல
நியாயப்படுத்த முனைகிறார்கள்!

இதே நியாயம்தான்
ஜே.வி.பி.கிளர்ச்சிக் காலத்தில்
மேற் கொள்ளப்பட்ட
அரச நடவடிக்கைகளுக்கும்
அன்று கூறப்பட்டது!

அதனை- அன்றைய
எதிர்க்கட்சியான இன்றைய
ஆட்சியாளர்களோ-
தென்னிலங்கையில் உள்ள
புத்திஜீவிகளோ ஏற்கவில்லை!

அடிப்படை உரிமைகள்
ஜனநாயக சுதந்திரங்கள்
என்பவற்றுக்கு
அப்பாற்பட்டவர்களாக
தமிழ் பேசும் மக்கள்
கருதப்பட்டு வருவதற்கு
எப்போதுதான் முற்றுப்புள்ளி
வைக்கப்போகிறார்கள்?

நீதி அமைப்புக்கள்
ஜனநாயக நிறுவனங்கள்
என்பவற்றின்மீது
தமிழ் பேசும் மக்களுக்கு
நம்பிக்கை ஏற்படுவதற்கு மாறாக
உள்ள நம்பிக்கைகளும்
நசிவடையச் செய்யும்
நடப்புக்களே நடந்து வருகின்றன!

■ ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்

## பாவத்தின்மேல் பாவம்!

"பிசாசுக்கு இடம் கொடாமலும் இருங்கள்"
(எபே 4:27)

அருமையானவர்களே! எம்முடைய வாழ்க்கையில் நாம் சிறிது சாத்தானுக்கு இடம் கொடுப்போமாக இருந்தால், அவன் அதனைப் பயன்படுத்தி, எம்மைப் பாதாளத்திலே தள்ளி விடுவான். எபிரேய நிருபத்தில் அதன் ஆசிரியர், "உங்களுக்குள்ளே கசப்பான வேறுப் புணர்வுகள் வேரூன்றாதவாறு பார்த்துக் கொள்ளுங்கள்! ஏனெனில் அது உங்களிடையே வளர்ந்து குழப்பங்களை உண்டாக்கி ஆவிக்குரிய வாழ்வைப் பாதிக்கும்." எனக் குறிப்பிடுகிறார். எனவே, கசப்பு எம் உள்ளத்தில் உருவானால்-நாம் பிசாசுக்கு இடங்கொடுக்கும் போது, அவன் அதை வேரூன்ற வைத்து நம் வாழ்க்கையையே பாதித்துவிடுவான்.

எனவே சகோதரனே! சகோதரியே! உன்னுடைய வாழ்க்கையில் யாருடனாவது கசப்பு உண்டா? சிறிய காரியம்தானே என்று எந்தவொரு பாவத்தையும், பலவீனத்தையும் வைத்துவிடாதே! அது சாத்தானுக்கு நாம் கொடுக்கும் முதலாவது இடம். அந்த இடத்தை வைத்தே எம்முடைய முழு வாழ்க்கையையும் கெடுத்துவிடுவான். எனவே இன்று உங்களை ஆராய்ந்து பாருங்கள். உங்கள் இருதயத்தில் எங்கேயாவது ஒரு சிறு இடத்தை சாத்தான் பிடித்திருப்பானாக இருந்தால் இன்றே அதனை சரி செய்து கொள்ளுங்கள்.

தி.தேவபாலன்,மட்டக்களப்பு.



## பக்கத்து வீட்டாருக்கு துன்பம் தருதல்!

அடுத்தவர்களுக்குத் துன்பம் தருதல் பொதுவாக தடுக்கப்பட்டிருந்தாலும்,அண்டை வீட்டாருக்குத் துன்பம் தருவதை இஸ்லாம் கடுமையாகத் தடுக்கிறது."பக்கத்து வீட்டாருக்குத் துன்பம் தரும் வகையில நடந்து கொள்பவர் சுவர்க்கத்திற்கு செல்ல முடியாது" என்று கடுமையாக எச்சரிக்கை விடுக்கிறது.

"யார் அல்லாஹ்வையும் மறுமை நாளையும் நம்புகிறாரோ, அவர் பக்கத்து வீட்டாருக்குத் துன்பம் தராமல் இருக்கட்டும்"

"எவருடைய துன்பத்திலிருந்து பக்கத்து வீட்டார் பாதுகாப்புப் பெறவில்லையோ அவர் அல்லாஹ்வின் மீது ஆணையாக ஈமான் கொள்ளவில்லை"

-(நூல்:-புகாரி முஸ்லிம்)

"ஜிப்ரில் (அலை) அவர்கள் பக்கத்து வீட்டார் விசயத்தில் நல்ல முறையில் நடந்து கொள்வதைப் பற்றி எனக்கு தொடர்ந்து வலியுறுத்தி வந்தார்கள். அவர்கள் எனக்கு வாரிசாகி விடுவார்களோ என்று நான் எண்ணுமளவுக்கு அது இருந்தது." என்று நபி (ஸல்) கூறினார்கள்.

-(நூல்:-புகாரி முஸ்லிம்)

எனவே பக்கத்து வீட்டாருக்கு தொந்தரவு கொடுக்காமலும் சண்டை சச்சரவுகளில் ஈடுபடாமலும் இருக்க வேண்டும். பக்கத்து வீட்டான் பசித்திருக்க தான் மட்டும் புசிப்பவன் உண்மை முஸ்லிமாக மாட்டான்.

எம்.எம். முகம்மது ஸாகிர், சாய்ந்தமருது-10.

## கவிதைப் போட்டி
### பரிசுக்குரிய கவிதை

### உண்மையின் விலை

ஆடியே!
முகம் காட்டும் நீ,
மனித அகமும் காட்டினால்,
உலகில்,
முதல் எதிரி நீதான்!

எம். வேல்முருகன்-
மாரதென்ன, பலாங்கொடை.

## கவிதைப் போட்டி இல.232



### இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்:

**ரசம் போன கண்ணாடி**

உருவத்தைக் காட்டுதே
உனது கைக் கண்ணாடி
உயிர் வதை மத்தியில்
அமைதியைத் தேடிடும்
அவலம் நிறை எங்களுக்கு
அவனியில் தெரிவதோ
ரசம் போன கண்ணாடி!

தர்ஷிக்கா கனகசிங்கம்-கல்லடி, மட்டக்களப்பு.

**காதல்**

முகம் காட்ட
கண்ணாடி
மனம் காட்ட...?

சுபா வரன்-கண்டி.

**பார்**

முன்னாடி நடந்ததெல்லாம்-நீ
பின்னாடி மறைத்தாலும்-கைக்
கண்ணாடி காட்டுதே பார்!

இ.இந்துஜா- கவில்.

கவனியுங்கள்! எல்லைத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி- 29.11.1997

முகவரி: கவிதைப் போட்டி இல.232
தினமுரசு வாரமலர், த.பெ. இல—1772, கொழும்பு.

**பேசும் விழிகள்**

உன்னழகை காட்டும்
உன் கையில் கண்ணாடி!
உள்ளழகை காட்டும்
உன் இரண்டு விழிகளுமே!

சி.மு.சுந்தரேசன்- அரசினர்
வைத்தியசாலை, மல்கெலியா.

**பொய்யல்ல!**

பொய் முகங்கள்
மலிந்த மண்ணில்,
மறந்தும் பொய்யுரைக்காதது
கண்ணாடியே
நீ மட்டும்தான்!

ஐ. ரோஜா- பாலையூற்று, திருகோணமலை.

**கண்ணாடி**

முகம் காட்டும் கண்ணாடி
உன் முன்னாடி-ஆனால்!
அகம் காட்டும் கண்ணாடி
உன் முகம் தானடி!

த. ஆதவன்- மெயின் வீதி,
நம்பிலுவில்-01.

**சினிமா ஏக்கம்**

புது முக வரவு
பூ முகத்தில் வாட்டம்!
அறிமுக உறவு
ஆறாத் துயர் ஊட்டும்!

செல்வி ப்ரியதேசி-
கருத்துறை(தெற்கு).

**யாரறிவார்?**

கண்ணாடியில் தெரியுது முகம்
கண்களுக்குத் தெரியுமோ அகம்!
அழகினில் இவள் தனிரகம்
யாரறிவார் இவளின் சுபாவம்?

செல்வி தயாவினி பரமசாமி-
நுவரெலியா.

**தொலைந்தது**

குங்குமப் பொட்டு
உதிர்ந்து போனது;
தொங்கிய புன்னகையும்
தொலைந்து போனது!

ஏறாவூர்-ஸபீர் ஹாமிஸ்.

**எதற்கு?**

சொந்த
வீடிழந்து
காணியிழந்து
உறவிழந்து
முகங்களே இல்லாத
எமக்கெதற்கு
கண்ணாடி!

லோ. சுதர்மன்- கண்டி.

# வாசக(ர்)சாலை

வெளியே வெண்கலப் பூட்டு. உள்ளே..ஓ.. எத்தனை எத்தனை சோதனைகள்.. சோகங்கள். டயானாவால் எப்படித்தான் தாங்கிக் கொள்ள முடிந்ததோ? நம் நெஞ்சில் பாதிப்பையும் கண்களில் ஈரத்தையும் உண்டாக்கிவிட்டார் டயானா.

எஸ்.பத்மா, உமாஜினி, கொழும்பு-10.

பாடசாலை மாணவர்களுக்காக 'பாப்பா முரசு' என்னும் தலைப்பில் ஒரு பக்கத்தையே ஒதுக்கி படிப்பினையூட்டும் சிறுகதைகள், பாரதியாரின் வகைவகையான கவிதைகள், விடுகதைகள், அதிசய உண்மைகள், வர்ணம் தீட்டும் போட்டி போன்ற இன்னோரன்ன படைப்புக்களை அள்ளி வழங்கும் முரசுக்கு என்றென்றும் எனது மனப் பூர்வமான நன்றிகள் உரித்தாகட்டும்.

சோ.சங்கரலிங்கம், திருப்பழுகாமம்.

"நியாயமான தீர்வு வழங்கியே தீருவோம். என்று குண்டுவெடிப்புக்கள் மத்தியிலும் ஜனாதிபதி கூறுவது உலக அரங்கில் வரவேற்புப் பெறக்கூடிய பேச்சுத்தான். ஆனால் நியாயமான தீர்வொன்றை வழங்கும் துணிச்சல் இருந்தால் மட்டுமே நாட்டை அழிவுப் பாதையில் இருந்து மீட்கமுடியும்" இராஜதந்திரியின் அலசல் மிகவும் நன்று.

மு.பிரகாஷ், முளாய், யாழ்ப்பாணம்.

**மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிவுசெய்யப்பட முடிந்தவர்கள்:**

* என்.எச்.எம்.நஸீர், மாத்தளை.
* சி.ஸ்ரீரவி, சிவபுரம்.
* வே.சசிகலா, வெரல்லமை.
* ஏ.செயந்திரன், பசறை.
* அ.தமிழ்ச்செல்வன், வவுனியா.
* ஏ.ராசேந்திரன், தலைமன்னார்.
* சி.கிரஷாஞ்சன், வவுனியா.
* கே.சங்கரலட்சுமி, சிவபுரம்.
* எம்.நிலவதி, உடபாகை.
* என்.என்.வாபீர், கல்முனை.
* சுதர்சுத்துரை, மட்டக்களப்பு.
* திருமதி நித்தியகலா மணிவண்ணன்,கொம்மாதுறை.
* எம்.மணிமேகலா, கம்பளை.
* செல்வி பி.சுமதி, செட்டிகுளம்.
* கே.நிலா, இறக்குவானை.
* எல்.ஜலீல், தெஹிவளை.
* வி.வித்யா, கனடா
* என்.கே.தயாசேகரன், பாரிஸ், ஃபிரான்ஸ்.
* உ.ஜெனியர், கனடா.
* கே.சங்கராஜ், சிங்கப்பூர்.
* பி.சிவராமன், இலண்டன்.
* சி.உருத்திரன், இலண்டன்.
* ஜெ.டேவிற்சன், சுவிற்சர்லாந்து.
* மா.நிர்மலாதேவி, பதுளை.
* ஆர்.பிரபு, கண்டி.
* எஸ்.ஜெயபாலன், அமெரிக்கா.
* வி.தவச்செல்வம், மட்டக்களப்பு.
* பூ.ராஜன், புதுக்குடியிருப்பு.
* சா.ஜெயக்குமார், சா.விஜயகுமார், ஜெர்மன்.

## தில்லு முல்லு

நம் தமிழ்த் தலைகளான வியாபாரக் கூட்டணியின் தில்லு முல்லு யாவும் முழுத் தமிழினமும் அறிவது கண்டு பொங்குதே மனம். ஜனநாயக வழிக்குத் திரும்பியோரும் கூட்டணி வழியே 'பழைய குருடி கதவைத் திறவடி'தான். இந்நிலையில் விடி மோட்சம் எப்போ?

எஸ்.எம்.ராஜா, நீர்கொழும்பு.

## எங்கே தீர்வுத் திட்டம்?

அன்பின் முரசே! தீர்வுத் திட்டம் அடுத்த ஆண்டுதான் பாராளுமன்றம் முன் சமர்ப்பிக்கப்படும் என்று வெளிநாட்டுத் தொலைக்காட்சிக்கு பேட்டியளித்துள்ளார் ஜனாதிபதி. அப் பேட்டியை பார்த்துக் கொண்டிருக்கையில், பாராளுமன்றத்தில் தீர்வு யோசனை சமர்ப்பணம் என்று தாங்களாகவே கற்பனை செய்து, அதற்கு ஐ.தே.கட்சிதான் எதிரி என்றும் திட்டித் தீர்த்த சில விமர்சகர்களும் நம் காதில் பூச் சுற்றிவிட்டதை அறிய முடிந்தது. அது தீர்வல்ல என்பதை சுட்டிக் காட்டிய முரசின் பணியை மனதாரப் பாராட்டுகிறேன்.

எம்.சற்குணம், கொழும்பு-11.

## பானைக்குள் பருக்கைகள்

அன்பு முரசுக்கு. முதற்கண் வாழ்த்துக்கள்!

ஆளும் அணியையும், பிரதான எதிர்க்கட்சியையும் கூடிக் குலாவச் செய்ய தமிழ்க் கட்சிகள் மேற்கொள்ளும் முயற்சிகள் விவேகம் இல்லாதவை என்பதை 'முரசு' சுட்டிக்காட்டி வருகிறது. பாராட்டுக்கள். 'பானையில் இருந்தால்தான் அகப்பையில் வரும்'. அரசின் தீர்வுத் திட்டம் என்ற பானையில் இருப்பவை பருக்கைகள். அந்த பருக்கைகளை வாங்கிப் புசிக்க தயாராக இருந்தால், ஆளும் அணியையும், பிரதான எதிரணியையும் அழைத்து, "ஐயாமாரே! நீங்கள் இருதரப்பாரும் இணைந்து நின்று அந்தப் பருக்கைகளை வழித்துப் போடுங்கள்!" என்று தங்கள் தட்டுக்களை ஏந்தட்டும் தமிழ்க் கட்சிகள்.

மு.சாமிநாதன், ஓய்வு பெற்ற அதிபர், வவுனியா.

## நல்ல தமாஷ்!

பொதுஜன முன்னணிக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையே ஒற்றுமையைக் காணப்போகிறார்களாம். நல்ல தமாஷ். ஒற்றுமை இல்லாத நிலையிலேயே ஏட்டிக்குப் போட்டியாக குறைந்த தீர்வு தர முண்டியடிக்கிறார்கள். இணைந்து நின்றால், தமிழ் பேசும் மக்களின் கதை கந்தல்தான்! தமிழ்க் கட்சிகள் உதவிதான் செய்ய முடியாவிட்டாலும், குழிபறிக்க முன்னிற்காமல் இருக்கலாம். கோடி புண்ணியம்.

வி.இராஜசேகரம், திருக்கோணமலை.

மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர், த.பெ.இல:- 1772,கொழும்பு.

## உடன்பாட்டு நாடகம்



இராஜதந்திரியாரின் அலசலில், எதிர்க்கட்சியை அழைத்து அரசுடன் உரசி மகிழச்செய்ய முயலும் தமிழ்க் கட்சிகளை சாடியிருந்தார். தூங்குவோரை எழுப்பலாம், தூங்குவது போல நடிப்போரை எழுப்ப முடியுமா? சில மாதங்களுக்கு முன்னர் இந்நாள் ஆளும் கட்சியும், முன்னாள் ஆளும் கட்சியும் சேர்ந்து நடத்திய உடன்பாட்டு நாடகத்தை மறந்தா போனார்கள்? உலகை ஏமாற்ற, காலம் கடத்த இரண்டு கட்சியும் இணைந்து நின்றன. அதே நாடகங்கள் தொடர வேண்டும் என்றுதான் தமிழ்க் கட்சிகள் விரும்புகின்றனவோ?

பி.ஸ்ரீவேந்திரன், மன்னார்.

## சம்பந்தர் ஒப்பந்தம்

அன்பார்ந்த முரசே!

பதவிப் பங்கீட்டு ஒப்பந்தம் நடத்தி முன்னாள் எம்.பி தங்கத்துரையுடன் மல்லுக்கட்டிய போதே இரா.சம்பந்தர் பற்றி நாம் அறிந்துகொண்டோம். எங்காவது ஒரு கட்சிச் செயலதிபர் தனது கட்சி உறுப்பினருடன் பதவியைப் பங்கிட ஒப்பந்தம் செய்வாரா? சரித்திரமே கிடையாதே! நாற்காலி ஆசையின் எல்லைதானே அது. இப்போது அடுத்த தேர்தலுக்காயினும் நேரடியாக வெற்றிபெற அடுக்குப் பண்ணுகிறார். அதற்காக அம்பாறையை மட்டுமல்ல, எதை வேண்டுமானாலும் இழக்கத் தயார்தான். தனது சகவான தங்கத்துரையையே நம்பாமல் பத்திரம் எழுதி பதவிக்கால பங்கீடு ஒப்பந்தம் செய்தவர் சம்பந்தர். ஆனால் அரசை மட்டும் நம்பி விட்டுக்கொடுப்புக்களுக்கு எப்படிச் சம்மதித்தார்? அம்பாறையை பிரிக்க உடன்பட்டதை மறைக்க 'வடக்கு-கிழக்கு கருத்துக் கணிப்புக்கு எதிர்ப்பு' என்று தீர்மானம் நிறைவேற்றி நம் கண்ணில் மண் தூவுகிறார்கள்.

இ.சிவயோகன், திருமலை.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச் சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு. -நிர்வாகி.



படிப்பகம்

www.padippakam.com

# குண்டுவெடிப்புப் பற்றி புலிகள்

கொழும்பு அனல் மின் நிலையத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்புக்கு புலிகள் உத்தியோகபூர்வமாக உரிமை கோர வில்லை. அதே நேரம் மறுக்கவும் இல்லை.

குறிப்பிட்ட குண்டுவெடிப்புத் தொடர் பாக புலிகளின் செய்தி அறிக்கையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டது:

"சிறீலங்காவின் தலைநகரில் அதி உயர் பாதுகாப்புக் கொண்ட பகுதியில் உள்ள மின் நிலையத்தில் குண்டுகள் வெடித் துள்ளன. ஊவா மாகாணத்தில் பதுளையிலும் குண்டுகள் வெடித்துள்ளன.

குண்டுவெடிப்பின் தாக்கத்தை மறைக்க சிறீலங்கா அரசு முயற்சிகளை மேற்கொண் டுள்ளபோதும், உள்ளூரக் கலக்கம் அடைந் துள்ளது.

இத்தாக்குதலுக்கு விடுதலைப் புலிகளே காரணம் என்று செய்தி ஸ்தாபனங்கள் கூறி யுள்ளன." என்று புலிகளின் செய்தி அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு குண்டுத் தாக்குதல்களுக்கு புலிகள் உரிமை கோருவது வழக்கம் இல்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். ■

# 'ஜயசிக்குறுய்' மூன்றாம் கட்டம் ஆரம்பம்!

## மும்முனைகளில் படையினர் தாக்குதல்!

வன்னியில் புலிகளின் மாவீரர்தின தாக்குதல் அபாயம் இருப்பதால், அதற்கு இடமளிக்காமல் படை நடவடிக்கை ஆரம்ப மாகும் என்று கடந்தவார முரசில் தெரிவிக் கப்பட்டது அல்லவா. தற்போது 'ஜயசிக்குறுய்' மூன்றாம் கட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாமல், முரசு தெரிவித்த கணிப்பைப் போலவே, உட்பாதையால் முன்னேறும் முயற்சியில் ஈடுபட்டபடியே, வவுனியா, யாழ் சாலை வழியாக முன்னேற படையினர் பலத்த முயற்சியில் இறங்கி னார்கள்.

வவுனியா-யாழ் சாலையில் புளியங் குளத்தில் நிலைகொண்டுள்ள படையினர் புளியங்குள நகரைக் கைப்பற்றும் நகர்வை மேற்கொண்டனர்.

'ஜயசிக்குறுய்' மூன்றாம் கட்டம் ஆரம்ப மாக முன்பாக, காடுகள் சார்ந்த உட்பாதை யால் முன்னேறிச் செல்வதற்கான தயாரிப்பில் படையினர் ஈடுபட்டிருந்தனர்.

படையினரின் தயாரிப்பு நடவடிக்கை களை முறியடிக்க ஜயசிக்குறுய் முன்னரங்க நிலைகள்மீது 11.11.97 அன்று புலிகள் தாக்குதல்கள் நடத்தினார்கள்.

14.11.97 அன்று பெரியமடுப் பகுதியில் படையினர் மறைந்திருந்தனர். அதனை அறியாமல் படையினரின் முன்னரங்க நிலை களைத் தாக்க முன்னேறிய புலிகளின் அணி ஒன்று படையினரின் தாக்குதலுக்கு இலக்காகியது. அதில் ஏழு புலிகள் பலியா னார்கள். படையினர் தரப்பில் எவ்வித இழப்பும் ஏற்படவில்லை.

### கட்டம் மூன்று

16.11.97 அன்று காலையில் ஜயசிக்குறுய் படையினரின் மூன்றாம்கட்ட நகர்வுகள் ஆரம்பமாகின. 'ஜயசிக்குறுய்' நடவடிக்கைக்கு பொறுப்பாக புதிய தளபதி நியமிக்கப்பட்ட பின்னர் மேற்கொள்ளப்பட்ட முதல் நகர்வே இதுவாகும்.

வவுனியா யாழ்சாலை வழியாக முன் னேறுவதற்கான அறிகுறிகள் எதனையும் காட்டாமல் இருந்துகொண்டு, அச்சாலைக்கு கிழக்கே உள்ள உட்பாதைகள் வழியாக முன்னேறுவதற்கான முனைப்பையே படை யினர் காண்பித்தனர்.

அவ்வாறு காண்பித்தபடியே இருந்தால் புலிகளின் அணிகள் சாலையைவிட்டு விலகி, உட்பாதை வழியாக முன்னேறும் படைகளை தடுக்கும் வகையில் நகர்ந்து வரும் என்று படையினர் நினைத்திருக்கலாம்.

16.11.97 காலை ஜயசிக்குறுய் மூன்றாம் கட்டம் ஆரம்பமானபோது முதலில் நகர்வு சாலை வழியாகவே மேற்கொள்ளப்பட்டது. புளியங்குளம் நகர் நோக்கி படையினர் நகர்ந்தனர்.

எனினும் புளியங்குளம் நகர் இச் செய்தி எழுதப்படும்வரை படையினர் கையில் பூரணமாக விழுந்ததாகத் தெரியவில்லை.

புளியங்குள நகரை நோக்கி முன்னேறிய படையினரை எதிர்த்து புலிகள் தாக்குதல் நடத்தியதை அடுத்து, மேலும் இரு முனை களில் படையினர் முன்னேற முயன்றனர்.

கனகராயன் குளம் நோக்கி ஒரு அணி யும், கரிப்பட்ட முறிப்பு ஊடாக மாங்குளம், ஒட்டிசுட்டான் வீதி வழியாக இன்னொரு அணியும் முன்னேற முயன்றன.

இருமுனைகளிலும் புலிகளின் அணி களுக்கும் படையினருக்கும் எதிரே மோதல்கள் மூண்டன. இருதரப்பும் ஷெல் தாக்குதல் களையும் சரமாரியாக நடத்தின.

உட்பாதைகள் ஊடாக கனரக வாகனங் கள், டாங்கிகள் சகிதம் படையினர் முன்னேற முயன்றாலும் புலிகளின் தாக்குதல் காரண மாகவும், மழைகாரணமாக நிலப்பகுதியில் டாங்கிகள் துரிதமாக நகரமுடியாமை காரண மாகவும் படையினரின் முன்னேற்றம் தடைப் பட்டது.

### துரிதம் இல்லை

செய்திகளில் கூறப்படுமளவுக்கு கள நிலவரங்களில் துரித மாற்றங்கள் ஏற்பட்ட தாக இதுவரை தெரியவில்லை.

16 முதல் 19 வரையான மூன்று நாள் மோதலில் ஏற்கனவே தாம் நிலைகொண்டி ருந்த முன்னரங்க அரண்களைவிட்டு அதிக தூரம் படையினர் முன்னேறியதாகத் தெரிய வில்லை.

புலிகளின் செய்திகளின்படி மூன்றுநாள் மோதல்களில் 20 புலிகள்வரை பலியாகியுள்ள னர். புலிகளின் சிறப்புப் படையணிகள் முன்னேறும் படையினரை எதிர்கொண்டு தாக்கி நிறுத்தி வருவதாக புலிகளின் செய்தி கள் கூறியுள்ளன.

கிளிநொச்சியில் இருந்தும் முன்னேறும் முஸ்தீபுகளில் படையினர் ஈடுபட்டதாகவும், அங்கு நடைபெற்ற மோதலில் தமது தரப்பில் ஒருவர் பலியானதாகவும் புலிகள் தெரிவித் துள்ளனர்.

டிசம்பர் மாதத்துக்குள் கிளிநொச்சியுடன் இணைப்பை ஏற்படுத்தி விடலாம் என்று படையினர் திட்டமிட்டுள்ளனர். ஆயினும் அக் காலவரையறை சாத்தியமற்ற ஒன்றாகும் என்றே தெரிகிறது.

ஏனெனில் உட்பாதை வழியாக கிளி நொச்சியை சென்றடைய வேண்டுமானால் கரிப்பட்ட முறிப்பில் உள்ள படையினர் மேலும் குறைந்தது 40 கிலோமீட்டர்களாவது சென்றாக வேண்டும்.

வவுனியா- யாழ் சாலை, உட்பாதையின் இரு முனைகள், கிளிநொச்சி ஆகிய நான்கு முனைகளால் நகர்ந்து இறுதிக் கட்ட முன் னேற்றத்தை முடுக்கிவிட படையினர் நினைத் துள்ளனர்.

### பாரியகளம்

எனினும் பாரிய இழப்புடன் கூடிய போர்முனையாகவே அது மாறும். உட்பாதை வழியாக முன்னேறுவதைவிட அங்கு நிலைகொள்வது மிக ஆபத்தானதாகும்.

இதேவேளை கொழும்பு குண்டுத் தாக்குதல், எம்.ஐ. 24. ஹெலி தாக்கப்பட்டமை ஆகியன தொடர்பான தாக்கங்களை தணிக் கவே 'ஜயசிக்குறுய்' படை நடவடிக்கை பற் றிய பிரசாரங்கள் பரபரப்பாக முடுக்கி விடப்பட்டுள்ளதாக செய்தி விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

பி.பி.சி. வானொலியில் கருத்துத் தெரிவித்த ஒரு தென்னிலங்கை விமர்சகர் டிசம்பருக்குள் 'ஜயசிக்குறுய்' நிறைவு பெறுவது சந்தேகம் என்று கூறினார். ■

# குடாநாட்டில் மோதல் தீவிரம்!

## புலிகளின் அணிகள் நடமாட்டம்!

யாழ் குடாநாட்டில் வடமராட்சி, தென் மராட்சி பகுதிகளில் புலிகள் இயக்கத்தினரின் தாக்குதல் நடவடிக்கைகள் தீவிரமடைந்து வருகின்றன.

11.11.97 அதிகாலை 4.30 மணியளவில் வவுனியாவில் படையினரின் பாதுகாப்பு அரண் கள் புலிகளால் தாக்கப்பட்டன. இரண்டு காவலரண்கள் தாக்கப்பட்டன. கைதடிப் பகுதி யில் நடத்தப்பட்ட தாக்குதலில் படையினர் இருவர் பலியானதாகத் தெரிகிறது.

12.11.97 அன்று வதிரியில் படையின ருக்கும் புலிகளுக்கும் இடையே 30 நிமிடம் துப்பாக்கிச் சண்டை இடம்பெற்றது.

13.11.97 அன்று வரணியிலும், கச்சாயிலும் இரு மோதல் சம்பவங்கள் இடம்பெற்றன.

14.11.97 அன்று சங்கத்தானையில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படையினர் இருவர் கொல்லப்பட்டனர். அவர் களிடம் இருந்த ஆயுதங்களும் புலிகளால் எடுத்துச் செல்லப்பட்டன. 17.11.97 இல் வல் வெட்டித்துறையிலும் மோதல் நடைபெற்றது.

வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் புலிகளின் அணிகள் நடமாடுவதை அவ தானிக்க முடிகிறது. வலிகாமப் பகுதியில் மட்டும் புலிகளின் பகிரங்க நடமாட்டங்கள் குறைவாக உள்ளன. 'ஜயசிக்குறுய்' நடவடிக் கைக்காக யாழ் குடாநாட்டில் படையினரின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளமையால் புலிகளின் நடமாட்டமும் தாக்குதல்களும் தீவிரமாகும் என்று தெரிகிறது. ■

# கடல் நடுவே ஏவுகணைகள்!

## வான் வெளிக்கு அச்சுறுத்தல்!

முல்லைக் கடற் பகுதியில் எம்.24 ஹெலிக்கொப்டர் தாக்கப்பட்டதற்கு புலிகள் உரிமை கோரியுள்ளனர்.

முல்லைக் கடற்பரப்பில் தயாராக நின்ற விடுதலைப் புலிகளின் விமான எதிர்ப்புப் படையணியால் எம்.24 உலங்கு வானூர்தி தாக்கப்பட்டதாக புலிகள் தமது செய்தியறிக் கையில் தெரிவித்துள்ளனர்.

முல்லைக் கடற்பரப்புக்கு மேலாகவே வடபகுதிக்கான விமானப் பறப்புக்கள் இடம் பெற்று வருகின்றன.

கடற்புலிப் படகுகளில் விமான எதிர்ப்பு படையினர் காத்திருந்து தாக்குதல் நடத்தியிருப் பதால், வடபகுதிக்கான விமானப் பறப்பு களுக்கு அச்சுறுத்தல்கள் ஏற்பட்டுள்ளன.

கடலில் கடற்படையினரின் ரோந்து களுக்கு மட்டுமல்லாமல், வானில் விமானப் படையினரின் பறப்புகளுக்கும் கடற்புலிகள் அச்சுறுத்தலாக மாறியுள்ளனர்.

விடுதலைப் புலிகளிடம் இருப்பது ஸ்ரிங் கர் ஏவுகணைகளா? சாம் 7 ரக ஏவுகணைகளா என்பது பற்றி இன்னமும் திட்டவட்டமாக படையினர் அறிய இயலவில்லை. எனினும் ஸ்ரிங்கர் ஏவுகணைதான் புலிகளிடம் உள்ளது எனப் படையினர் கூறிவருகின்றனர்.

ஆனால் தம்மிடம் எந்த வகையான ஏவுகணைகள் இருக்கிறது என்பது தொடர் பாக இதுவரை புலிகள் தெரிவிக்கவில்லை. விமான எதிர்ப்பு ஆயுதங்கள் என்று பொது வாகவே கூறி வருகின்றனர். ■

# அனல் மின் நிலையத்துக்கு பாதிப்பில்லை

## திறக்கப்பட்டு மூன்று மாதங்கள்

புலிகளின் குண்டுத் தாக்குதல் இடம் பெற்ற களனிதிஸ்ஸ அனல் மின் நிலையம் இத்தாலிய நிறுவனம் ஒன்றினால் அமைக்கப் பட்டதாகும்.

இலங்கையில் லக்சபான, கொத்மலை, இங்கினியாகல (சேனநாயக்கா சமுத்திரம்) மூன்றும் இலங்கையின் பிரதான நீர்மின் உற்பத்தி நிலையங்கள் ஆகும்.

வளர்ந்துவரும் தொழிற்பெருக்கம் மற்றும் இதர தேவைகளுக்கு மின்சாரம் போதாமல் இருந்தமையால், ஜெனரேற்றர் மற்றும் அனல் மின் உற்பத்தி போன்றன அறிமுகமாகின. இவற்றுக்கு எரிபொருள் அதிகம் தேவை.

டி.எஸ். சேனநாயக்கா பிரதமராக இருந்தபோது ஆரம்பித்துவைக்கப்பட்ட திட் டங்கள்தான் இங்கினியாகல, களனிதிஸ்ஸ மின் உற்பத்தி நிலையங்களாகும்.

கொழும்பு நகர மின்தேவையை சமாளிக் கும் வகையில் உருவாக்கப்பட்டதே களனி திஸ்ஸ அனல் மின் நிலையம்.

ஆரம்பத்தில் ஜெனரேற்றர்களின் உதவி யால் மின் உற்பத்தி செய்யப்பட்டது. சமீபத் தில் 115 மெக்வாற் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் வல்லமை உள்ள அனல் மின் நிலையமாக மாற்றப்பட்டுள்ளது. இது நீராவி யிலும் டீசலிலும் இயங்கும்.

இரண்டாயிரம் மில்லியன் ரூபா செல வில் இந்த அனல்மின் நிலையம் அமைக் கப்பட்டு 10.08.97 ல் ஜனாதிபதியால் திறந்து வைக்கப்பட்டது.

குண்டுவெடிப்பால் அனல் மின் நிலைய செயற்பாடுகள் பாதிப்படையவில்லை. 400 முதல் 500 லீற்றர் வரையான டீசல் நாசமானது.

# பட்ட துன்பம் போதுமய்யா!

கொழும்பிலிருந்து யாழ் செல்ல தலை நகரில் தனியார் விமானம் இயங்கி வருவது தெரிந்ததே. சென்று திரும்பும் கட்டணமாக ரூபா 5500 அறவிடப்படுவதும் தெரிந்ததே.

நாளாந்தம் 75 பேருக்கு பயண அனுமதிகள் கிடைத்துவருகின்றன. இதற்கென 'டோக்கன்' முறை அறிமுகப்படுத்தப்பட்டு; மேற்படி விமான ஆசனப் பதிவு அலுவலகம் முன்பாக அதிகாலை 4 மணியிலிருந்து 300க்கு மேற்பட்ட பயணிகள் வரிசையில் காத்திருந்தபோதிலும், உண்மையில் 50 பேருக்கு மட்டுமே 'டோக்கன்' வழங்கப்பட்டு வருகின்றன.

மிகுதி 25 டோக்கன்களும் பின்கதவு வழி யாக கறுப்புச் சந்தையில் டோக்கன் ஒன்றுக்கு ரூபா 1000ற்கு விற்கப்பட்டு வருகின்றன.

அதைவிடக் கொடுமை ஆசனங்களை மீள்பதிவு செய்யப்போகிறவர்களும் டோக்கன் முறையால் அவதிப்பட்டு கறுப்புச் சந்தையில் வாங்க நேரிடுகிறதாம்.

ஆக மொத்தம் ரூபா 6500 செலவு செய்யவேண்டும் யாழ் பயணத்திற்கு.

சென்னை சென்று திரும்பிவர ஆகும் கட்டணம் ரூபா 11000 மட்டுமே. ■

# பதுங்கியிருந்து தாக்குதல்! புளொட்–ரெலோ மோதல்!

வவுனியாவில் புளொட் இயக்கத் தினரும், ரெலோ இயக்கத்தினரும் மோதிக் கொண்டனர். 17.11.97 அன்று இம் மோதல் சம்பவம் இடம்பெற்றது.

ரெலோ இயக்கத்தினர் தமது வாகனத் தில் சென்றபோது, பதுங்கியிருந்த புளொட் இயக்கத்தினர் தாக்குதல் நடத்தியதாக ரெலோ வட்டாரங்கள் கூறியுள்ளன. தாக்குதல் நடத்தப் பட்ட பகுதி புளொட் இயக்கத்தினரின் 'ஏரியா' என்பதால் தம்மால் பதில் தாக்குதல் நடத்த இயலவில்லை என்றும் ரெலோ வட்டாரங்கள் கூறியுள்ளன. ரெலோவின் வவுனியாப் பொறுப் பாளர் குகன் உட்பட இருவர் காயமடைந்தனர்.

புளொட் இயக்கத்தினர் தமது உறுப் பினர்களை தாக்கியதை அறிந்ததும், மகா இறம்பைக் குளத்தில் இருந்த தமது முகாமை விட்டு ரெலோ இயக்கத்தினர் வெளியேறினர். வவுனியாவில் உள்ள தமது பிரதான முகா முக்குச் சென்றுவிட்டனர்.

ரெலோர்வின் மகா இறம்பைக் குளமுகாம் புளொட் இயக்க முகாம்களுக்கு சமீபமாக இருந்தமையால்தான் ரெலோவினர் அம் முகாமைவிட்டு வாபசாகினர். அதனை யடுத்து மகா இறம்பைக்குள முகாம் புளொட் இயக்கத்தினரால் தீயிடப்பட்டது. பொது மக்கள்தான் ரெலோ முகாமைத் தாக்கினர் என்று புளொட் வட்டாரங்கள் கூறின.

தமது இயக்கப் பெயரை பயன்படுத்தி ரெலோ இயக்கத்தினர் நிதி வசூல் செய்ததை அடுத்தே மோதல் மூண்டதாக புளொட் கூறியிருக்கிறது.

வவுனியாவில் நிதி வசூல் விடயத்தில் இரு இயக்கங்களுக்கும் இடையே முறுகல் நிலை நீண்டகாலமாக இருந்து வந்தது.

# ஈ.பி.டி.பி. கொலை முயற்சி

## எம்.பி.யின் செயலாளர் புகார்

யாழ் மாவட்ட எம்.பியான இராமேஸ் வரனின் செயலாளர் குணசீலன்மீது ஈ.பி. டி.பி. இயக்கத்தினர் கொலை முயற்சியில் ஈடுபட்டதாக புகார் கூறப்பட்டுள்ளது.

கொழும்பில் பஸ் வண்டி ஒன்றில் பயணம் செய்து கொண்டிருந்த குணசீலனை, வாகனம் ஒன்றில் சென்ற ஈ.பி.டி.பி. இயக்கத்தினர் கண்டுள்ளனர். அதனை அடுத்து பஸ்ஸை வழிமறித்துள்ளனர்.

தன்னைக் கொல்ல வருகிறார்கள் என்று தெரிந்ததும் பஸ்ஸில் இருந்து இறங்கிய குணசீலன் தப்பியோடியுள்ளார். ஈ.பி.டி.பி. இயக்க உறுப்பினர்கள் அவரை துரத்திச் சென்றனராம். ஐ.தே.கட்சி தலைமையகமான ஸ்ரீகோத்தாவுக்குள் குணசீலன் ஓடிச்சென்று மறைந்து கொண்டாராம். பின்னர் பொலிசார் தலையிட்டு ஈ.பி.டி.பி. உறுப்பினர்களை கைதுசெய்தனர்.

கைதான ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் அன்றுமாலை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப் பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

தனது செயலாளரிடம் இருந்து பணம் கொள்ளையடிக்கப்பட்டதாக இராமேஸ்வரன் எம்.பி. பொலிசில் புகார் செய்துள்ளார். இது தொடர்பாக வழக்கு ஒன்றும் பதிவு செய்யப்பட்டுள்ளது. அப்புகாரை ஈ.பி.டி.பி. மறுத்துள்ளது.

ஈ.பி.டி.பி. தலைமை நிலையச் செய லாளர் ராஜு குண்டுவெடிப்பில் கொல்லப் பட்டது தொடர்பாக கைதாகி விடுதலையான வர் குணசீலன் என்பது குறிப்பிடத்தக்கது.

# கண்டதுண்டமாக வெட்டிக் கொலை!

## சிறுவனுக்குச் சித்திரவதை!

கடந்தவாரம் பதுளை- லுணுகலையி லுள்ள அடாவத்தைத் தோட்டத்தில் முப்பத் தைந்து வயதான மூன்று பிள்ளைகளின் தாயொருவர் காதகன் ஒருவனால் கண்ட துண்டமாக வெட்டிக் கொல்லப்பட்டார். சம்பவதினத்தன்று பாடசாலையில் வைத்துப் பருவமடைந்த தனது மகளை வீட்டிற்கு அழைத்துவந்துவிட்டு, அதற்கான சடங்கு ஏற்பாடுகளைக் கவனிக்கச் சென்று சற்று மாலையாகித் திரும்பும்போதே இந்தக் கொலைகாரன் இவரைக் கண்டதுண்டமாக வெட்டிக் கொன்றதாகக் கூறப்படுகிறது. இது விடயமாக பதுளைப் பொலிஸார் அயல் வீட்டுக்காரர் ஒருவனைக் கைது செய்துள்ளனர். கொல்லப்பட்ட பெண்ணின் கணவர் கொழும்பில் வேலை பார்த்து வருகிறாராம்.

இது ஒரு புறமிருக்க, பதுளை- லுணு கலையில் உள்ள மளிகைப் பொருள்கடையில் வேலைக்கு அமர்த்தப்பட்ட ஜலீல் எனப்படும் 11 வயதுச் சிறுவனை கடை முதலாளியும், அவரது மைத்துனரும் தினமும் அடித்துத் துன்புறுத்தி வருவதைச் சிறுவனின் ஓலக் குரல் மூலம் அறிந்து கொண்ட அயலவர்கள் லுணுகலைப் பொலிஸுக்குப் பலமுறை புகார் செய்தனராம். எனினும் பொலிஸார் இதைக் கவனியாது தட்டிக்கழித்து வந்தன ராம்.

கடைசியாக நடந்த சம்பவமொன்றின் போது சிறுவன் பலமாகத் தாக்கப்பட்டு உடலெல்லாம் புண்ணாகிய நிலையில் மயங்கி விழவே ஈரம் துவைந்த சாக்கு ஒன்றினால் மூடி வைத்தனராம். இதையறிந்துகொண்ட அயலவர்கள் லுணுகலைப் பொலிஸாருக்கு கடைசி அறிவித்தலாக "நீங்கள் இந்தச் சிறுவன் துன்புறுத்தப்படுவதைக் கவனியாது போனால் பதுளைப் பொலிஸுக்கு அறிவிப் போம்" என்றிருக்கின்றனர்.

இறுதியாகப் பொலிஸார் வந்து நினை விழந்த நிலையில் காணப்பட்ட சிறுவனை கையேற்று பொலிஸ் பாதுகாவலில் ஆஸ்பத் திரியில் அனுமதித்தனர். கடை உரிமை யாளரும் அவரது மைத்துனரும் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டபின் பிணையில் விடுதலையாகியுள்ளனர். சிறுவன் தற்சமயம் பண்டாரவளையில் சிகிச்சை பெற்று வருகிறான். ■

# மின்மாற்றிகள், கோபுரங்கள் தகர்ப்பு!

## இருளில் மூழ்கியுள்ளது மட்டக்களப்பு!

கடந்த ஒரு வார காலத்துள் கிழக்கில் வந்தாறு மூலை, கல்லடி, போரதீவு, களுதா வளை ஆகிய பகுதிகளில் இருந்த இரு மின்மாற்றிகள், பாரிய மின் கம்பிகளைத் தாங்கிச் செல்லும் 3 கோபுரங்கள் மற்றும் 12 மின் கம்பங்கள் ஆகியவற்றைப் புலிகள் இயக்கத்தினர் அழித்துவிட்டனர்.

இதனால் மட்டக்களப்பு மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகள் இருளில் மூழ்கியுள் ளன. அம்பாறை இங்கினியாகலையிலிருந்து கிடைக்கும் மின் விநியோகத்தையே புலிகள் இவ்விதம் அழித்து வருகின்றனர்.

ஹபறணை ஊடான மின் விநியோகத் தில் இதுவரை எதுவித தடங்கலும் ஏற்பட வில்லை.

கடந்த சில மாதங்களுக்கு முன் புலி களின் ஆளுகைக்குள் உள்ள பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கத் துரித நடவடிக்கை எடுத்ததின் மூலம் மாவட்டத்தில் அரச படை யினரின் கண்காணிப்பின் கீழ் உள்ள பகுதிகளில் தங்குதடையின்றி மின்சாரம் கிடைப்பதைப் புலிகள் இயக்கத்தினர், பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லாவுடன் சமரசத்திற்கு வந்திருந் தனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

சமீப சில நாட்களாக மின்சார விநியோ கத்தைப் புலிகள் இயக்கத்தினர் மீண்டும் தடைப்படுத்தி வருவதையிட்டுப் பிரதியமைச் சரும் புலிகள் இயக்கத்தினரும் தொடர்புகளை மேற்கொண்டு சீரான மின் விநியோகத்திற்கு மேலும் ஒரு உடன்பாடு கண்டுள்ளதாகக் கூறப்படுகிறது. புலிகளின் ஆளுகைக்குள் உள்ள பகுதிகள் அனைத்திற்கும் பூரணமாக மின்சாரம் கிடைக்க வழி செய்வதே அந்த ஏற்பாடு என்று கருதப்படுகிறது. ■

# இந்தோனேசியப் புகைமூட்டம்

நாட்டின் கிழக்கு மற்றும் தென்பகுதி களில் கடந்த வாரம் முதல் இருந்து வந்த மப்பும் மந்தாரமுமான வானிலை, இந்தோனே சியாவின் காட்டுத் தீயினால் பரவிய புகை மூட்டமே என்று வானிலை அவதானத் திணைக்களப் பணிப்பாளர் டாக்டர் மொகத் தாலா தெரிவித்துள்ளார்.

இந்தோனேசியாவின் சுமாத்திராவிலும் ஜாவாவிலும் தற்சமயமும் பற்றியெரிந்து கொண்டிருக்கும் தீயினால் ஏற்பட்ட புகை மூட்டம் 3000 கி.மீட்டர் தூரத்திற்கு அப் பாலுள்ள இலங்கைத் தீவை அடையாது என்று நம்பியிருந்த போதிலும் புருணேயில் ஏற்பட்ட சூறாவளியினால் புகை மூட்டம் திசை திரும்பி இலங்கைத் தீவை அடைந்து விட்டது. எனினும் இது பற்றிப் பெரிதாகக் கவலை கொள்ளத் தேவையில்லை. வடக்கு-கிழக்கு பருவப் பெயர்ச்சிக் காற்று தொடங்கிய தும் இப்புகை மூட்டம் முற்றாக மாறிவிடும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நாட்டின் கிழக்குப் பகுதியில் புகைமூட்டம் இருந்தவேளையில் சூரியன் முற்றாக மறைக் கப்பட்டு சூரியகிரகணம் ஏற்பட்டதைப்போன்று காட்சியளித்தது. இதனை பனி மூட்டம் என்று சிலர் தவறாக கருதியிருந்தனர். இந்தியாவிலும் இந்த புகை மூட்டம் ஏற்பட்டிருந்தது. ■



படிப்பகம்

www.padippakam.com

# சைவ சமய பாடப் பரீட்சை

## பற்றாக்குறையான வினாப்பத்திரங்கள்!

இவ்வாண்டு இடம்பெற்ற கொழும்பு விவேகானந்த சபையினரால் நடத்தப்பட்டு வரும் சைவசமய பாடப்பரீட்சையில் சில கவனக்குறைவுகள் நிகழ்ந்துள்ளதாகப் பரவலான முறைப்பாடுகள் எழுந்துள்ளன.


திருகோணமலை சாம்பல்தீவு தமிழ் மகா வித்தியாலயப் பரீட்சை மண்டபத்தில் 28 பரீட்சார்த்திகள் ஒன்பதாம் ஆண்டுப் பரீட்சை எழுத இருந்தபோதும், ஏழு வினாப்பத்திரங்கள் மட்டுமே அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

அங்கிருந்து ஒன்றரை மைல் தள்ளி அமைந்துள்ள ஆத்திமோட்டை தமிழ் வித்தியாலயப் பரீட்சை மண்டபத்துக்கும், சல்லி ஸ்ரீ அம்பாள் வித்தியாலயப் பரீட்சை மண்டபத்துக்கும் ஒன்பதாம் ஆண்டு வினாத்தாள்கள் ஒன்றுகூட அனுப்பப்படவில்லை. மாறாக ஆறாம் ஆண்டு வினாத்தாள்கள் தேவைக்கதிகமாக அனுப்பிவைக்கப்பட்டிருந்தன.

இவ்வாண்டு பாடசாலைப் பரீட்சை மேற்பார்வையாளர்களும் சாம்பல்தீவு தமிழ் மகா வித்தியாலயத்துக்கு வந்து ஒவ்வொரு வினாப்பத்திரங்களாகப் பெற்றுச் சென்று, தத்தம் பாடசாலைகளில் 9ம் ஆண்டுப் பரீட்சையை நடத்தி வைத்தனர். மொத்தத்தில் மூன்று பரீட்சை மண்டபங்களிலும் கரும்பலகையில் எழுதியும், வாயில் உரத்துச் சொல்லியும் பரீட்சை நடத்த வேண்டிய நிலையே ஏற்பட்டது.

பரீட்சை நடத்துவதில் அனுபவசாலிகளான விவேகானந்த சபையினர் பரீட்சார்த்திகளையும் மேற்பார்வையாளர்களையும் இவ்வாறு தவிக்க விடலாமா?

# பயங்கரமான கொலை




படித்துப் பாருங்கள் இந்த விளம்பரப் பலகையை. இப்படியான தமிழ் வார்த்தைகளை எங்காவது அறிந்தது உண்டா?

நுவரெலியாவில் உள்ள 'வோல்ட் என்ட்' என்னும் இடத்தில் உள்ள தேசியப் பூங்காவில் காணப்படும் விளம்பரப் பலகைதான் இது. மலையக-தமிழ்பேசும் தலைவர்கள் கண்களில்கூட இது படவில்லையா?

தமிழ் அமுலாக்கல்தான் நடக்கவில்லை. இது போன்ற பயங்கரமான தமிழ்க் கொலைகளையாவது நிறுத்தக் கூடாதா? இப்படித்தான் அமுல்படுத்துவது என்றால் தயவு செய்து நிறுத்திவிடுங்கள். 'பிச்சை வேண்டாம். நாயைப் பிடி'.

தகவல்:- சீலன்-தேவேந்தி.

# காணாமல் போன மோட்டார் சைக்கிள்

## திருட்டா? சுருட்டலா?

(திருமலை நிருபர்)

வடக்கு-கிழக்கு மாகாணசபைத் திணைக்களமொன்றின் மோட்டார் சைக்கிள் காணாமற்போயுள்ளதாக 'முரசு'க்கு நம்பகமான தகவல்கள் கூறுகின்றன.

திருகோணமலை வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்குச் சொந்தமான ஹொண்டா சிடி 125 ரகமான 124-8963 இலக்க மோட்டார் சைக்கிள் கடந்த டிசம்பர் முதல் காணாமற் போயுள்ளது.

இது சம்பந்தமாக திணைக்களம் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் விடயத்தை ஏன் மூடி மறைக்கிறது என்பதுதான் ஆச்சரியமாயுள்ளது என மாகாணசபை அதிகாரியொருவர் விசனம் தெரிவித்துள்ளார்.

உள்ளகக் கணக்காய்வாளர் திணைக்கள அதிகாரிகள் இவ்விடயம் சம்பந்தமாக சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகளுக்குச் சுட்டிக்காட்டியும், எவ்வித நடவடிக்கையும் இது வரை மேற்கொள்ளப்படவில்லை. பொலிஸில் கூட முறைப்பாடு எதுவும் செய்யப்படவில்லை.

போர்மன் ராஜேந்திரம் என்பவரே மோட்டார் சைக்கிள் உட்பட பல இயந்திர சாதனங்களுக்குப் பொறுப்பாக இருந்திருக்கிறார். இவர் தனது வயதெல்லை முடிந்ததன் பேரில் கடந்த வருடம் டிசம்பர் மாதத்துடன் ஓய்வு பெற்றுச் சென்றுள்ளார். அத்துடன் மேற்படி சைக்கிளும் காணாமற்போயுள்ளது.

உத்தியோகத்தரொருவர் ஓய்வுபெற்றுச் செல்லும்போதோ மாற்றலாகிச் செல்லும்போதோ அவர்வசமுள்ள திணைக்களப் பொருட்களை முறைப்படி பிறிதோர் உத்தியோகத்தரிடம் ஒப்படைத்து விட்டுச் செல்வதே திணைக்கள நடைமுறை.

ஆனால் ராஜேந்திரம் அவ்வாறு செய்யவில்லை என்பதோடு திணைக்கள அதிகாரிகளும் இவ்விடயத்தில் கரிசனை எடுக்கவில்லை.

விமானங்களே காணாமற்போகும் காலத்தில் மோட்டார் சைக்கிள் காணாமற் போனால் என்ன என்று அதிகாரிகள் நினைக்கிறார்களோ என்னவோ?

# படையினர் கைது!

'ஜயசிக்குறுய்' இராணுவ நடவடிக்கையில் காயமடைந்து, வவுனியா ஆஸ்பத்திரியில் சிகிச்சைப் பெற்று வரும் படையினருக்கு வழங்கப்பட்டிருந்த மருந்து மற்றும் பால்மா வகைகளைத் திருடியதாக படையினர் உட்பட 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மருந்து வகைகள், பால்மா, மாமைட், கோடியல் ஆகியவற்றைத் திருடி தலாவ என்னுமிடத்தில் ஒரு கடையில் விற்றதாக இவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இந்த 11 பேரில் இராணுவத்தினரும், ஆஸ்பத்திரி ஊழியர்களும் அடங்குவர்.

# விளக்குடன் கர்ப்பிணிகள்

மருத்துவமும், மருத்துவ கருவிகளும் முன்னேறிய இக்காலத்தில் யாழ் மக்கள் மட்டும் கற்காலத்தில்தான் உள்ளனர்.

வடமராட்சி கிழக்கு அம்பன் மத்திய மருந்தகத்திற்கு மண்ணெண்ணெய் வழங்கப்படாததால், அங்கு பிரசவத்திற்காகச் செல்லும் தாய்மார் தாம் எடுத்துச் செல்ல வேண்டிய பொருட்களுடன் மண்ணெண்ணெய், விளக்கு என்பவற்றையும் எடுத்துச் செல்கின்றனர்.

இங்கு கடமை புரியும் டாக்டர், பாதுகாப்பு அரணுக்கு உள்ளே வசிப்பதால் நேரகாலத்துடனேயே வீடு திரும்பி விடுவதாகவும். இதனால் இரவு நேரத்தில் பிரசவத்திற்காக அங்கு செல்வோர் அயலில் உள்ள தாதி ஒருவரின் வீட்டுக்குச் சென்று அவரை அழைத்து வர வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இம்மருத்துவமனையில் டாக்டர்கள், தாதிமார் தங்குவதற்கு தங்குமிட விடுதி நீண்டகாலமாகத் திருத்தப்படாமல் உள்ளது.

# பஸ் நிலைய அவலம்

(மன்னார் நிருபர்)

மன்னார் புதிய பஸ் நிலையம் மழை பெய்தால் நிரம்பி குளமாகிவிடுகிறது. இதனால் பஸ் ஏற வரும் பயணிகள் பலத்த சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

புதிய பஸ் நிலையப் பகுதி ஆண்டாண்டு காலமாக மழை காலங்களில் இவ்வாறே காட்சி தருகிறது. இப் பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்களுக்கும், வேறு தேவைகளுக்கும் பஸ் நிலைய வீதியினைப் பயன்படுத்த முடியாதுள்ளது.

பழைய பஸ் நிலையப் பகுதியும் தற்போது குன்றும் குழியுமாக காட்சி தருகின்றது. வாகனங்கள் செல்ல முடியாதளவுக்கு இப்பாதை படுமோசமாகவுள்ளது.

இதேவேளை தாராபுரப் பகுதியிலுள்ள தாராபுரம் தாழ்வுபாடு வீதியில் மதகு ஒன்று உடைந்து பல மாதங்களாகின்றன. இலகுவாக வெடித்துக் காணப்பட்ட இம் மதகினை, வீதி அபிவிருத்தித் திணைக்கள தொழிலாளர்கள் உடைத்து தகர்த்துள்ளனர். எனினும் புதியமதகு ஒன்று இதுவரை போடப்படவில்லை.

# சர்வாதிகாரச் சாகித்திய விழா!

இலக்கியத்திலும் குளறுபடி என்பதால் இதனை எம்மால் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியவில்லை. 'தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்' என்பதற்கிணங்க இதனை அறியத் தருகின்றோம்.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள ஆலையடிவேம்புப் பிரதேச செயலகப் பிரிவில் 1997.11.01ல் பிரதேசச் சாகித்தியவிழா நடாத்தப்பட்டது. இலக்கிய வாசனையே அற்ற சர்வாதிகாரப் பிரதேச செயலாளர் பொதுமக்களிடமிருந்து விழா சார்பாகப் பெரும் நிதியினை அறவீடு செய்தது மாத்திரமன்றி, கலாசார அமைச்சின் நிதியையும் சேர்த்துத் தான்தோன்றித்தனமாக விழாவினைக் 'கேலிக்' கூத்தாக்கினார். தானும் தனக்குவேண்டிய பிரமுகர்களையும் சேர்த்து ஒரு பிரதேசச் சாகித்திய விழாவினைப் 'பிறர் தேசச் சாகித்திய விழா' ஆக்கினார்.

இனிவரும் காலங்களில் இவ்விழாவினை நடாத்தும் ஏனைய பிரதேச செயலாளர்களும் இவ்வாறான களியாட்டமாக கொண்டாடாது அதனைச் சாகித்திய விழாவாகக் கொண்டாட வேண்டும்.

மாரிமுத்து யோகராஜன், அக்கரைப்பற்று.

# கஞ்சா மறைத்து வைத்து கப்பம் பறிப்பு!

(மட்டு நிருபர்)

லொறிகளுக்குள் சோதனையிடுவது போன்று பாசாங்கு செய்து உள்ளே கஞ்சா சுற்றிய பார்சலைப் போட்டு விட்டு, கள்ளத்தனமாகக் கொண்டுவரப்பட்ட கஞ்சாவைத் தாம் கண்டு பிடித்துவிட்டதாகக் கூறி மிரட்டிப் பணம் பறிக்கும் உத்தி சோதனைச் சாவடிகளில் இடம் பெறுவதாக லொறிக் காரர்கள் தெரிவிக்கிறார்கள்.

இத்தகைய இரு சம்பவங்கள் மட்டக்களப்பு-வாழைச்சேனையில் மீன் ஏற்றிச் சென்ற லொறிக்காரர்களுக்கு நேர்ந்ததாம். தாம் லொறிக்குள் வேண்டுமென்றே போட்டு விட்டு, கண்டு பிடித்ததாகக் கூறி, லொறிக் காரர்களை மிரட்டி ஒரு லொறிக்குத் தலா ஆயிரம் ரூபா விகிதம் பெறப்பட்டதாம்.

சோதனைச் சாவடிகளில் மயிரிழை தப்பினால் மரணம் என்ற நிலை தோன்றியிருப்பதை இது காட்டுகிறது.

# குடும்ப சேவை

மட்டக்களப்பு-முறக்கொட்டான் சேனையில் உள்ள படைமுகாமில் சபா நாயகம் எனும் தனிநபர் ஒருவர் அப்பகுதியில் படையினருடன் இணைந்து, தன்னிச்சையாகத் தான் நினைத்ததைச் சாதித்து வருவது குறித்து பலவாறான கண்டனங்கள் பொதுமக்கள் தரப்பிலிருந்து எழுந்துள்ளது ஒரு புறமிருக்க; தற்சமயம் அவரது இளைய சகோதரனும் அண்ணனின் பணியில் இறங்கியுள்ளதாக மக்கள் தெரிவிக்கிறார்கள்.

இருவரும் படைமுகாமில்- அங்கு படை நடவடிக்கைக்கு உதவி வருகின்றனராம்.

விளம்பரப் பகுதி


## தெய்வீக மருத்துவம்

சர்வதேச சமூக தெய்வீக சேவை

GOVT REGED NO. HA\04\BT\219

வாழ்க்கையில் கிரக மற்றும் வேறு தீவினைகளால், தீராத மனத்தாக்கம், தொழில், வெளிநாட்டுப் பிரயாணத்தடைகள், காதல், விவாகத்தடைகள், கணவன்-மனைவி சந்தோஷமின்மை, என்பவற்றிற்கும், வேண்டியவர்களைச் சேர்க்கவும், வேண்டாதவர்களையகற்றவும், வேறு எவ்வித பிரச்சனைகளானாலும் நீங்கி மகிழ்ச்சியாக வாழ இறைவனால் சித்தர்களுக்கு போதித்தருளப்பட்ட தெய்வீக மருந்துவத்தினால் நிவர்த்தியளித்து வருகின்றோம். காண்டவடிவமைப்பில் எதிர்கால வாழ்க்கைப் பலனையும் அறிந்து கொள்ளலாம்.

'ஆயுர்வேத மருத்துவர் பாலுசோதிடர்' நேரில் வரமுடியாதவர்கள், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சனைகளை எழுதினால் கடல் கடந்து உடன் பலன்தரும் தெய்வீக மருந்துப் பொருட்களை தபால்மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். தபால் செலவுகளை அனுப்புபவர்களின் விடயங்கள் முன்னுரிமை அடிப்படையில் கவனிக்கப்படும்.

| | |
|---|---|
| பாலுசோதிடர்-S.A.M.P. | BALUSOTHIDAR-S.A.M.P. |
| தெய்வீக சக்தி நிலையம் | THEYVIGASAKTHY CENTRE, |
| கல்லடி-அரசவிடுதி வீதி, | BATTICALOA (P.O.) |
| மட்டக்களப்பு. (P.O). | SRI LANKA. |

"வாழ்வினிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்" - "DISPEL DARKNESS IN LIFE LET LIGHT SHINE"

## மனோதத்துவ வைத்தியம் (GENERAL PSYCHOTHERAPHY)

வவுனியாவிலும் சந்திக்கலாம்

இளைஞர்களே! மனோதத்துவ சிகிச்சை மூலம் அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்குங்கள். உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் ஆறுமுகம் அவர்களை. இளம் சமுதாயத்தினர் மெலிந்து, கனவில் சக்தியிழந்து, ஞாபக மறதி, பயம், நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், பீதி, நித்திரையின்மை என்று தன்னம்பிக்கை இழக்கக் காரணமான தீய பழக்கங்கள் மனோதத்துவ சிகிச்சை அளித்து உடன் நிறுத்தி புத்துயிர் அளிக்கப்படும்.

### SEXUAL DISORDERS

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும், 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பதை 90 நிமிடத்தில், தான் வீரியம் உள்ள ஆண்மகனாகி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.

### வெளிநாட்டில் வசிப்போருக்கு

வெளிநாட்டில் இருப்பவர்கள் தங்களின் தாம்பத்திய குறைபாடுகளுக்கு விபரமான கடிதத் தொடர்பு கொண்டு மனோதத்துவ சிகிச்சையைப் பதிவு தபால் மூலம் பெற்றுச் சுகமாகலாம். (பதில் தவறாது பெற தபால் செலவுக்குப் பணம் அனுப்பவும்)

மனநிலை பாதிப்புக்கள்; மன நோய்கள் "ஹிஸ்டீரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளனர். மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம் பரோரியா, வெள்ளைபோதல், நீரிழிவு, கிரந்தி நோய்க்கும் குழந்தைப்பேறு இல்லாமைக்கும் தீர்க்க முடியாத வியாதிக்கும் மருந்து உண்டு, விடுமுறை நாட்களிலும் சந்திக்கலாம்.

கவனத்திற்கு! புதிய செல்டெல் No. 072-609388

**ஓட்டமாவடி டிசம்பர் 3, 4ம் திகதிகளில்**

Dr. முகைதீன் ஃபெஸ்பென்சரி, ஓட்டமாவடி. T.P. 065-57345

**கல்முனையில் டிசம்பர் 6, 7, 8, 9ம் திகதிகளில்**

T.M.M. பாமசியிலும் T.P. 065 - 29329

மற்றைய நாட்களில் Dr. P. Arumugam

No. 33. Tissa Weerasingam Sq.,

Boundary Road, Batticaloa விலும் சந்திக்கலாம்.

**வவுனியால் டிசம்பர் 14, 15, 16ம் திகதிகளில்**

வவுனியில் ஞான வைரவர் கோவில் வீதி, வன்னி INN இல் சந்திக்கலாம்

T.P. 024 - 22074 ல் முன்கூட்டியே பதிவு செய்யவும்.

**கொழும்பில் டிசம்பர் 21 முதல் 29 வரை**

DR. P. ARUMUGAM

AHAMED TOURIST INN

BANG BANG BUILDING No. 10, Reclamation Road,

(Entrance: Bankshall St, Opposite Renjanas) Colombo 11. T.P. 436383, 436390

கொழும்பு நாட்களில் மட்டும் செல்டெல் No. 072-609388

கொழும்பில் முன்கூட்டியே பதிவு செய்யவும்.


## 1வது பிறந்த நாள் வாழ்த்து



அட்டாளைச்சேனை 3ம் குறிச்சியைச் சேர்ந்த நியாஸ் தம்பதியினரின் செல்வப்புதல்வன் றுஷாட் அஹமட் தனது 1வது பிறந்தநாளை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார். (20.09.1997) இவரை அன்பு உம்மா, வாப்பா, (கட்டார்)மாமா, (கட்டார்) உம்மாவாப்பா, வாப்பாப்பா, வாப்பாஉம்மா, மற்றும் சித்தி உம்மாமார்கள், தங்கைமார், தம்பிமார்கள், மச்சான்மார்கள், மச்சாள்மார்கள், மாமிமார்கள், மாமாமார்கள், உம்மம்மா, உற்றார், உறவினர் நண்பர்கள் பல்கலையும் பெற்று வல்ல அல்லாஹ்வின் அருளால் நீடூழி வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.


## றெறாசோ ஷிப்ஸ் (TERRAZZO CHIPS)

★ கலர்பவுடர் (Pigments) (Holland, Germany)

★ வெள்ளை சீமெந்து (Asano)

ரூபா 9/- க்கு மேல்

றம்சன்ஸ்

443, பழைய சோனகத் தெரு.

கொழும்பு – 12.

தொலைபேசி – 431511, 434411

## UNION

யூனியன் மோட்டிஸ்

கதவு பூட்டுக்கள்

Single, Double, Night Latch & Sliding Locks, (English Origin)

றம்சன்ஸ்

443, பழைய சோனகத் தெரு.

கொழும்பு – 12.

தொலைபேசி – 431511, 434411

## மலையாள மாந்திரிகம்





மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச் சேவையில் ,கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது பிறந்த திகதி மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இதுதான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே. சாமி J.D.G.A.N&JP

ஸ்ரீ துர்கா தேவி மாந்திரிக உச்சாடப்பீடம்

இல. 162, கொட்டாஞ்சேனை வீதி, மே பீல்ட் ரோட், கொழும்பு-13

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி Fax-00941342464 Tel-00941431137.

உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்- 342463-344831

## ரிஷி அஜமாமிச லேகியம்

(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 225/=,125/=

தங்க பஸ்பம் கலந்தது 1025/=

வெள்ளி பஸ்பம் கலந்தது 925/=

ஞான சுந்தர வைத்தியசாலை

187, செட்டியார் தெரு, கொழும்பு 11, போன்: 421398

## சித்தர் மாந்திரீகம்

அதிஷ்ட கரமான வாழ்க்கை அமைய வேண்டுமா? காதல் விவகாரம் கைகூட வேண்டுமா? தொழில் சிறந்திட வேண்டுமா? இல்லற வாழ்வு இனித்திட வேண்டுமா? இவ்விதமாக உங்கள் பிரச்சனைகள் எதுவாயினும் உடனடியாக பூரணவெற்றி பெற்றிட ஒருதடவை மட்டக்களப்பு கோளாவில் மணி மாந்திரீகச் சித்தர் "சக்திசரவணா"வுடன் தொடர்பு கொள்ளுங்கள். சங்கடங்கள் தீர சக்தி சரவணாவை நாடுங்கள். சோதிட ரீதியாக உத்தரவாதமான எதிர்காலப்பலன்கள் எம்மிடம் அறியலாம். வெளிநாட்டு அன்பர்களுக்கான சிறந்த துரித விசேட சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. உங்கள் வெற்றியும், திருப்தியும் எமது குறிக்கோளாகும்.

1ந் திகதி முதல் 20ந் திகதி வரை தொடர்பு

SHAKTHY SARAVANA, 8/2, SRI SIDDARTHA ROAD, KIRILAPONE, COLOMBO-5. TELE PHONE: 823465. (பொலிஸ் நிலைய எதிரில்)

21ந் திகதி முதல் 30ந் திகதி வரை தொடர்பு

SHAKTHY SARAVANA, 82, MANIKKAVASAGAR ROAD, TRINCOMALEE. TELE PHONE: 026-20347

வியாழன் விடுமுறை

## காண்டம்

முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை

ரிஷி. S.மணி

மூலம் அறிய வாருங்கள் வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

S. MANI

144 2/1, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு - 6.

T.P. 586218




படிப்பகம்

# மக்நெற் குண்டுகளும் உளவியல் போரும்

## நாள் ஒன்று; தாக்குதல் இரண்டு

எக்ஸ்ரே ரிப்போர்ட்

நாரதர்



கடந்த மாத போயா தினத்தில்தான் கொழும்பு கலதாரி ஹொட்டலில் குண்டுத் தாக்குதல் இடம்பெற்றது.

இந்த மாதம் போயா தினத்திலும் களனிதிஸ்ஸ மின் நிலையத்தில் குண்டுகள் அடுத்தடுத்து வெடித்த சத்தம்தான் கொழும்பை துயில் எழுப்பியது.

கலதாரி ஹொட்டல் தாக்குதலுக்கு போயா தினத்தை தெரிவு செய்தமைக்கு காரணம் இருக்கிறது. பொதுமக்களின் இழப்பைத் தவிர்க்க, சன நடமாட்டம் குறைவான நாளாகத் தெரிவு செய்தனர்.

களனிதிஸ்ஸ மின் நிலையக் குண்டு வெடிப்புக்கு போயா தினத்தை தெரிவு செய்தது ஏன்? உள்ளேயே, அதுவும் அதிகாலை நேரத்தில் திட்டமிடப்பட்ட தாக்குதல் என்பதால், சன நடமாட்டம் இல்லாத நாளாக தெரிவு செய்ய வேண்டியதில்லை.

அப்படியானால் வேறு என்ன காரணம்?

**குறிப்பிட்ட ஒரு தினத்தை தெரிவு செய்து, அதே தினத்தில் தொடர்ச்சியாக சில தாக்குதல்களை நடத்துவது ஒரு விதமான உளவியல் போர் முறையாகும்.**

இனிமேல், போயா தினம் என்றாலே முப்படையினரும் தலைநகரில் உஷார் நிலையில் இருக்க வேண்டியிருக்கும். கேந்திர முக்கியத்துவம் உள்ள இடங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருக்கும். சோதனைகள், வீதித்தடைகள் என்று படையினர் பெருமளவாக பணியில் ஈடுபடுத்தப்படுவர்.

தலைநகரப் படையினருக்கு, குறிப்பாக அதிகாரிகளுக்கு போயாதினம் விடுமுறை நாள். 'அப்பாடா' என்று நிம்மதியாக அந்த நாளை கழிக்கவும், குடும்பத்தினருடன் செலவழிக்கவும் விரும்புவர். அந்த வாய்ப்பையும் கெடுத்து ஒருவிதமான பதற்றத்தை அவர்கள் மனதில் ஏற்படுத்தி விடுகிறது போயா குண்டு வெடிப்புக்கள்.

எந்த மனிதனுமே தொடர்ந்து டென்ஷனுடன் இருந்தால் தெளிவாக சிந்திக்கும், திட்டமிடும் தன்மையை இழந்து விடுகிறான்.

வடக்கு-கிழக்கில் யுத்தத்தை நடத்திக் கொண்டும், தங்கள் பிரதான தளப் பிரதேசமான வன்னியில் பாரிய படையெடுப்பை நடத்திக் கொண்டும், தலை நகரில் படை உயரதிகாரிகளும், அரச தரப்பினரும் நிம்மதியாக இருக்கக்கூடாது என்பதுதான் புலிகளின் திட்டம்.

**பொருளாதார ரீதியாக நஷ்டம் ஏற்படுத்துவதுடன், உளவியல் ரீதியாகவும் தலைநகரையும், உயர் மட்டத்தினரையும் ஆட்டிப் படைப்பதுதான் புலிகளின் போயா தினத் தொடர் தாக்குதலின் நோக்கம்.**

இரண்டு தாக்குதல் அல்லது மூன்று தாக்குதல்களை ஒரு குறிப்பிட்ட தினத்தில் அடுத்தடுத்து மேற்கொண்டுவிட்டு நிறுத்தி விடுவர். பின்னர் அத் தினம் வரும்போது பாதுகாப்பு தரப்பினர் உஷாராக, பரபரப்பாக இருப்பர். ஆனால் தாக்குதல் எதுவும் இடம்பெறமாட்டாது. இதுதான் உளவியல் போர் உத்தி.

அடுத்துவரும் போயா தினத்தில் புலிகள் தாக்குதல் நடத்துகிறார்களோ, இல்லையோ கொழும்பில் பாதுகாப்புத் தரப்பினர் மத்தியில் பதட்டம் தொற்றிக் கொள்ளும். புரளிகள்கூட பரவக்கூடும்.

மாவீரர் தினங்களில் தாக்குதல்கள் நடத்துவதை புலிகள் வழக்கமாகக் கொண்டிருந்தனர். அதனால் மாவீரர் தினம் என்றாலே படை முகாம்களின் பாதுகாப்பு, தலைநகரப் பாதுகாப்பு என்பன உஷார்படுத்தப்பட்டிருக்கும்.

**மாவீரர் தின வாரத்தில் பாதுகாப்புப் படையினர் தாக்குதல்களை எதிர்பார்த்து தயார் நிலையில் இருப்பர். கடந்த வருடமும் அவ்வாறுதான் படையினர் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். ஆனால் மாவீரர்தினம் முடியும்வரை புலிகள் எங்குமே தாக்குதல் நடத்தவில்லை.**

கரும்புலிகள் தினம், தீலிபன் நினைவு தினம், மாவீரர் தினம், புலிகளுக்கு அதிஷ்ட நாட்கள் என்று படைத்தரப்பிடம் ஒரு பட்டியலே இருக்கிறது. அந்த நாட்கள், வாரங்களில் முழு உஷார் நிலைதான். இனிமேல் போயா தினங்களையும் அதனுடன் சேர்த்துக்கொள்ளலாம்.

**தாக்குதலை சந்திப்பதைவிட, தாக்குதல் நடக்கக்கூடும் என்று எதிர்பார்த்து காத்திருப்பதும், ஏமாற்றம் ஏற்படுவதும்தான் உளவியல் ரீதியாக தாக்கம் கொடுக்கக் கூடியவை.**

களனிதிஸ்ஸ மின் நிலையக் குண்டு வெடிப்புச் சம்பவம் இரண்டு வகையில் முக்கியத்துவம் பெறுகிறது.

**1) மிகப் பாதுகாப்பான வளாகத்திற்குள் சத்தமில்லாமல் புகுந்ததும், வெளியேறியதும்.**

**2) 'மக்நெற் ரைம்பொம்' என்றழைக்கப் படும் குண்டுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இலங்கையில் இக் குண்டுகள் பயன்படுத்தப் பட்டது இதுதான் முதற் தடவை.**

வழக்கம்போல குண்டுவெடிப்பின் பின்னர் சில சந்தேகங்கள் எழுப்பப்பட்டன.

**இது புலிகளின் வேலையா? உட்சதியா?**

பாவிக்கப்பட்ட குண்டுகள் உட்சதி என்ற சந்தேகத்துக்கு முற்றுப்புள்ளி வைத்திருக்கின்றன. குறிப்பிட்ட குண்டுகள் இலங்கைப் படையினரால்கூட இதுவரை பயன்படுத்தப்பட்டதில்லை. சுலபமாக உள்ளூரில் தயாரிக்கவும் முடியாதவை.

உட்சதி செய்ய வேண்டுமானால் ஆளும் கட்சிக்கு எதிரான அணியினர்தான் பின்னணியில் நிற்கவேண்டும்.

**கிட்டத்தட்ட 50 பொலிசாரும், பாதுகாப்பு ஊழியர்களும் பணியில் உள்ள இடத்தில் நான்கு தாங்கிகளில் குண்டைப் பொருத்தி விட்டுச் செல்வது என்றால், உயிரைப் பணயமாக வைத்து செயலில் இறங்கும் துணிச்சல் வேண்டும்.**

பாதுகாப்புக் கடமையில் உள்ள அனைவரையும் விலைக்கு வாங்க முடியாது. எந்த உட்சதி என்றாலும் இரண்டு மூன்று பேருக்கு மேற்படாத ஆட்களைத்தான் உள்ளிருந்து வாங்கிப் பயன்படுத்தலாமே தவிர, பலரைப் பயன்படுத்தினால் விஷயம் அம்பலமாகிவிடும்.

எனவே, இரண்டு மூன்றுபேர் உள்ளிருந்தே வித்தை காட்டுவதாக இருந்தாலும்கூட, ஏனைய பொலிசாரோ, பாதுகாப்பு உத்தியோகத்தர்களோ தற்செயலாக கண்டுவிட்டால் சுட்டுவிடுவார்கள். அல்லது மடக்கிப் பிடித்து விடுவார்கள். அப்படி பிடிக்கப்பட்டால் பின்னணியில் நிற்போர் யார் என்பதும் தெரிந்து விடும்.

அதிகூடிய பாதுகாப்பான பகுதி என்பதால், புலிகள் எப்படி உள்ளே நுழைந்தனர் என்பதும் சந்தேகத்துக்கு மற்றொரு காரணம்.

1985ம் ஆண்டில் கொழும்பில் பல குண்டு வெடிப்புக்களை நடத்தியது ஈரோஸ். அதனால் தலைநகரில் பாதுகாப்புக்கள் பலப்படுத்தப் பட்டிருந்தன.

அவ்வாறு இருந்தும்கூட 29.04.85 அன்று கொழும்பு இராணுவ தலைமையகத்திற்குள்ளேயே குண்டு வெடிப்பு நடந்தது. பலத்த பாதுகாப்பு, கண்காணிப்பு மத்தியில் குண்டுப் பார்சல் எப்படி உள்ளே வந்தது? என்று ஆச்சரியம் எழுந்தது.

உள்வீட்டு வேலையோ? என்றும் சந்தேகிக்கப்பட்டது.

**நடந்தது என்ன தெரியுமா? அன்று விருந்து கொண்டாட்டம் ஒன்றில் பாதுகாப்பு படையினரின் கவனம் திசை மாறியிருந்தது. பழைய பேப்பர் பொறுக்குவதுபோல நடமாடிய ஈரோஸ் உறுப்பினர்கள் இருவர் எப்படியோ உள்ளே நழுவிப் போனார்கள். குண்டுப் பார்சலை வைத்துவிட்டு திரும்பிச் சென்று விட்டார்கள்.**

24 மணிநேரமும் தாக்குதல் பற்றிய சிந்தனையிலேயே இருக்கும் கெரில்லாக்களுக்கு பாதுகாப்பு ஓட்டைகள் பற்றி அறிந்துகொள்வது கடினமல்ல.

உயிரைப் பணயம் வைத்து முயற்சியில் இறங்குவதால், தாக்குதலுக்கு 50 வீதம் சாத்தியம் இருந்தால்கூட நடவடிக்கையில் இறங்கி விடுகின்றனர். மாட்டினால் சாவு. காரியம் முடிந்தால் வெற்றி.

களனிதிஸ்ஸ அனல் மின் நிலையத்துக்கும், உலக வர்த்தக மையத்துக்கும் இடையே ஒரு தொடர்பு இருக்கிறது.

இரண்டுமே ஜனாதிபதி சந்திரிக்காவினால் தான் திறந்த வைக்கப்பட்டன.

10.08.97 ஞாயிற்றுக்கிழமைதான் இந்த அனல்மின் நிலையத்தை ஜனாதிபதி அவர்களும், பிரதிபாதுகாப்பு அமைச்சரும் திறந்து வைத்தனர்.

மூன்று மாதங்களின் பின்னர் உள்ளே புகுந்தனர். குண்டுகள் வெடித்தது 14.11.97 அதிகாலையில். புலிகள் உள்ளே புகுந்தது 13.11.97 அன்று வியாழன் இரவு.

குண்டுவெடிப்பு நடைபெற்ற பின்னர் குறிப்பிட்ட பகுதியை சுற்றிவளைத்து தேடுதல் நடத்துவது படையினரின் அணுகுமுறை என்பது தெரிந்ததுதான்.

அதனைக் கருத்தில் கொண்டு, குறிப்பிட்ட பிரதேசத்தை விட்டு தாம் வெளியேறிய பின்னர் குண்டு வெடிக்கக்கூடிய வகையில் குண்டில் நேரத்தை அமைத்திருக்கின்றனர்.

கொழும்பு கலதாரி குண்டு வெடிப்பின் போது புலிகள் பலியானதை படைத்தரப்பினர் பெரிதாக பிரசாரம் செய்தனர். இம்முறை தம்மில் எவருக்குமே இழப்பில்லாமல் ஒரு குண்டுத் தாக்குதலை நடத்திக் காட்டுவதுதான் புலிகளின் திட்டம்.

புலிகளின் திட்டத்துக்கு காலநிலையும் கைகொடுத்திருக்கிறது. 13.11.97 வியாழக்கிழமை மாலை 6 மணிமுதல் களனிதிஸ்ஸ மின் நிலையப் பகுதிகளில் அடைமழை பொழியத் தொடங்கியது.

அந்த மழையோடு மழையாக சந்தர்ப்பத்தை தவறவிடாமல் செயலில் இறங்கினர் புலிகள்.

மின் நிலையத்துக்கு சமீபமாக உள்ள இரயில் தண்டவாளத்தை ஒட்டியதாக கம்பி வேலி போடப்பட்டிருந்தது. வெளிப்பக்கத்தில் முற்கம்பி சுருள் வேலியும் அதனை அடுத்ததாக வலைப்பின்னல் போன்ற தடித்த கம்பி வேலியும் அமைந்திருந்தன. இரண்டையும் வெட்டித்தான் உள்ளே புகுந்தனர்.

குறைந்தது மூன்றுபேர், அதிதுரித கொமாண்டோ தாக்குதலில் தேர்ச்சி பெற்ற புலிகள்தான் குண்டுகளைப் பொருத்த அனுப்பட்டனர் என்று தெரிகிறது.

அடைமழைக் குளிர் காரணமாக பாதுகாப்புக் கடமையில் இருந்தவர்களின் கண்காணிப்பு தளர்ந்திருந்தது. அது புலிகளுக்கு வசதியாகி விட்டது. இரண்டு உயரமான காவற் கோபுரங்கள் இருந்தன. மழைக் குளிர் காரணமாக காவலர் யாரும் இருக்கவில்லை என்று தெரிகிறது.

மளமளவென்று நான்கு எண்ணெய்த் தாங்கிகளிலும் குண்டுகள் ஒட்டவைக்கப்பட்டன. நின்று தாமதிக்கவே தேவையில்லை. சட்டென்று ஒட்டவைத்துவிடலாம் என்பதுதான் மெக்நெட் டைம்பாமில் உள்ள சாதகம்.

காரியம் முடிந்ததும் இரவோடு இரவாக வந்த வழியே புலிகள் வெளியேறிவிட்டனர். இரவு 10 மணிக்கு முன்னரே குறிப்பிட்ட பிரதேசத்தை விட்டு புலிக் கொமாண்டோக்கள் வெளியேறியிருக்கவேண்டும்.

**பார்சல் குண்டு, அல்லது வாகனக் குண்டுகளையே எதிர்பார்ப்பதால், தாங்கிகளோடு ஒட்டியிருக்கும் குண்டுகள் யார் கண்ணிலும் படாது, பட்டாலும் சந்தேகம் தராது என்பது எதிர்பார்க்கக்கூடியதே.**

வெளிநாடுகளில் அதி நவீன கொமாண்டோ தாக்குதலில் பயன்படுபவைதான் மக்நெற் ரைம் குண்டுகள். ஒரு வீட்டுக்குள் கெரில்லாக்கள் இருக்கிறார்கள். கதவை உடைத்து திறக்க வேண்டும். சட்டென்று கதவை நெருங்கி மக்நெற் குண்டை கதவில் பொருத்திவிட்டு பாய்ந்து சென்று தரையோடு தரையாக படுத்திருக்க, கதவு வெடித்துத் தகரும். பாய்ந்து உள்ளே புகுவர் கொமாண்டோக்கள்.

கெரில்லாக்களையும், தீவிரவாதிகளையும் தாக்குவதற்காகவும், மடக்குவதற்காகவும் வெளிநாட்டில் கொமாண்டோ படையினர் பயன்படுத்தும் மக்நெற் குண்டுகள் தற்போது தீவிரவாதிகளிடமே தாராளமாகப் புழங்குகின்றன.

வாகனங்களில் ஒட்டிவிட்டு செல்வது, கதவுகளில் ஒட்டிவிட்டு போவது போன்ற பலதாக்குதல்களை வெளிநாடுகளில் செய்கின்றனர்.

ஆனால் இப்போதுதான் புலிகள் 'மக்நெற் ரைம்பொம்மை' முதல் முதலில் பயன்படுத்தி உள்ளனர். குண்டின் அடிப்பாகத்தில் காந்தம் இருக்கும். அது போய் ஒட்டிக் கொள்ளும். 'மக்நெற்' என்றால் காந்தம். அதனால் 'மக்நெற்றிக் ரைம்பொம்' என்றும் இதனை அழைக்கிறார்கள்.

சாந்த விசையால் இயங்கும் குண்டு என்று அர்த்தமல்ல. குண்டின் அடிப்பாகத்தில் காந்த வளையம் போடப்பட்டிருக்கும்.

புலிகள் சொந்தமாக தயாரித்ததாகத் தெரியவில்லை. குண்டின் நேர்த்தியைப் பார்க்கும்போது வெளிநாட்டில் இருந்து தருவித்துள்ளனர் என்றே தெரிகிறது.

**முதன் முதலாக 'மக்நெற் ரைம்பொம்'மை பயன்படுத்தி புலிகள் நடத்திப் பார்த்த பரீட்சார்த்த தாக்குதல்தான் இது.**

பத்துக் குண்டுகள் பொருத்தப்பட்டன. இரண்டு வெடிக்கவில்லை. நாலு தாங்கிகளில் மூன்றுதான் வெடித்தது. டீசல் தாங்கிகள் என்பதால் விரைவாகத் தீ பரவவில்லை. அதுவே பெற்றோல் தாங்கிகளாக இருந்திருந்தால் தீ சுவாலைவிட்டுப் பரவியிருக்கும்.

தீ பரவாமல் தடுத்துவிட்டதை கூறி, புலிகளின் திட்டம் தோல்வி என்று பாதுகாப்புத் தரப்பினர் கூறுகின்றனர்.

**ஆனால் மிகப் பாதுகாப்பான பகுதிக்குள் புகுந்தது மட்டுமல்லாமல், குண்டுகளைப் பொருத்திவிட்டு இழப்பே இல்லாமல் திரும்பிச் சென்றுள்ளனர். நஷ்டத்தின் அளவைவிட தாக்குதல் நடத்தப்பட்ட முறையும், இடமும் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு விடப்பட்ட பாரிய சவாலாகவே அமைந்துள்ளன.**

பொலிசார் நால்வரும், பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரும் கைதாகியுள்ளனர். அச் செய்தி வெளியானதும், அவர்களும் உடந்தையாக இருந்திருப்பார்களோ என்ற சந்தேகமும் ஏற்பட்டுவிட்டது.

உண்மையில் அவர்களுக்கு ஒரு தொடர்பும் கிடையாது. பாதுகாப்புப் பணியில் காட்டிய அலட்சியம் காரணமாகத்தான் மாட்டுப்பட்டுள்ளனர். ஏனைய கேந்திர நிலைகளில் உள்ள பாதுகாப்பு ஊழியர்களுக்கும் ஒரு எச்சரிக்கையாக இருக்கட்டும் என்று எடுக்கப்பட்ட நடவடிக்கை அது.

ஒரே தினத்தில் இரண்டு தாக்குதல்களை புலிகள் நடத்தியும் கூட, ஒரு தாக்குதலை மெல்ல மறைத்துவிட்டது பாதுகாப்புத் தரப்பு.

பதுளையில் மின்மாற்றிகள் மூன்று குண்டுவெடித்து தகர்ந்தன.

**களனிதிஸ்ஸ அனல்மின் நிலையத்தில் குண்டுகள் வெடித்த அதேதினத்தில், கிட்டத்தட்ட அதே நேரத்தில் பதுளையிலும் குண்டுகள் வெடித்தன.**

அதுவும் புலிகளின் வேலை என்று கூறினால் நாட்டின் பாதுகாப்பு நிலைபற்றி பலத்த கேள்வி எழும் என்பதால், பெரிதுபடுத்தாமல் விட்டுள்ளனர்.

அது புலிகளின் வேலையல்ல என்று ஒரு பொலிஸ் அதிகாரி கூறியுமிருந்தார். இதெல்லாம் வெளியே கூறப்பட்ட செய்திகள் தான்.

ஆனால் குண்டுவெடிப்பு நடந்த பின்னர் பதுளை தோட்டப்பகுதிகளில் புலிகள் பதுங்கி இருப்பதாகக் கருதி பலத்த தேடுதல்கள் நடைபெற்றுள்ளன.

அங்கும் பாதுகாப்பு கடமையில் இருந்த சிலர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

பதுளை மலையகப் பகுதியில் இருப்பதால், அங்கு புலிகள் தாக்குதல் நடத்தியிருக்க முடியாது என்றுதான் பொதுவாக நினைப்புத் தோன்றும். அது மகா தவறு.

**புலிகளின் கட்டுப்பாட்டில் இருப்பது மட்டக்களப்பு வெல்லாவெளி. அங்குதான் புலிகளின் கிழக்கு தலைமையகமும் உள்ளது. அங்கிருந்து அம்பாறை கண்டி வீதிக்கு சென்றால் 2 மணி நேர வாகன ஓட்டத்தில் பதுளையை சென்றடையலாம்.**

மட்டக்களப்பு பதுளை வீதி இரவு நேரத்தில் படையினரால் தடை செய்யப்பட்டிருக்கும். ஆனால் அம்பாறை கண்டி வீதியில் விசேஷ அதிரடிப்படையினர்தான் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருப்பர். மாலையானதும் அவர்கள் சென்று விடுவர். அதன்பின்னர் மறுநாள் காலைவரை அம்பாறை கண்டி வீதி புலிகளின் கட்டுப்பாட்டில்தான் இருப்பது வழக்கம்.

பதுளைவரை மிகச் சுலபமாக தங்கள் வாகனங்களில் புலிகள் வந்து செல்லலாம். இடையே சோதனை அரணோ, வேறு தடைகளோ கிடையாது.

மின்மாற்றிகளுக்கு நேரக் குண்டுகளை வைத்துவிட்டு புலிகள் புறப்பட்டு சென்றுவிட்டனர். அதன்பின்னரே குண்டுகள் வெடித்துள்ளன.

அம்பாறையிலும் சமீபவாரங்களில் புலிகளின் தாக்குதல்கள் தீவிரமாகியுள்ளன. வெல்லாவெளிக்கு அடுத்துள்ள பகுதி கல்லோயா சரணாலயம். அதற்குள் சென்றுவிட்டால் யால காட்டுப் பகுதி மற்றும் கதிர்காமம் வரை புலிகள் வந்து செல்லலாம்.

**அதுபோல அம்பாறை கண்டி வீதியூடாக பதுளைக்கு சென்றுவரலாம். ஏற்கனவே கதிர்காமத்தில் புலிகள் தாக்குதல் நடத்தியிருந்தனர். தற்போது பதுளையில் மின்மாற்றிகளை தகர்த்துள்ளனர்.**

மின்சார அமைச்சராகவும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரே பொறுப்பு வகிப்பதால் மின்சார நிலையம்மீதும், மின்மாற்றிகள்மீதும் ஒரே நேரத்தில் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

மட்டக்களப்பிலும் தொடர்ச்சியாக மின்மாற்றிகள் புலிகளால் தாக்கப்பட்டு வருகின்றன. அதே மட்டக்களப்பு தலைமைதான் பதுளையிலும் மின்மாற்றிகளை தகர்க்க உத்தரவிட்டுள்ளது.

கொழும்பிலும், பதுளையிலும் ஒரேநேரத்தில் தாக்குதல் நடத்தப்பட்டமை இன்னொரு விடயத்தையும் கோடிட்டுக் காட்டுகிறது.

கொழும்பில் செயற்படும் புலிகளின் அணிக்கும், மட்டக்களப்பு அணிக்கும்



இடையே தொடர்புகள் உள்ளன. கொழும்பு கலதாரி குண்டுவெடிப்புக்கு பயன்பட்ட லொறியும் மட்டக்களப்பிலிருந்து புலிகளின் அணியூடாகவே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

**மொத்தத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு ஏற்ப தங்கள் வழித்தடங்களையும், தொடர்பு வழிகளையும், செயற்பாட்டு மையங்களையும் புலிகள் மாற்றிக் கொள்கிறார்கள் என்று தெரிகிறது.**

எனவே தலைநகர அபாயம் தொடர்கிறது. புலனாய்வுத் தகவல்கள், புலிகள் இயக்க உறுப்பினர்கள் பற்றிய பதிவு செய்யப்பட்ட விபரங்கள் இல்லாமல் வகை தொகையற்ற கைதுகள் மூலம் புலிகளின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவது இயலாத ஒன்று.

அதுதவிர 'மக்நெற் குண்டுகள்' புலிகளின் பாவனைக்கு வந்துள்ளமையும் பெரும் அச்சுறுத்தல்தான். பார்சல் குண்டு என்றால்கூட தெரிந்துவிடும். ஆனால் காற்சட்டை பொக்கற்றுக்குள் கொண்டுவந்து, வீதியில் நிறுத்தப்பட்டுள்ள வாகனத்தின் கீழ்ப்பக்கத்தில் மக்நெற் குண்டை பொருத்திவிட்டுப் போய்விடலாம். நுணுக்கமாக ஆராய்ந்தால்தான் கண்டுபிடிக்கலாம். அதுதவிர இனிமேல் வி.ஐ.பி.க்கள் தங்கள் வாகனங்களில் ஏறுவதற்கு முன்னர் குண்டுகள் பொருத்தப்பட்டுள்ளதா என்று அலசி ஆராய வேண்டியும் இருக்கும்.

உளவியல் போருக்கு உதவியாக மக்நெற் குண்டுகளின் பாவனையை புலிகள் அதிகரிக்கும் அபாயம் தோன்றியுள்ளது.

## அதிரடி அய்யாத்துரை



**மின்சார நிலைய** குண்டு வெடிப்புச் சத்தம் கேட்டு கடுகதி வேகத்தில் சென்ற நிருபர் ஒருவரை தடுத்து வைத்தனர் படையினர். நிருபருக்கு கடுங்கோபம். அடையாள அட்டையைக் காட்டியும் சந்தேகம் ஏன்? எண்டு சுடச்சுடப் பேட்டி கொடுத்தார். கடைசியாக அவர் போட்டபோடு இது. "கொட்டியா லேசாக உள்ளே வந்து போகுது. எங்களைத்தான் உள்ளே போக விடுகிறார்கள் இல்லை."

**தலைநகர தனியார்** வானொலி ஆராயாமல் அவசரப்பட்டுத் தகவல்களை சொல்கிறது. பின்னர் அதற்காக வருத்தம் தெரிவிப்பதும் கிடையாது. சுடச்சுட செய்திகளை கொடுப்பதில் போட்டி இருக்க வேணும்தான், அதுக்காக பொய் கலக்கலாமோ? அரச வானொலி உண்மைகளை சொல்லத் தொடங்கினால்தான், புரளிகள் கிளம்பாமல் தடுக்கலாம். இப்ப அரச வானொலி உண்மையைச் சொன்னால்கூட சனம் நம்புறமாதிரித் தெரியேல்லை. பேர் கெட்டுப் போச்சு. யார் ரிப்பேர் பண்ணுறது?

**தலைநகர சூப்பர் மார்க்கெட்டில்** செந்தமிழ் செப்புவோரை தனியாக பிரித்து எடுத்து அள்ளிக்கொண்டு போனவையாம். கொட்டஹேனா பகுதியிலும் கொத்துக் கொத்தாக பிடிச்சுக்கொண்டு போனவை. இது நடந்தது இரவு. குண்டு வெடிச்சது மறுநாள் அதிகாலை! அப்ப என்ன அர்த்தம்? ரெண்டு எழுத்தாரை பிடிக்க உந்த மெதேர்ட் சரிப்படாது எண்டுதானே அர்த்தம்! கொத்துக் கொத்தாய் அள்ளிக்கொண்டு போனால் விசாரிச்சு முடிக்கவும் இயலாதல்லவோ, உது தமிழ்ச் சனத்தை 'ராக்கிங்' பண்ணுற மாதிரித்தான் முடியுது.

**தீர்வு யோசனைக்கும்** எனக்கும் 'நோ கனெக்ஷன்' என்று நீலமானவர் சொல்லிக்கொண்டிருந்தார். இப்போது பச்சைக் கட்சி ஒத்துழைக்க வேணும் எண்டு பகிரங்க கூவல் விடுத்துள்ளார். எதுக்கு ஒத்துழைக்கக் கோருகிறார். பிரிப்புக்கோ? இன்னொரு ஜோக் என்ன தெரியுமோ? நீலமானவருக்கு வேண்டப்பட்ட விமர்சகர் ஒருத்தர் ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில் தப்புத் தப்பாக குப்பை கொட்டுகிறார். ஆனாலும் கடந்த வாரம் மாட்டுப்பட்டுப்போனார். தீர்வு ஓ.கே எண்டால் நீலமானவர் பதவியை ராஜினாமா செய்துபோட்டு போய் விடுவாராம். புல்லரிக்குதுங்கோ! அதுவும் சரிதான்; விற்று முடிந்த பின்னர் கிடைப்பதை வாங்கிக்கொண்டு நடையைக் கட்டுவாராக்கும்! 'முரசு' யாருக்கும் வக்காலத்து வாங்குவதில்லை. வக்காலத்து வாங்கும் விமர்சகர்களுக்கு 'முரசு' ஒரு புதிர்தான். கோபம்வரும்தான்!

**வெளிநாட்டமைச்சு** அலுவலகத்தில் திருமணமாகாதவருக்கான சான்றிதழ் (அன் மரீட் சேர்ட்டிபிக்கேற்) பெறச் சென்றார் ஒரு நண்பர். வெளிநாட்டிலுள்ள உறவினருக்கு எடுத்து அனுப்பச் சென்றாராம். விதானையாரின் சிபாரிசை காண்பித்தாராம். "விதானையார் ஏன்? அடையாள அட்டை இலக்கம் எழுதவில்லை" எண்டு கேட்கப்பட்டதாம். பின்னர் அதனைப் பெற்றுக்கொண்டு மீண்டும் சென்றபோது, "இது பொய்யான கடிதம்" என்று கூறப்பட்டதாம். நண்பர் வாழ்க்கை வெறுத்துப் போய் நிற்க, பியோன் சொன்ன சூத்திரம் "கொழும்புக்கு ஐநூறு, யாழ்ப்பாணம் எண்டால் ஐயாயிரம். கையிலே காசு, பையிலே சேர்ட்டிபிக்கேற்." அதுக்கு நண்பர் சொன்ன பதில்: "உந்த இழவை முதலிலேயே சொல்லித் தொலைச்சிருக்கலாமல்லோ, நாங்கள் கடமை உணர்ச்சி எண்டல்லோ நினைச்சுப் போட்டோம்!"

**யாழ் செல்லும்** பயணத்துக்கு பத்தாயிரம் கொடுத்தால் ரிக்கெட் உட்பட எல்லாம் ஓ.கே. ரெண்டு எழுத்தாரல்லாத ஜனநாயக பாதைக்கு வந்த தமிழ்க் கட்சி ஒன்று, தங்கள் இயக்க உறுப்பினரின் உறவினருக்கு யாழ் செல்ல கிளியரன்ஸ் கேட்டு உயர்பீடத்துக்கு ஃபோன் மேல் ஃபோன் போட்டும் பயன் இல்லையாம். பொறுத்துப் பார்த்தாராம் அந்த உறவினர். பொங்கி எழுந்து பொக்கற்றால் எடுத்து ஒரு முகவர் கையில் எண்ணிக் கொடுத்தார். எண்ணி இரண்டு நாளுக்குள் கிளியரன்ஸ். தமிழ்க்கட்சிகளுக்கே இந்தநிலை எண்டால்...?

**யாழ் குடாநாட்டுக்கு** ரெண்டு எழுத்தார் வன்னியிலிருந்து செல்ல எத்தனையோ கடல் பாதை இருக்கு. கப்பலே வந்து திரியும்போது, படகில் போவதோ கஷ்டம்? குறாப் குறாப்பாக ரெண்டு எழுத்தார் யாழில் நடமாடுகினம். வன்னியிலிருந்து கொழும்புக்கு வருவதுதான் கொஞ்சம் கஷ்டமே தவிர, யாழ் புக அவைக்கு என்ன கஷ்டம்? அதுதெரியாமல் கொழும்பில் இருந்து ரெண்டு எழுத்தார் யாழ் செல்வதை தடுக்கத்தான் பயணக் கட்டுப்பாடு. கிளியரன்ஸ் இழுத்தடிப்பு எண்டு சொல்வதைக் கேட்டால் சிரிப்புத்தான் வருகுதய்யா. உலக்கை போற வழி இருக்க, ஊசி போற பாதையை அடைக்க நினைச்ச கதைதான்.

**இவ்வாரப் பொன்மொழி...**

**"பல அறிஞர்களிடம்**
**உறவாடினால்**
**நீயும் அறிஞனாகிறாய்!**
**பல பணக்காரர்களுடன்**
**உறவாடினால்**
**பணக்காரனாக மாட்டாய்!"**

www.padippakam.com




# முதல் சுற்றும் முதற் தாக்குதலும்

**அரசியல் தொடர்**
**அற்புதன் — எழுதுவது**

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பிரதிநிதிகளாக கொழும்பு வந்தவர்களில் அன்ரன் பாலசிங்கம், அவர் மனைவி அடேல் பாலசிங்கம் தவிர்ந்த ஏனையோர் கொமாண்டோ சீருடைகளை அணிந்திருந்தனர்.

புலிகள் இயக்க அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், அடேல் பாலசிங்கம், யோகரட்ணம் யோகி, மூர்த்தி, திலகர் ஆகியோர் கொழும்பு வந்திருந்தனர். அவர்களுக்கு பாதுகாப்பாக வந்த புலிகளின் கைகளில் ஏ.கே.47 துப்பாக்கிகள் தயார் நிலையில் இருந்தன. முதுகில் பை தொங்கியது.

அதற்கு முன்னரும் புலிகள் கொழும்பு வந்திருந்தனர். கொழும்பில் தாக்குதல்கள் மற்றும் குண்டுத்தாக்குதல் நடத்த வந்திருந்தனர்.

பிரபாகரனும் கொழும்பு வந்திருக்கிறார். பொத்துவில் கனகரத்தினத்தைச் சுடுவதற்காகவே பிரபாகரன் கொழும்பு வந்திருந்தார்.

அரசுடன் நேரடியாகப் பேச்சு நடத்த புலிகள் கொழும்புக்கு வந்து இறங்கியது மே 3-1989ல் தான்.

எந்த அரசு புலிகளை பயங்கரவாதிகள் என்று கூறியதோ, அதே அரசு புலிகளை விடுதலைப் போராளிகள் என்று அங்கீகரித்து வரவேற்ற காட்சியை செய்தியாளர்களும், படப்பிடிப்பாளர்களும் பதிவு செய்து உலகுக்கு தெரியப்படுத்தினார்கள்.

கொழும்பில் வந்து இறங்கியவுடன் அன்ரன் பாலசிங்கத்திடம் பத்திரிகையாளர்கள் பேச்சுவார்த்தை பற்றிக் கேட்டனர். அதற்கு பாலசிங்கம் "நட்புறவுடனும், புரிந்துணர்வுடனும் பேச்சு நடத்த வந்திருக்கிறோம்" என்று கூறினார்.

பேச்சுக்கள் தொடர்ந்து நடக்கும் போது புலிகளின் பிரதித் தலைவர் மாத்தையாவும் கலந்து கொள்வது என்று முடிவு செய்யப்பட்டிருந்தது.

பேச்சுக்களுக்கு முன்பாக அரசுக்கும், புலிகளுக்கும் இடையே யுத்த நிறுத்தம் ஏற்பட்டது.

இந்தியப் படைகள் வடக்கு-கிழக்கில் புலிகளுடன் போரிட்டுக் கொண்டிருக்கின்றன. இலங்கை அரசு புலிகளுடன்

அவர்கள் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

வேண்டிய வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.

வெளிநாடுகளில் உள்ள தங்கள் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் அனைவருடனும் ஹில்டன் ஹொட்டல் தொலைபேசியில் தாராளமாக உரையாடினார்கள்.

தொலைபேசி பில் ஏறிக்கொண்டிருந்தது. பணம் கட்டப்போவது அரசுதானே. அதனால் பேசவேண்டியவர்கள் அனைவருடனும் பேசி சர்வதேச ரீதியாக உரையாடி முடித்துவிட்டார்கள்.

ஹொட்டலில் தங்கியிருந்தபோதும் சமையல் மட்டும் சொந்தச் சமையல்தான். உணவுப் பொருட்களை ஹொட்டலில் இருந்து பெற்று தாமே அவற்றை சமைத்துக் கொண்டனர்.

## எதிர்க்கட்சியின் குத்தல்

புலிகளுக்கும் அரசுக்கும் இடையே பேச்சுக்கள் ஆரம்பமானது, சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கு பிடித்தமான விடயமல்ல.

எனினும் பகிரங்கமாக பாரிய எதிர்ப்பு தெரிவிக்க முடியாதளவில் பிரேமதாசாவின் அரசியல் சாணக்கியம் அவர்களைக் கட்டிப் போட்டிருந்தது.

ஆனாலும் மறைமுகமான எதிர்ப்புக்கள் காட்டுவதிலும், நோகாமல் குத்தும் காரியங்களிலும் ஈடுபட்டே வந்தனர்.

புலிகளுடன் பேசி நிரந்தரமான தீர்வொன்றை பிரேமதாசா கண்டுவிட்டார் என்றால், இலங்கை அரசியலில் மேலும் குறைந்தது பத்து ஆண்டுகளுக்கு தங்களால் தலையெடுக்க முடியாது என்பது சிறீலங்கா சுதந்திரக் கட்சியினருக்கு தெரிந்ததுதான்.

அரசியல் தீர்வுக்கு ஐக்கிய தேசியக் கட்சி ஒத்துழைக்க வேண்டும் என்றும், புலிகளுடன் பேசுவதாயின் எதிர்க்கட்சி ஒத்துழைக்க வேண்டும் என்றும் தற்போது பொதுஜன முன்னணியினர் கூறி வருகின்றனர் அல்லவா. பொதுஜன முன்னணியில் பிரதானமாக இருப்பது சிறீலங்கா சுதந்திரக் கட்சி.

அன்று புலிகளுடன் நடைபெற்ற பேச்சுக்கள் பற்றி பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார் தர்மசிறி சேனநாயக்கா.

முதல் சுற்றுப் பேச்சை முடித்துக் கொண்டு புலிகளின் பிரதிநிதிகள் புறப்பட்டுச் சென்ற பின்னர்தான் அக் கேள்வி எழுப்பப்பட்டது.

கொழும்பில் புலிகள் தங்கியிருந்தபோது அவர்களைப் பராமரிக்க அரசுக்கு ஏற்பட்ட செலவு என்ன, புலிகளுடன் நடத்தப்பட்ட முதல் சுற்றுப் பேச்சில் ஆராயப்பட்ட விடயங்கள் என்ன? விபரங்கள் என்ன? என்று கேள்வி எழுப்பியிருந்தார் தர்மசிறி சேனநாயக்கா.

அரசுக்கு தர்மசங்கடம ஒன்றை கொடுப்பதற்காகவும், புலிகளுக்கு அரசு எத்தனை தூரம் சலுகை காட்டுகிறது என்பதை மக்கள் அறியச் செய்யவுமே அப்படியொரு கேள்வி எழுப்பப்பட்டது.

ஹில்டன் ஹொட்டலில் புலிகள் தங்கி இருந்ததும், அங்கு தங்கி இருப்பது என்றால் ஏகப்பட்ட செலவு ஏற்பட்டிருக்கும் என்பதும் எதிர்க்கட்சிக்கு தெரியும். தாமாக அதனைக் கூறாமல் அரசாங்கத்தின் வாயில் இருந்து வெளிவரச் செய்ய முயன்றனர்.

கேள்விக்கு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜயரத்தின பாராளுமன்றத்தில் பதிலளித்தார்.

"கொழும்புக்கு வந்து தங்கியிருந்த புலிகளின் பிரதிநிதிகளுக்கு தரப்பட்ட பாதுகாப்பு, போக்குவரத்து வசதி, தங்குமிட வசதி, உணவு போன்றவற்றுக்காக 17 இலட்சம் ரூபா செலவானது" என்று ரஞ்சன் விஜயரத்ன கூறினார்.

"புலிகளுடன் நடத்திய முதல் சுற்றுப் பேச்சுவார்த்தை பூர்வாங்கமானது. அதன் விபரங்களை தற்போது தெரிவிக்க முடியாது. அடுத்த பேச்சுவார்த்தை இரண்டு வாரங்களுக்குள் ஆரம்பமாகும்" என்றும் தெரிவித்திருந்தார் ரஞ்சன்.

பேச்சுவார்த்தை தொடர்பான காரியங்கள் யாவும் மாத்தையாவின் பொறுப்பில்தான் நடந்தன. பிரபாகரன் பெரிதாக ஈடுபாடு காட்டவில்லை.

இக் காலகட்டத்தில் இயக்கத்தில் மாத்தையாவின் செல்வாக்கு சற்றுக் கூடுதலாகவே இருந்தது. இயக்கத்தை காப்பாற்ற அரசுடன் பேச்சு நடத்த வேண்டும் என்ற மாத்தையாவின் கருத்தை மூத்த உறுப்பினர்கள் பலரும் ஆதரித்தனர்.

மாத்தையாவுக்கும் கிட்டுவுக்கும் இடையே கசப்புக்கள் அப்போதும் இருந்தன. இலங்கை அரசுடன் பேச்சு நடத்துவது அவசியம் என்பதில் இருவரும் ஒத்த கருத்தைக் கொண்டிருந்தனர்.

பேச்சுவார்த்தைக்கான பிரதிநிதிகள் குழுவில் இருந்தவர்களில்கூட பலர் மாத்தையாவுக்கு நெருக்கமானவர்கள்தான். யோகி, மூர்த்தி ஆகியோர் மிக மிக நெருக்கம்.

மூர்த்தி புலிகள் இயக்க ஆரம்பகால உறுப்பினரல்ல. சீனச் சார்பு கம்யூனிஸ்ட் கட்சியில் உறுப்பினராக இருந்தவர். கிளிநொச்சியைச் சேர்ந்தவர்.

ஈழப்போராட்ட ஆரம்பகாலத்தில் அதனை கேலி செய்வதில் முன்னின்றவர்களில் சீனச்சார்பு கம்யூனிஸ்ட்டுக்களும் அடங்குவர்.

பின்னர் இயக்கங்களின் வளர்ச்சி முன்பாக பணிந்தாகவேண்டிய கட்டாயத்துக்கு உள்ளானார்கள். சீனச் சார்பு கம்யூனிஸ்ட்டுக்கள் பலரை மாத்தையா புலிகளின் அரசியல் பிரிவுக்குள் இழுத்துவிட்டார். அவர்களில் ஒருவர்தான் மூர்த்தி.

இந்தியப் படையினர் வந்த புதிதில் மூர்த்தியும் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டார். பின்னர் விடுதலையானார்.

புலிகள் என்று சந்தேகப்பட்டு ஒருவரை கைதுசெய்துவிட்டு இந்தியப் படை விடுதலை செய்யுமானால், குறிப்பிட்ட நபர் ஒருமாதம் கூட உயிரோடு இருப்பது சந்தேகம்தான். ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினரோ, அல்லது ஈ.என்.டி.எல்.எஃப். இயக்கத்தினரோ குறிப்பிட்ட நபரை பிடித்து மண்டையில் போட்டுவிடுவார்கள்.

இந்தியப் படை வரும்வரை மூர்த்தி புலிகளின் தீவிர ஆதரவாளர்தான். கைதாகி விடுதலையானபின்னர் தனியாக இருந்தால் சாவது நிச்சயம் என்ற நிலையில் புலிகளோடு சேர்ந்து முழுநேர உறுப்பினராகிக் கொண்டார்.

மூர்த்தி போன்றோரை மாத்தையா பேச்சுக்கு அனுப்பியதில் பிரபாகரனுக்கு முழு உடன்பாடு இருக்கவில்லை. பிரபாகரனின் அணுகுமுறைக்கு நேர்மாறானது இது.

இயக்க நடவடிக்கைகளில் முன்னணியில் நின்றவர்கள், விசுவாசத்தை நடவடிக்கைகள் மூலம் நிரூபித்தவர்களுக்குத்தான் பொறுப்புக்கள் கொடுப்பது பிரபாகரனின் அணுகுமுறை.

நன்றாக பேசக்கூடியவர், படித்தவர், பிரபலமானவர் என்ற கவனங்களுக்காக ஒருவரை பிடித்து வந்து இயக்கத்தின் தோளில் ஏற்றிவைக்கும் அணுகுமுறை ஏனைய இயக்கங்களின் தலைவர்களிடம் இருந்தது.



பேச்சுவார்த்தைக்காக வவுனியாவிலிருந்து கொழும்புக்கு

மாத்தையாவும் அப்படியான ஒரு அணுகுமுறையை கைக்கொள்ள ஆரம்பித்தார். அரசியல் பிரிவு என்பது, இயக்கத்திற்காக அர்ப்பண உணர்வுடன் உறுப்பினர்கள் செயற்பட்டுக்கொண்டிருக்க, அவர்கள் பெயரில் சில பிரமுகர்கள் பிரபலம் தேடும் பிரிவாக மாறிக்கொண்டிருந்தது.

புலிகள் இயக்கத்தில் அதற்கு முன்னரும் அதற்கு பின்னரும் காணாத மாற்றம் இது. அதேபோக்கில் போய் இருந்தால் இப்போது புலிகள் இயக்கமும் ஏனைய இயக்கங்கள் போல உட்பலம் இழந்திருக்கக்கூடும். பலம் இருந்திருக்காது. பிரபலங்கள் இருந்திருப்பார்கள்.

மாத்தையா பிரச்சனையின் பின்னர் அந்த பிரமுகர்களை எல்லாம் தூக்கி ஒரு ஓரத்தில் போட்டுவிட்டார் பிரபாகரன். அதில் ஒருவர் மூர்த்தி. (இவை பற்றி பின்னர் விபரிக்கப்படும்.)

பேச்சுவார்த்தைகள் ஒரு கட்டத்தின் பின்னர் முறியப்போகின்றன என்பது பிரபாகரனை அறிந்தவர்களுக்கு தெரிந்தே இருந்தது.

இதற்கிடையே புலிகள் இலங்கை அரசுடன் பேச்சு நடத்துவது பற்றி பல்வேறு கேள்விகள் எழத் தொடங்கின.

"ஜென்ம விரோதி என்று கருதப்பட்ட இலங்கை அரசுடன் புலிகள் எப்படி பேச்சு நடத்தலாம்?"

"இந்தியப் படை சென்ற பின்னர் அரச படைகள் போரை ஆரம்பித்தால் தமிழ் மக்கள் கதி என்ன?"

"பிரபாகரன் தமிழீழக் கோரிக்கையை கைவிட்டுவிட்டாரா?" போன்ற கேள்விகள் பெரிதாக எழுந்தன.

## புலிகள் அறிக்கை

இலங்கை அரசுடன் முதற்சுற்றுப் பேச்சு முடிந்ததும் விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவினரால் ஒரு அறிக்கை வெளியிடப்பட்டது.

'இந்தியப் படையினர் தமிழீழத்தில் இருக்கவேண்டும் என்று கோரும் அனைவரும் துரோகிகள்' என்று அந்த அறிக்கை மூலம் தெரிவித்தனர் புலிகள்.

அந்த அறிக்கையில் கூறப்பட்டிருந்தது இதுதான்: "எமது விடுதலையை நாமே போராடிப் பெறவேண்டும். அந்நிய இராணுவம் எமக்காகப் போராடக்கூடாது. இதனையே அன்றும் இன்றும் நாம் வலியுறுத்தி வருகிறோம்.

இதனால்தான் இந்திய அரசு எம்மை வெறுத்தது. இந்திய அரசு எமக்குப் பாடம் புகட்ட நினைத்தது. பாடம் புகட்ட நினைத்தவர்கள் பாடம் படிக்கின்றார்கள்.

இந்திய அரசின் அக்கிரமத்தை உலகம் புரிந்து கொள்ள 500க்கு மேற்பட்ட புலிகளின் இரத்தம் சிந்தப்பட்டது. அந்த இரத்தத்தில் இந்திய வல்லாதிக்கம் மூழ்கடிக்கப்பட்டது.

இந்திய இராணுவம் அமைதிகாக்கும் படை அல்ல, ஆக்கிரமிப்புப் படை என்று நாம் பல முறை சொன்னோம். "நாம் அமைதிப்படை. சிறீலங்கா அரசு கேட்டது, வந்தோம். போகச் சொன்னால்போவோம்" என்றார்கள். இதைச் சொன்னது வேறு யாருமல்ல, பஞ்சசீல, மனித குல மாணிக்கத்தின் பேரன் ராஜீவ் காந்திதான்.

இன்று சிறீலங்கா அரசு போகச் சொல்கிறது. போக முடியாது என்று அடம்பிடிக்கிறார்கள். செத்துப்போன ஒப்பந்தத்திற்கு உயிர் கொடுக்கப் பார்க்கிறார்கள்.

நாம் முன்பு இந்திய அரசிடம்:

1) விடுதலைப் புலிகள்தான் தமிழ், முஸ்லிம் மக்களின் ஏகப் பிரதிநிதிகள்.

2) இந்தியப் படை தமிழீழத்திலிருந்து வெளியேற வேண்டும்.

3) சர்வதேச அமைதிப்படை ஒன்று இங்கு வரவேண்டும்.

என்ற மூன்று கோரிக்கைகளை வைத்து சர்வசன வாக்கெடுப்பு நடத்தத் தயாரா என்று கேட்டிருந்தோம். அதனை அன்று ஏற்கத் திராணியற்றவர்கள்தான், இன்று தங்களை தமிழ், முஸ்லிம் மக்கள் போக வேண்டும் என்று கூறுவதாகச் சொல்கிறார்கள்.

தன்மானமுள்ள தமிழர்களோ, முஸ்லிம்களோ தமிழீழ மண்ணில் இந்தியப் படையினர் இருக்க வேண்டும் என்று கூறமாட்டார்கள்.

இந்திய அரசின் அடிமைகள்தான் அவ்வாறு கூறுகின்றனர். இந்தியப் படை இங்கு இருக்க வேண்டும் என்று கூறுகிறவர்கள் இந்த மண்ணின் துரோகிகள் ஆவர்"

மேற்கண்டவாறு புலிகளின் அரசியல் பிரிவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

## முதல் சுற்றும் மோதலும்

இலங்கை அரசுடன் முதல் சுற்றுப் பேச்சை முடித்துவிட்டு வன்னிக்கு திரும்பினார்கள் புலிகளின் பிரதிநிதிகள்.

வவுனியாவில் உள்ள புளொட் இயக்க முகாம்களை தாக்க அணியொன்றை அனுப்பினார் பிரபாகரன்.

புளொட் முகாம் தாக்கப்படும் என்ற தகவல் முன்கூட்டியே இலங்கைப் படையினருக்கு ஜாடை மாடையாகத் தெரியும்.

மோதல் நடக்கும்போது தலையிட வேண்டாம் என்பது மேலிட உத்தரவு.

முள்ளிக்குளம் என்ற இடத்தில் இருந்த புளொட் இயக்க முகாம் புலிகளால் மே 20ம் திகதி சுற்றிவளைக்கப்பட்டு தாக்கப்பட்டது.

புளொட் இயக்கத்தினரும் அந்த முகாமில் பலமாக இருந்தனர். புலிகளால் தமது முகாம் சுற்றி வளைக்கப்பட்டதும் எதிர்த்தாக்குதல் நடத்தினார்கள்.

நீண்ட மோதல் இடம்பெற்றது. இறுதியில் புலிகளின் கை மேலோங்கியது.

புளொட் இயக்க மூத்த உறுப்பினரும், பொறுப்பாளர்களில் ஒருவருமான சங்கிலி என்றழைக்கப்படும் கந்தசாமியும் முகாம் தாக்குதலில் பலியானார்.

புளொட் இயக்கத்தில் நடைபெற்ற உட்கொலைகள் பலவற்றுக்கு காரணமானவர் என்றும், இயக்க உறுப்பினர்களை கொடூரமாக சித்திரவதை செய்து கொல்வதில் முன்னின்றவர் என்றும் குற்றம் சாட்டப்பட்டவர் சங்கிலி.

புளொட் முகாமின் மீதான தாக்குதலுக்கு புலிகள் உரிமை கோரினார்கள்.

புளொட் தரப்பில் 42 பேர் பலியானதாகவும், தமது தரப்பில் 11 பேர் பலியானதாகவும், புளொட் முகாமிலிருந்த ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டு, முகாம் அழிக்கப்பட்டதாகவும் புலிகள் உரிமை கோரியிருந்தனர்.

(தொடர்ந்து வரும்)

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

போர் நிறுத்தம் செய்கிறது.

இலங்கையில் அமைதியை நிலை நாட்ட இலங்கை அரசின் அழைப்பின் பேரில் அமைதிப்படையை அனுப்பியுள்ளோம் என்றுதான் இந்திய அரசு கூறி வந்தது.

இப்போது இலங்கை அரசும், புலிகளும் போர் நிறுத்தம் செய்த பின்னர் யாருக்கிடையே அமைதியைக் கொண்டுவர இந்தியப்படை போரிடுகிறது?

மிகவும் தர்மசங்கடமான இந்தக் கேள்விக்கு இந்தியப்படையால் மட்டுமல்ல, இந்திய அரசால்கூட பதில் சொல்ல இயலவில்லை.

இதற்கிடையே இந்தியாவின் பிரபல தினசரிகள், சஞ்சிகைகள் யாவும் படையை வாபஸ் பெறுவதுதான் சரியானது என்று ஆசிரியர் தலையங்கங்கள் தீட்டத் தொடங்கிவிட்டன.

'இந்தியன் எக்ஸ்பிரஸ்', தினமணி போன்ற பத்திரிகைகள், "இந்தியப் படையை வாபஸ் பெற மறுப்பது மேலாதிக்கம்" என்று கண்டனம் செய்தன.

## ஈரோஸ் கோரிக்கை

"இந்தியப் படை வெளியேறவேண்டும் என்று ஜனாதிபதி பிரேமதாசா கோருவது வியப்பானதல்ல. அவர்கள் வெளியேறுவதுதான் நியாயம்" என்று பேட்டியளித்தார் ஈரோஸ் தலைவர் பாலகுமார்.

இன்னொரு கருத்தையும் பாலகுமார் தெரிவிக்கத் தவறவில்லை.

"எம்மைப் பொறுத்தவரையில் தமிழ் பேசும் மக்களின் அடிப்படை அபிலாசைகள்கூட தீர்க்கப்படாத நிலையில் போராட்டம் தொடர்வது என்பது தவிர்க்க முடியாதது. இதனை உருவகப்படுத்தும் சின்னமாகவே விடுதலைப் புலிகள் செயற்படுகிறார்கள் என்றே நாம் கருதுகிறோம்" என்றார் பாலகுமார்.


கொழும்பில் முதல் சுற்றுப் பேச்சை முடித்துக் கொண்டு புலிகளின் பிரதிநிதிகள் வன்னிக்குச் சென்றனர்.

வன்னிக் காட்டில் உள்ள தங்கள் தலைவர் பிரபாகரனுடன் கலந்து பேசிவிட்டு அடுத்த சுற்றுப் பேச்சை தொடர கொழும்பு வருவதாக அவர்கள் கூறிச் சென்றனர்.

## ஹொட்டல் செலவு

கிட்டத்தட்ட மூன்று வாரங்கள் வரை கொழும்பில் தங்கியிருந்தனர் புலிகளின் பிரதிநிதிகள். பாதுகாப்புக் காரணத்திற்காக அவர்கள் தங்கியிருக்கும் இடம் இரகசியமாக வைக்கப்பட்டிருந்தது.

கொழும்பில் பிரபலமான ஐந்து நட்சத்திர விடுதியான ஹில்டனில்தான்



தமிழக சஞ்சிகையான 'ஆனந்த விகட'னில் வெளிவந்த காட்டூன்

## சிவசிதம்பரமும் சுதந்திரனும்

தமிழ்க் காங்கிரசும், தமிழரசுக் கட்சியும் பூனையும், எலியுமாக மோதிக் கொண்டது பழைய கதை. தமிழ்க் காங்கிரசில் இருந்தவர் மு.சிவசிதம்பரம். உதவிச் சபாநாயகராகவும், உடுப்பிட்டி எம்.பியாகவும் இருந்தவர். 1970ல் தோல்வி கண்டவர். தமிழரசுக் கட்சியின் குரலாக வெளியான சுதந்திரன் பத்திரிகை. 1.11.1969ல் சுதந்திரன் பத்திரிகையின் கேள்விப் பதில் பகுதியைப் பாருங்கள்:

கே: உடுப்பிட்டியில் ஜெயக்கொடி: ஜெயக்கொடி நாட்டுவார் எனப் பலர் கூறுகிறார்களே உண்மையா?

இ.இ.லிங்கம்
மாங்குளம்.

ஆமாம், அரைச் சபாநாயகர் பதவிக்காக இனத்தை விலை கூறி விற்பவர்களை மீண்டும் பாராளுமன்றம் அனுப்புவதற்கு உடுப்பிட்டி தொகுதி மக்கள் இனப்பற்று, மொழிப் பற்று அற்ற சோற்றுத் துருத்திகளல்ல.

கே: 1964ல் மாகாண சபையை ஆதரித்த உடுப்பிட்டி பா.உ இன்று எதிர்ப்பதன் நோக்கம் என்ன?

ப: இதற்குப் பெயர்தான் பச்சோந்தித் தனம்.

நன்றி- சுதந்திரன்-1.11.69,

சமீபத்தில் இலங்கை ரூபவாகினிக்கு அளித்த பேட்டியில் கடந்த காலத்தை தமிழர்கள் மறக்கக்கூடாது என்று சிவசிதம்பரம் கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



வாரமலர்
தினமுரசு



படிப்பகம்

www.padippakam.com

## அலசுவது- இராஜதந்திரி

# பாராளுமன்ற பாதையும் மக்கள் போராட்டப் பாதையும்!

அரசியல் தீர்வு யோசனைகள் விடயத்தில் தமிழ்க் கட்சிகளின் கருத்துக்கள் ஏற்கப்பட முடியாதவை என்று நீதியமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கூறியிருந்தார்.

அதன்பின்னர் இன்னொரு கருத்தையும் சமீபத்தில் கூறியிருக்கிறார். தேசியக் கொடி, தேசிய கீதம் என்பவற்றில் மாற்றம் இருக்கவே இருக்காது. மாற்றம் இருக்கும் என்ற பிரசாரம் வெறும் புரளி என்றும் தெரிவித்திருக்கிறார்.

அரசியல் தீர்வு யோசனை பற்றி நீதியமைச்சர் அவர்கள் திடீர் திடீர் என்று சில மாற்றங்களையும், திட்டவட்டமான உத்தரவாதங்களையும் வழங்கி வந்திருக்கிறார்.

**அவை யாவும் சிங்களப் பேரினவாதிகள் கிளப்பும் சந்தேகங்களுக்கு பதில் சொல்வதாகவும், பரிகாரம் செய்பவையாகவுமே அமைந்து வருகின்றன.**

தீர்வு யோசனைகளில் கூறப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாகவும், அவற்றில் எவையெல்லாம் இறுதியாக தப்பிப் பிழைக்கும் என்பது குறித்தும் தமிழ்பேசும் மக்களிடமும் பல்வேறு சந்தேகங்கள் நிலவி வருகின்றன.

**இதுவரை எக்கட்டத்திலும் தமிழ் பேசும் தரப்பின் சந்தேகங்களை தீர்க்கும் வகையில் விளக்கங்களையோ, உத்தரவாதங்களையோ ஆட்சியாளர்கள் வழங்கியது இல்லை. நீதியமைச்சரும் தெரிவித்தது கிடையாது.**

வெறுமனே, 'அரசியல் தீர்வை வழங்கியே தீருவோம்', 'இனப் பிரச்சனைக்கு தீர்வு அவசியம்' என்று பொதுப்படையாகவே பேசி வருகின்றனர்.

உதாரணமாக, எல்லை மீள நிர்ணயக் கமிஷன் ஒன்றை அமைக்கும் முடிவை அமைச்சரவை எடுத்திருக்கிறது.

இந்த எல்லை மீள நிர்ணயக் கமிஷனின் நோக்கம் என்ன என்பதும், வடக்கு-கிழக்கில் திட்டமிட்ட குடியேற்றங்களால் விழுங்கப்பட்ட பகுதிகளை கோதி எடுத்து, அருகிலுள்ள சிங்கள மாவட்டங்களுடன் இணைப்பதுதான் நோக்கமா? என்றும் சந்தேகங்கள் எழுந்துள்ளன.

**அம்பாறை மட்டுமல்லாமல் திருமலையின் சில பகுதிகளும், வடக்கு-கிழக்கின் இதய பூமியான மணலாறு போன்ற பகுதிகளும் எல்லை மீள நிர்ணயம் என்ற பெயரில் பிரித்தெடுக்கப்படுமா? என்ற சந்தேகம் தீர்க்கப்படாமல் உள்ளது.**

தமிழ் பேசும் மக்களின் நலன் சார்ந்த சந்தேகங்களுக்கு பதில் சொல்லத் தயங்கும் ஆட்சியாளர்கள், பேரினவாதிகளின் சந்தேகங்களுக்கு உடனுக்குடன் பதிலளித்து வருவதையும், உத்தரவாதங்கள் வழங்கி வருவதையுமே காண முடிகிறது.

அரசியல் தீர்வு யோசனைகள் முன்வைக்கப்பட்ட நாளில் இருந்து இதுவரை, தமிழ் பேசும் மக்களின் அரசியல் கோரிக்கைகள் தொடர்பான அடிப்படை விடயங்களில் புதிரான போக்கையே ஆட்சியாளர்கள் கையாண்டு வருகின்றனர்.

வடக்கு-கிழக்கு தொடர்ந்து இணைந்திருக்குமா இல்லையா? என்ற கேள்விக்கு பதில் சொல்லாமலேயே காலத்தைக் கடத்திக் கொண்டிருந்தனர்.

அதேசமயம் பௌத்த குருமார்கள் சிலரை திருப்திப்படுத்துவதற்காக, பிராந்திய சபைகளை கலைக்கும் அதிகாரம் மத்திய அரசுக்கு இருக்கும் வகையில் யோசனையில் திருத்தம் செய்யப்பட்டது.

தமிழ் பேசும் அரசியல் கட்சிகளுடன் ஆட்சியாளர்கள் இதுவரை நடத்திய பேச்சுவார்த்தைகள் ஆழம்பார்க்கும் முயற்சிகளாகவே அமைந்திருந்தன.

**எந்தளவுக்கு விட்டுக் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள் என்பதையும், எந்த அளவுக்கு எதிர்ப்புக் காட்ட முனைகிறார்கள் என்பதையும் கண்டறிவதற்கான முயற்சியாகவே இருந்திருக்கின்றன.**

ஆட்சியாளர்கள் வைத்த பொறியில் முதலில் தாங்களாகவே சென்று சிக்கிக்கொண்டவர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியினரே ஆவர்.

அரசியல் தீர்வு யோசனையில் பங்காளிகளாக இருந்தது மட்டுமல்லாமல், அம்பாறையை விட்டுக்கொடுக்கவும் அவர்கள் முன்னின்றனர்.

அம்பாறையை விட்டுக்கொடுத்தால் வடக்குடன் மட்டக்களப்பு, திருமலை ஒரு பிராந்தியமாக இணைந்திருக்கும் என்று கூட்டணியினர் கூறத் தலைப்பட்டனர்.

ஆனால், அரசாங்கமோ அம்பாறையை பிரிக்கும் முடிவுக்கு கூட்டணியினரை உடன்பட வைத்துவிட்டு, மட்டக்களப்பும், திருமலையும் வடக்குடன் இணைந்திருக்க கருத்துக் கணிப்பு நடத்தித்தான் முடிவு செய்யப்படும் என்று தெரிவித்துவிட்டது.

கருத்துக் கணிப்பை நிறுத்த ஜனாதிபதியுடன் பேசப் போகிறோம் என தமிழர் விடுதலைக் கூட்டணியினர் பத்திரிகைகளுக்கு தெரிவித்து வருகின்றனர்.

**ஆயினும், கருத்துக் கணிப்பு நடத்துவதில் மாற்றம் இல்லை என்பதை ஜனாதிபதியும், நீதியமைச்சரும் கூட்டணியினரிடமும் தெளிவாக எடுத்துரைத்துவிட்டனர்.**

**அம்பாறையை விட்டுக் கொடுத்ததின் பயனாக தமிழ் பேசும் தரப்புக்கு கூட்டணியினர் பெற்றுக் கொடுத்த அரசியல் இலாபம் எதுவுமில்லை என்பது புலனாகியுள்ளது.**

பேச்சுவார்த்தைகளின் சில கட்டங்களில் விட்டுக்கொடுப்புக்கள் தேவையாக இருப்பதுண்டு. ஆனால் அவ்வாறான விட்டுக்கொடுப்புக்கு பேச்சில் ஈடுபடும் மறுதரப்பும் முன்வரும் பட்சத்தில்தான் அதனைச் செய்ய வேண்டும்.

அரசியல் சட்ட வல்லுநர்கள் எனவும், பழம்பெரும் கட்சியினர் எனவும் தம்மை அழைத்துக்கொள்ளும் தமிழர் விடுதலைக் கூட்டணியினருக்கு மேற்கண்ட அரசியல் சாணக்கியம் தெரியாமல் போனது விந்தையே.

தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழ்க் கட்சிதான், ஆனால் தமிழர்களின் கட்சியல்ல என்று சொல்லும் நிலைக்கு இன்று சென்றுள்ளது.

ஏனைய தமிழ்க் கட்சிகளின் நிலையும் அவ்வாறுதான் அமைந்திருக்கிறது.

அரசின் தீர்வு யோசனைகளை கூட்டணிபோன்று அவை பகிரங்கமாக ஆதரிக்கவில்லை என்றாலும், தீர்வு யோசனைகள் பற்றிய காலம் கடத்தும் நாடகங்களுக்கு எதிர்ப்புக் காட்ட இயலாதவையாகவே உள்ளன.

பாராளுமன்றத்தில் தீர்வுயோசனை விவாதத்துக்கு வரும்போது எங்கள் கருத்தைக் கூறுவோம் என புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் எம்.பி கூறியிருந்தார்.

இதுவரை முன்வைக்கப்பட்ட தீர்வுயோசனைகளில் இது சிறந்த யோசனைதான், ஆயினும் பூரண தீர்வாகாது என்று ஈ.பி.டி.பி செயலதிபர் டக்ளஸ் தேவானந்தா. எம்.பி. கூறியுள்ளார். இதனையே சித்தார்த்தனும் கூறியிருந்தார்.

இக் கூற்றுக்குள் ஆட்சியாளர்களை முற்றிலும் அதிருப்திக்கு உள்ளாகாமல், நாசூக்காக கருத்துக் கூறும் தன்மையையே வெளிப்படுத்துகின்றன.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில்கூட வடக்கு-கிழக்கை இரண்டாகப் பிரிக்கும் கருத்துக் கணிப்பு நடாத்தப்படும் என்றே குறிப்பிடப்பட்டிருந்தது. அவ்வாறான கருத்துக் கணிப்பு இணைந்திருக்கும் முடிவுக்கு ஆதரவாக அமைந்தால் கூட வடக்கு-கிழக்கு மாகாண எல்லைகள் கூட மாற்றப்பட்டிருக்காது.

**ஆனால் இன்று முன்வைக்கப்பட்டுள்ள யோசனை அதனைவிட பாரதூரமாக உள்ளது. வடக்குடன் இணைந்திருக்க திருமலை, மட்டக்களப்பு மாவட்ட மக்கள் விரும்பினால், கிழக்கு மூன்று துண்டாக நறுக்கப்படும். விரும்பாவிட்டால் கிழக்கு நறுக்கப்படாமல் தனியாக இருக்கும்.**



அதுமட்டுமல்ல, வடக்குடன் இணைந்திருக்க மட்டக்களப்பு திருமலை மாவட்ட மக்கள் முடிவு செய்தால் எல்லை நிர்ணயக் கமிஷனின் கத்தரிக்கோல திருமலையிலும், வன்னியிலும் சில பகுதிகளை கத்தரித்து எடுக்கவும் கூடும்.

ஆக, தமிழ் பேசும் மக்களின் அடிப்படை கோரிக்கையான வடக்கு-கிழக்கு தமிழ்பேசும் மக்களின் தாயகம் என்ற கோட்பாட்டுக்கு அப்பட்டமான வேட்டு வைப்பாக தீர்வு யோசனை அமைந்திருக்கக் காணப்படுகிறது.

சில அதிகாரங்கள் விடயத்தில் முன்னேற்றம் இருக்கிறது என்று கூறக்கூடும். அத்திவாரம் பலமாக இல்லாதபோது, அழகான சன்னல் கம்பிகள் இருந்து பயன் என்ன என்பதே கேள்வியாகும்.

கண்ணை விற்று சித்திரம் வாங்குவது போன்றதே, அடிப்படை கோட்பாடுகளை கைவிட்டு அதிகாரப் பரவலாக்கல் பற்றிப் பேசுவதுமாகும்.

**அது மட்டுமல்லாமல் நில அதிகாரம் உட்பட முக்கிய அதிகாரங்கள் இடக்கையால் கொடுத்து வலக்கையால் எடுக்கக்கூடிய வகையில்தான் அமைந்துள்ளன. கண்ணை விற்று வாங்கிய சித்திரம்கூட கைவிட்டுப் போகும் என்ற நிலைதான் இதுவாகும்.**

எனவே, தாமும் பங்காளிகள் என்ற நிலையில் அரசின் தீர்வு யோசனைகளுக்கு கூட்டணியினர் வக்காலத்து வாங்குவது எவ்வாறு தவறானதோ, அதேபோல தற்போதைய தீர்வு யோசனைகளின் அரை குறைத் தன்மையை சக்திமிக்க வகையில் அம்பலப்படுத்த ஏனைய தமிழ்க் கட்சிகள் தயக்கம் காட்டுவதும் தவறானதேயாகும்.

அரசியல் தீர்வு யோசனைகளை ஏற்கவில்லை என்றும், தங்கள் கருத்துக்களை முன்வைத்துள்ளதாகவும் தமிழ்க் கட்சிகள் தமிழ் பேசும் மக்களிடம் திரும்பத் திரும்பக் கூறிவருவதில் பயன் எதுவும் இருக்கப்போவதில்லை.

தமிழ்க் கட்சிளைவிட தமிழ் பேசும் மக்கள் இன்றைய தீர்வு யோசனைகள் பற்றி நன்கு அறிந்து வைத்துள்ளனர். தங்கள் அபிலாசைகளை இன்றைய அரசாங்கமும் தீர்க்கப்போவதில்லை என்ற முடிவுக்கு எப்போதோ வந்துவிட்டனர்.

தமிழ்க் கட்சிகள் இப்போது செய்ய வேண்டியது மக்களின் உணர்வுகளை ஒன்று திரட்டி உலகின் கண்களுக்கு தெரியப்படுத்துவதேயாகும்.

பாராளுமன்றத்தின் ஊடாகவோ, பாராளுமன்ற தெரிவுக் குழுக்களில் நீண்டுபோகும் விவாதங்கள் ஊடாக அரசியல் தீர்வு காணப்படப் போவதில்லை என்பது மீண்டும் ஒரு தடவை உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஆயினும், இந்தச் சந்தர்ப்பத்தை தமிழ்க் கட்சிகள் பயன்படுத்துவதற்கான அறிகுறிகள் எதனையும் காணமுடியவில்லை.

வடக்கு-கிழக்கில் மக்களை அணிதிரட்டி பிரிப்புக்கு எதிரானதும், அரை குறைத் தீர்வுகளுக்கு எதிரானதுமான அறவழிப் போராட்டங்களைக் கூட ஒழுங்கமைக்கவோ, முன்னெடுக்கவோ. தமிழ்க் கட்சித் தலைமைகள் தயாராக இருப்பதாக தெரியவில்லை.

தனிச் சிங்களச் சட்டம் வந்தபோதும், ஏன் சிங்கள சிறீ என்ற எழுத்துக்கு எதிராகக்கூட வடக்கு-கிழக்கில் தமிழரசுக் கட்சியினர் எழுச்சியான போராட்டங்களை அக்காலத்தில் நடத்தியிருந்தனர்.

இன்று, தமிழ் பேசும் மக்களின் தலைவிதியைத் தீர்மானிக்கப்போகும் கட்டத்தில், கழுத்துக்கு சுருக்குக்கயிறுகள் வீசப்படும்போதுகூட வடக்கு-கிழக்கில் குறைந்த பட்சம் அடையாள எதிர்ப்பைக் காட்டக்கூட மக்களை அணிதிரட்ட தமிழ்க் கட்சிகளால் முடியாமல் உள்ளது என்பதை அவதானிக்க முடிகிறது:

மக்கள் தயாராக இல்லை என்பது தமிழ்க் கட்சிகள் கூறும் போலிக் காரணமாகவே அமைந்துள்ளது.

யாழ் குடாநாட்டில் காணாமல் போனோரின் உறவினர்கள் தாமாக முன்வந்து உண்ணாவிரதப் போராட்டங்களை நடத்தியுள்ளனர். சமாதானப் பேரணி ஒன்றும் பெரியளவில் பொதுமக்களால் நடத்தப்பட்டிருக்கிறது.

பாராளுமன்றப் பாதையில் தமிழ் மக்களின் உரிமைகளை ஒருபோதும் பெற்றுக்கொள்ள முடியாது. 50 வருட கால அனுபவமே இதுவாகும். **பாராளுமன்றத்தில் சூராதி சூரர்களான தமிழ் பாராளுமன்றவாதிகள் இருந்தபோதுதான் தனிச் சிங்களச் சட்டம் முதல், தமிழ் பேசும் மக்களை இரண்டாம் தரப் பிரஜைகளாக்கும் அரசியலமைப்புக்கள்வரை கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டன.**

பாராளுமன்றத்தை நம்பவில்லை, பயன்படுத்தவே செல்கிறோம் என்றுதான் தமிழ்க் கட்சிகள் கூறி வருகின்றன.

## பாதை மாறுமா? பயணம் தொடருமா?

ஆனாலும், பாராளுமன்ற உரைகள் மூலமும், பாராளுமன்ற செயற்பாடுகள் மூலமும் தங்களை கதாநாயகர்களாக சித்தரித்து, மக்களை பார்வையாளர்களாக வைத்திருக்கவே தமிழ்க் கட்சிகளின் தற்போதைய நடவடிக்கைகள் உதவுகின்றன.

**பாராளுமன்ற வீர முழக்கங்களால் உரிமைகள் கிடைக்காது. போராட்டங்கள் மூலம் அரசுக்கு ஏற்படுத்தும் நிர்ப்பந்தங்களும், நெருக்கடிகளுமே நியாயமான தீர்வொன்றை காணக்கூடிய முன்னெடுப்புகளாகும்.**

மக்கள் போராட்டங்களை உலகின் கவனத்துக்கு கொண்டு செல்ல தங்கள் பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளை தமிழ்க் கட்சிகள் பயன்படுத்துவதே சரியானதாக அமையும்.

பாராளுமன்றத்தில் இல்லாத தமிழ்க் கட்சிகள்கூட அடுத்த தேர்தலில் சில ஆசனங்களைப் பெறுவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளனவே தவிர, மக்களை அரசியல் போராட்டங்களுக்கு அணிதிரட்டும் முயற்சியில் ஈடுபடவில்லை.

**இன்று தமிழ் பேசும் மக்களுக்கு தேவை தலைசிறந்த பாராளுமன்ற வாதிகளல்ல, தமிழ் பேசும்தரப்பின் உணர்வுகளை ஒன்று திரட்டி உருவகப்படுத்தும் அரசியல் தலைவர்கள்தான்!** ஆயுதம் ஏந்தாத அரசியல் போராட்ட வடிவத்தில் பாராளுமன்ற பயன்படுத்தல் ஒரு கட்டமாக இருக்கலாமே தவிர, பிரதான பாத்திரம் வகிக்க முடியாது. மக்கள் பங்கு கொள்ளும் அரசியல் போராட்டங்கள்தான் பிரதான பாத்திரம் வகிப்பவையாகும்.

தமிழ்க் கட்சிகளின் தீர்வு யோசனைத் திருத்தங்கள் நிராகரிக்கப்பட்டமை மீண்டும் ஒரு தடவை அந்த உண்மையை ஆணித்தரமாக உணர்த்தியுள்ளன. ■

# பூச்சாண்டிகளும்-பூசாரிகளும்

எதிர்க்கட்சியைத் திட்டித் தீர்ப்பது என்பது விமர்சகர்கள் சிலருக்கு விருப்பமான வேலை என்றாகிவிட்டது.

எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சியை விமர்சிக்கத்தான் வேண்டும். அதன் சுயரூபங்களை வெளிப்படுத்தத்தான் வேண்டும்.

இனப்பிரச்சனைத் தீர்வுக்கு ஒரு போதும் இதய சுத்தியுடன் ஐ.தே.கட்சி முன்வரப்போவதில்லை. அதுவும் உண்மையிலும் உண்மை.

ஆனால், இனப்பிரச்சனைத் தீர்வுக்கு ஐ.தே. கட்சிதான் தடை என்பதுபோல பொதுஜன முன்னணி கூறிவருவதை அப்படியே நியாயப்படுத்த முற்படுவதுதான் மூட நம்பிக்கை.

அதைவிட பொல்லாத மூட நம்பிக்கை என்ன வென்றால், ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியும் இணைந்து தீர்வுக்காக ஒத்துழைப்பார்கள் என்று நம்புவது.


ஐ.தே.கட்சி ஒத்துழைக்காவிட்டால் தனித்து நின்று தீர்வுகாண முடியாது என்று பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா அவர்கள் கூறியுள்ளார்.

இதே சிறிமாவோ அம்மையார்தான் இந்திய- இலங்கை ஒப்பந்தத்தை எதிர்த்து மாபெரும் கிளர்ச்சிகள் நடத்திய சுதந்திரக் கட்சித் தலைவியாக இருந்தவர்.

"ஐ.தே.கட்சியால் நாட்டில் சமாதானத்தை தோற்றுவிக்க முடியவில்லை. நம்மால் முடியும். சாதித்துக் காட்டுகிறோம்" என்றுதான் பொதுஜன முன்னணி பதவிக்கு வந்தது.

இப்போது ஐ.தே.கட்சி ஒத்துழைக்காவிட்டால் தீர்வு காணமுடியாது என்றால் என்ன அர்த்தம்? இப்படியானால் ஐ.தே. கட்சியையே ஆட்சியில் இருக்க விட்டுக் கொண்டு பொதுஜன முன்னணி தீர்வுக்கு ஒத்துழைத்திருக்கலாம் அல்லவோ?


இந்திய-இலங்கை ஒப்பந்தத்துக்கு தென்னிலங்கையில் ஏற்பட்ட எதிர்ப்பில் ஒரு 50 வீதம்கூட அரசின் தீர்வு யோசனைகளுக்கு எதிராக ஏற்படவில்லை.



சகல எதிர்ப்புக்களையும் முகம் கொடுத்து முறியடித்துத்தான் ஒப்பந்தத்தில் ஜே.ஆர் கையொப்பம் இட்டார்.

எதிர்க்கட்சியின் ஒத்துழைப்பை கேட்டுக் கொண்டு இருந்திருந்தால் ஒப்பந்தம் ஒரு நாளும் கைச்சாத்திடப்பட்டிருக்காது.

எனவே, தனது தீர்வு யோசனை விடயத்தில் இன்றைய அரசும் துணிச்சலாக முயன்றால் தடைகள் ஒரு பொருட்டல்ல. தாமாக விலகும். அல்லது தகரும்.



தமிழ் பேசும் மக்களின் வாக்குகளை ஐ.தே.கட்சி நம்பியிருப்பதால், பகிரங்கமாக எதிர்ப்புப் போராட்டங்களை நடத்தவும் இயலாது.

ஆனால் ஆளும் கட்சியோ இலங்கை வரலாற்றிலேயே நடக்காத, நடக்கமுடியாத ஒரு காரியத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறது. எதிர்க்கட்சி ஒத்துழைக்க வேண்டும் என்கிறது.

சரி, அப்படியானால், எதிர்க்கட்சியை மட்டுமல்லாமல், புலிகளையும் பேச்சு மேசைக்கு கொண்டு வரக்கூடிய மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை அரசு ஏன் நாடக்கூடாது?

புலிகளோடு பேசவும் தயார் என்று கூறும் அரசு, மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை நாடினால் என்ன பாதகம்?

அதற்கான முயற்சிகளில் ஈடுபட அரசு ஏன் தயங்கவேண்டும்? ஆக, எதிர்க்கட்சியை குற்றம் சாட்டுவது தமது தாமதங்களையும், தயக்கங்களையும் நியாயப்படுத்தும் ஆளும் தரப்பின் முயற்சிகளாகவே அமைந்துள்ளன.

போதாக்குறைக்கு பேரினவாதிகள் கிளர்ந்தெழுந்து நிற்பது போலவும் சித்தரிக்கிறார்கள். அதனை நம்பிய சில விமர்சகர்களும் பூசாரிகள்போல மாறி நிற்கிறார்கள். பேரினவாதிகள் ஒழிக என்றும் கூறுகிறார்கள்.

பேரினவாதிகள் உள்ளனர்தான். ஆனால் இன்றுவரை அவர்கள் பெரும் பூதாகரமாக உருவாகவில்லை. பண்டா-செல்வா ஒப்பந்த காலம் போலவோ, இலங்கை, இந்திய ஒப்பந்தக் காலம் போலவோ பேரினவாதிகளின் பெரும் எழுச்சி தோன்றவில்லை.

சிங்களக் கமிஷனுக்குக்கூட சிங்கள மக்களிடம் பலத்த வரவேற்பு இருக்கவில்லை. அந்தக் கமிஷன்கூட ஆளும் தரப்பு கொடுத்த கால அவகாசத்தில் முளைத்து எழுந்ததுதான்.

சிங்கள மக்களை தீர்வு ஒன்றுக்கு இணங்கச் செய்யும் ஆளுமை ஜனாதிபதி சந்திரிக்காவிடம் உண்டு. ஆனால் அரசியல் தயக்கம் அவரது கைகளைக் கட்டிப் போட்டுள்ளதால், இன்னும் நாளாக நாளாகத் தான் பூதங்கள் புதிது புதிதாகத் தோன்றும்.

மற்றொரு மிக முக்கிய கேள்வி, எத்தகைய தீர்வை வழங்க எதிர்க்கட்சியின் ஆதரவை ஆளும்தரப்பு கோருகிறது?

தமிழ் பேசும் மக்களை திருப்தி செய்ய முடியாத தீர்வுயோசனைதான் ஆளும் தரப்பின் கையில் உள்ளது. இந்நிலையில் எதிர்க்கட்சியும் ஒத்துழைத்தால் கனம் மேலும் குறையுமே தவிர கூடப்போவதில்லை.

எனவே, இன்று தமிழ் பேசும் தரப்பின் அரசியல் தந்திரோபாயம் என்பது, இந்த நாட்டுக்குள் இனப்பிரச்சனையை தீர்க்க முடியாது என்பதையும், அரசின் தீர்வு யோசனைகள் திருப்திகரமானவை அல்ல என்பதையும் உலக அரங்கின் முன் எடுத்துக் காட்டுவதாகவே இருக்க வேண்டும். பூச்சாண்டிகளை நம்பி, பூசாரிகளாக மாறி வேப்பிலை தேடுவதாக இருக்கக்கூடாது.



படிப்பகம்

www.padippakam.com

# கொள்ளை ராணி பூலான் தேவி

70

தருவது ரசிகன்



கடந்த வாரம்

பைஜாமெள கிராமத்தில் மீனவப் பெண்களை கடத்திய பண்ணையார் ஜாதியினர் ஆறுபேரை பூலான் கேஷ்டி சுட்டுக் கொல்கிறது. பெண்களை அடைத்துவைத்த வீட்டை தீயிடுகின்றனர். இனி...

**‘பைஜாமெள கிராமத்தில் கொள்ளைக் கோஷ்டி வெறியாட்டம்!’ ‘பூலான் தேவி தலைமையில் படுகொலைகள்!’ ‘ஆறு பண்ணையார்கள் சுட்டுக்கொலை!’**

இந்தியாவின் தினசரிகள் எல்லாம் தலைப்புச் செய்தியாகப் பிரசுரித்திருந்தன.

வானொலியிலும் தனது பெயர் அடிக்கடி சொல்லப்படுவதை கேட்க பூலானுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

நாடெங்கும் தன் பெயர் அறியப்பட்டு வருவதை நினைத்துப் பார்த்தாள்; நம்ப முடியாமல் இருந்தது.

உலகச் செய்திகளிலும், இந்தியாவின் ‘சம்பல் பள்ளத்தாக்கில் ஒரு கொள்ளை ராணி’ என்ற செய்தி ஆச்சரியத்துடன் கூறப்பட்டது.

ஒரு பெண்- கொள்ளைக்காரியாக இருக்கிறாள் என்பதை பலரால் நம்ப முடியவில்லை.

பெண்ணால் அப்படித் துணிச்சலாகச் செயற்படமுடியுமா? யாரோ ஒரு ஆண்தான் பெண் வேடமிட்டு ஏமாற்றிக் கொண்டிருக்கிறான், என்றும் அபிப்பிராயம் நிலவியது.

உத்தரப்பிரதேசத்தின் பல கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்கு மட்டும்தான் பூலான் தேவி பெண்தான் என்ற உண்மை உறுதியாகத் தெரிந்தது.

பொலிஸ் அறிக்கைகள் பூலான் தேவி பற்றிய தகவல்களை வெளியிட்டன.

அவை கட்டுரைகளாக பத்திரிகைகளில் பிரசுரமாகின. பூலான் தேவியை எப்படியாவது கைது செய்யுமாறு அரசாங்கம் கடுமையான உத்தரவு பிறப்பித்தது.

இந்தியப் பத்திரிகை ஒன்றில் பூலானைப் பற்றி வெளியான கட்டுரையை அவளிடம் ஒருத்தன் படித்துக் காண்பித்தான்.

பத்திரிகைகளில் தன்னைப் பற்றி அடிக்கடி செய்திகள் வருவதால், தினமும் பத்திரிகைகளை தருவிக்கவும், அதனைத் தனக்குப் படித்துக்காட்டவும் ஏற்பாடு செய்திருந்தாள் பூலான்.

“பண்ணையார் ஜாதியினரை பூலான் தேவியைப் போன்று இதுவரை யாருமே எதிர்த்தது கிடையாது. கொள்ளைக் கோஷ்டிகளிலும் பண்ணையார் ஜாதியினரே தலைமையில் இருந்தனர்.

தாழ்த்தப்பட்ட ஜாதியினருடன் மிருகங்களைவிடக் கேவலமாக நடந்து கொண்டனர். தாழ்த்தப்பட்ட ஜாதிப் பெண்களை தங்கள் இச்சைகளைத் தீர்க்கப் பயன்படுத்தினார்கள்.

கிராமங்களில் பண்ணையார்கள் வைத்ததுதான் சட்டம். அவர்கள்தான் பொலிஸ். அவர்கள்தான் நீதிமன்றம். அவர்கள்தான் தண்டனை நிறைவேற்றுபவர்கள்.

இதெல்லாம், பூலான் தேவி கொள்ளை ராணியாக மாறுவதற்கு முன்னர் இருந்த நிலை.

இப்போது எல்லாமே தலைகீழாக மாறிவிட்டது. பூலான் தேவி மாற்றி விட்டாள் என்பதே பொருந்தும்.

பூலான் தேவியின் பெயரைக் கேட்டால், பண்ணையார்கள் நடுங்குகிறார்கள்.பூலான் தேவியின் பெயரைக் கேட்டால், தாழ்த்தப் பட்டவர்கள் தலை நிமிர்ந்து நிற்கிறார்கள்.

இதனால் பண்ணையார் சமூகத்தின் ஆதிக்கப்பிடி தளர்ந்து வருகிறது. பண்ணையார் ஜாதியைச் சேர்ந்த கொள்ளைக் கோஷ்டி தலைவர்கள் ஓடி ஒளிந்து கொண்டுள்ளனர்.”

இப்படி பூலான் தேவி பற்றி நல்ல விதமாக எழுதியிருந்தது அப் பத்திரிகை.

அதனைப் படிக்கக் கேட்ட பூலானுக்கு உடம்பெல்லாம் புல்லரித்தது.

இப்போது விக்கிரம் மல்லா இல்லாமல் போனானே என்ற கவலையும் எட்டிப்பார்த்தது.

பாபா முஸ்தக்குவீம் தன் ஆட்களுடன் வேறொரு பகுதிக்குச் சென்றுவிட்டார். “உதவி தேவைப்பட்டால் உடனே என்னிடம் வா. தயங்காதே. என் ஆசிகள் என்றும் உண்டு!” என்று கூறிவிட்டுத்தான் விடைபெற்றுச் சென்றிருந்தார்.

சிந்தௌஸ் என்ற கிராமத்தின் அருகில் பூலான் கோஷ்டியினர் தங்கி இருந்தனர்.

அக்கிராமத்தில் மந்தை மேய்ப்போரும், மீனவர்கள் மற்றும் மறவர் ஜாதியினருமே வாழ்ந்து வந்தனர். அவர்கள் மத்தியில் பூலானுக்கு செல்வாக்கு இருந்தது.

தினமும் ஒவ்வொரு வீட்டில் இருந்து பூலான் குழுவினருக்கு உணவு சமைத்துத் தந்தார்கள். அக் கிராம மக்களுக்கு தங்களிடமிருந்த பணத்தில் பாதியை பிரித்துக் கொடுத்தாள் பூலான்.

அக் கிராமத்துக்கு பொலிசார் அடிக்கடி வருவார்கள் என்பதால், கிராமத்தை ஒட்டியிருந்த காட்டுக்குள்தான் பூலான் கோஷ்டியினர் தங்கியிருந்தனர்.

நுளம்புவலைகள், வசதியான படுக்கைகள் என்பவை கிராமத்தவர்களால் கொண்டுவந்து சேர்க்கப்பட்டன. பூலானை ஒரு மகாராணியாகவே அவர்கள் மதித்தனர். கிராமத்தில் நடைபெற்ற பல திருமண நிகழ்ச்சிகளுக்கு பூலான்தான் தலைமை தாங்கினாள். மணமகனின் கையில் மஞ்சள் கயிறு எடுத்துக் கொடுப்பதும் பூலான்தான்.

மணமக்களுக்கு தன்னிடமுள்ள தங்க நகைகளை தாராளமாகப் பரிசளித்து மகிழ்வாள் பூலான். பூலானின் காலில் விழுந்து அவர்கள் ஆசிபெறுவர்.

ஆரம்பத்தில் பூலான் சங்கடப்பட்டாலும், போகப் போக எல்லாமே சகஜமாகிவிட்டது. ஆசி வழங்கவும் பழகிக்கொண்டாள்.

திருமண நிகழ்ச்சி நடக்கும் வீட்டுக்கு பூலான் வரும்போது, அங்கு இருக்கும் அனைவருமே எழுந்து நின்று, “பூலான் தேவிக்கு ஜே ஜே!” என்று குரல் கொடுப்பார்கள்.

“துப்பாக்கியும் கையுமாக மகராசி நடந்துவரும்போது, அந்த துர்க்கை அம்பாளே நேரில் வருவது போல இருக்கிறது!” என்று ஒரு மூதாட்டி சொன்னபோது, பூலான் மெய் சிலிர்த்துப் போனாள்.

அந்தக் கிராமத்தைச் சேர்ந்த இரண்டு இளைஞர்கள் பூலானின் குழுவில் சேர்ந்து கொண்டனர்.

கொள்ளையடித்த நகைகளும், பணமும் கரைந்து கொண்டிருந்தன. கிராம மக்களுக்கு தாராளமாக உதவி செய்தமையால் விரைவாகக் கரைந்தன.

அடுத்த கொள்ளைக்கு திட்டமிடுமாறு மான் சிங்குக்குக் கட்டளையிட்டாள் பூலான்.

மான் சிங் பல திட்டங்களைக் கூறினான். அனைத்தையும் பொறுமையாகச் செவிமடுத்த பூலான் அவற்றையெல்லாம் ஒதுக்கிவிட்டு புதிய திட்டம் ஒன்றைக் கூறினாள். அதைக் கேட்டு எதற்கும் அசையாத மான் சிங்கூட அசைந்துவிட்டான்.

“ஜங்காஜ்பூரில்தான் அடுத்து எங்கள் கைவரிசையைக் காட்டப்போகிறோம்” என்றாள் பூலான்.

“என்ன ஜங்காஜ்பூரிலா, அங்கே இதுவரை யாருமே கொள்ளையடிக்கத் துணிந்ததில்லை.”

“ஏன்?”

“பெரிய பொலிஸ் நிலையம் ஒன்று ஊருக்குள் இருக்கிறது. நாம் உள்ளே புகுந்தால் சுலபமாக நம்மை வளைத்துப் பிடித்துவிடுவார்கள்!” என்றான் மான் சிங்.

பூலானின் உதட்டில் லேசான புன்னகை ஒன்று தோன்றி மறைந்தது.

“ஜங்காஜ்பூரில்தான் பெரும் பணக்கார முதலைகள் இருக்கின்றன என்பது தெரியுமா?” என்று கேட்டாள் பூலான்.

“தெரியும்!”

“காற்றுக்கும், மழைக்கும், கடல் கொந்தளிப்புக்கும் பயந்தால் மீன்பிடிக்கச் செல்வார்களா நம் மீனவர்கள்? நாங்கள் பிடிக்க நினைப்பது சுறா மீன்களை. ஏன் இதை ஒரு சவாலாக எடுத்துச் செய்யக்கூடாது?” என்று கேட்டாள் பூலான்.

பூலான் ஒரு முடிவுக்கு வந்துவிட்டாள் என்பதை தெரிந்துகொண்ட மான் சிங், அதற்குப் பின்னரும் மறுத்துப் பேசாமல், “நம்மிடம் உள்ள ஆட்கள் போதாது.” என்றான்.

“பாபாவிடம் உதவி கேட்போம். நாம் தனித்து இக்காரியத்தைச் செய்யமுடியாது என்பது எனக்கும் தெரியும் மான் சிங்! பொலிஸ் காக்கிகளுக்கு சவால்விட்டு அவர்கள் முகத்தில் கரி பூச வேண்டும். அவர்களை வெட்கித் தலைகுனியச் செய்யவேண்டும். அதற்குத்தான் இந்தக் கொள்ளை!”

“பொலிசாருடன் சண்டை வரக்கூடும்!”

“வரட்டும். வரவேண்டும். என் துப்பாக்கி பதில் சொல்லும்!”

மறுநாள் பாபாவை சந்தித்தார்கள். முதலில் தயங்கினார். பின்னர் திட்டத்தை விளக்கியதும் அரைமனதுடன் சம்மதித்தார்.

“நானும் இதில் நேரடியாகவே பங்கு கொள்ளப் போகிறேன்!” என்றார் பாபா.

பாபா பங்கு கொளவதை பூலான் விரும்பவில்லை. பொலிசாருடன் மோதல் ஏற்படலாம். அப்படி மோதல் நடந்து பாபாவுக்கு ஏதாவது ஆகிவிடுமோ என்று பயந்தாள் பூலான்.

“வேண்டாம். நாங்கள்தான் இருக்கிறோமே, நீங்கள் எதற்கு?” என்று மான் சிங்கும் கூறினான்.

“என்னப்பா மான் சிங், இந்தச் சிங்கத்திற்கு வயதாகிவிட்டது என்று மூலையில் முடங்கிக் கிடக்கச் சொல்கிறாயா?” என்றார் தன் தாடியைத் தடவியபடி பாபா.

மான் சிங் வாயை மூடிக்கொண்டான். பூலானும் வாய் திறக்கவில்லை.

இதுவரை நடத்திய கொள்ளைகளில் மிகப் பெரியது என்பதால் பத்துநாட்கள்வரை தயாரிப்புக்கள் நடந்தன.

60 பேர் நடவடிக்கையில் ஈடுபடத் தெரிவாகினர். அனைவருக்கும் பொலிஸ் சீருடைகள், தொப்பிகள் வழங்கப்பட்டன.

பூலான் தன் முடியைக் கட்டையாக வெட்டிக்கொண்டாள். தொப்பி அணிந்த பின்னர் பார்க்கையில் ஆண்போலவே தெரிந்தாள்.

பூலான் கொள்ளைகளுக்கு திட்டமிடுதலில் மான் சிங்கையே மிஞ்சிவிட்டாள் என்பதை பாபா பிரமிப்புடன் கவனித்தார்.

பெண்கள் கொள்ளைக் கோஷ்டியில் இருக்கத் தகுதியற்றவர்கள் என்ற தன் நினைப்பு தன் கண் முன்பாகவே பொய்த்து வருவதைக் கண்டார் பாபா.

‘பெண் நினைத்தால் எதனையும் சாதிப்பாள். பெண் என்பவள் தூங்கும் புலி போன்றவள். சீண்டிச் சீண்டித், தீண்டித் தீண்டி ஒரு கட்டத்தின்பின் இடறியும் விட்டால், அந்த தூங்கும் புலி எழுந்து கொள்ளும்’ என்பதை பாபா அனுபவத்தில் இருந்து உணர்ந்து கொண்டார்.

ஜங்காஜ்பூர் கிராமத்துக்குள் பூலான் குழுவினர் பிரவேசித்தபோது, மதியம் 2:15 மணி.

ஜங்காஜ்பூர் பொலிஸ் நிலையத்தில் 15 பொலிசார்வரைதான் இருந்தார்கள். மதிய நேரம் என்பதால் உண்டபின் உறக்கத்தில் இருந்தனர்.

திட்டமிட்டிருந்தபடி பொலிஸ் நிலையத்தை முதலில் முற்றுகையிட்டனர்.

20 பேர் அதற்காக நியமிக்கப்பட்டிருந்தனர்.

“உள்ளே செல்லத் தேவையில்லை. பொலிஸ் நிலையத்தை விட்டு வெளியேற பொலிசார் முயன்றால் மட்டுமே தடுத்து நிறுத்தி சண்டைபோட வேண்டும்” என்று அவர்களுக்கு உத்தரவிட்டிருந்தார் பாபா.

அனாவசியமான மோதலைத் தவிர்க்கவே அந்த ஏற்பாடு. பொலிசார் போலவே தோளில் ஆயுதம் தொங்கவிட்டபடி, சீருடை அணிந்து, தொப்பிகள் மாட்டியிருந்தவர்களைக் கண்டு ஜங்காஜ்பூர்வாசிகள் சந்தேகப் படவில்லை. பொலிஸ்காரர்கள் என்று நினைத்து மரியாதையாக ஒதுங்கி நின்றனர்.

நகருக்குள் சென்றதும் இரு பிரிவாகப் பிரிந்து பிரதான தெருவை தங்கள் கட்டுப் பாட்டில் கொண்டுவந்தனர். அனைவரும் துப்பாக்கிகளை தங்கள் கையில் எடுத்துக் கொண்டு தயாரானபோதுதான், அப்பகுதியில் நின்ற பொதுமக்களுக்கும், கடைக்காரர்களுக்கும் சந்தேகம் ஏற்பட்டது.

அவர்களது சந்தேகத்தை உறுதிப்படுத்துவது போல பாபா முஸ்தக்குவீம் கையில் வைத்து பேசும் ஒலிபெருக்கியில் “யாரும் பயப்படவேண்டாம்! எதிர்ப்பவர்கள் மட்டும் சுட்டுக்கொல்லப்படுவார்கள். நாங்கள் ஏழைகளின் நண்பர்கள்! பணக்காரர்களின் எதிரிகள். பொலிசாருக்கு பணத்தை வீசிவிட்டு ஏழைகளை வதைக்கும் பணக்காரர்களிடம் மட்டும்தான் நாங்கள் கொள்ளையடிப் போம்!”

பாபாவின் குரல் சகல திக்கிலும் எதிரொலித்தது. அப்படியிருந்தும் பயம் காரணமாக பலர் சிதறி ஓடத் தலைப்பட்டனர்.

வர்த்தகர்கள் கடைகளை அவசர அவசரமாக மூடமுற்பட்டனர்.

இப்போது பூலானின் குரல் ஒலி பெருக்கியில் ஒலித்தது.

“கடைகளை மூட முயல்பவர்களை நாய்களைச் சுடுவதுபோல சுடுவோம்!” பெண் குரலைக் கேட்டதும் பத்திரிகைகளில் படித்த செய்திகள் நினைவுக்கு வர, அது பூலான் தேவிதான் என்று தெரிந்துவிட்டது.

கடைகளை மூடுவதையும் நிறுத்திவிட்டு அப்படியே போட்டுவிட்டு ஓடித்தப்ப முயன்றனர் வர்த்தகர்கள்.

அவர்களை இழுத்துவந்து பூலானுக்கும் பாபாவுக்கும் முன்னால் நிறுத்தினார்கள்.

அதேசமயம் பொலிஸ் நிலையத்தில் இருந்த பொலிசாருக்கும் ஒலிபெருக்கி எச்சரிக்கைகள் கேட்டன.

அவர்கள் துப்பாக்கிகளைத் தூக்கிக் கொண்டு வெளியே வரத் தயாராகினர்.

(தொடர்ந்து வரும்)

## சமாதி கட்டிய சாமியார்



போலிச்சாமியார்கள் பிற பெண்களுடன்தான் சில்மிஷம் பண்ணுவது வழக்கம். தமிழ்நாட்டில் கோவை மாவட்டத்தில் ஒரு போலிச் சாமியார் பெயர் கச்சி வாசு தேவ். இந்த பலே ஆசாமி தன் மனைவியுடனும் விளையாடி இருக்கிறார் அதாவது மரண விளையாட்டு.

யோகா கற்றுக்கொடுப்பது,மனவலிமையை வளர்த்து விடுவது என்று கூறி ஆசிரமம் தொடங்கினார்.

பணக்காரர்கள், பணக்கார வீட்டுப் பெண்கள் என்று பெரும் படையே திரண்டு சாமியார் பின்னால் அலைந்தது.

யோகா வகுப்பில் ஆண்களையும் பெண்களையும் உட்கார வைத்துவிட்டு, ‘நீங்கள் செய்த தப்புக்களை ஒப்புவியுங்கள்.’ என்பானாம்.

வசீகரமான கண்கள். கவரும் குரல். பக்தர்கள் மயங்கி அவன் சொற்படி தங்கள் தப்பையெல்லாம் சொல்வார்கள்.

சில பெண்களும்கூட தாங்கள் யார் யாருடன் தொடர்பு வைத்தோம் என்பதை விலாவாரியாக விபரிக்க சாமியார் நமட்டுச் சிரிப்புடன் இரசித்துக் கொண்டு இருப்பானாம்.

யோகா நிலைக்கு பயிற்றுவிப்பது என்பது பெண்களின் உடலை தலைமுதல் கால்வரை தொட்டுத்தான் பயிற்சி கொடுப்பானாம். அதனை விரும்பியோரும் உண்டு. கபடமில்லாமல் நினைத்தவர்களும் உண்டு. வெறுத்துப்போய் ஆசிரமப் பக்கம் போவதை நிறுத்தியவர்களும் உண்டு.

விரும்பி ஒத்துழைக்கும் பெண்களுடன் ஜாலியாக இருந்திருக்கிறான். இதனை ஒருநாள் மனைவி பார்த்து விட்டதால்தான் குடும்பத்துக்குள் பூசல் வெடித்து.

மனைவி இருந்தால்தானே பிரச்சனை. ஒருநாள் மனைவியை சாகடித்து விட்டான். சாகடித்து விட்டு சொன்ன கதைதான் அபாரம்.

“என் மனைவி சமாதி நிலை அடைந்து விட்டாள். இறைவனிடம் நேரடியாகப் போய்விட்டாள்” என்று கதை விட்டதோடு, அவசர அவசரமாக உடலையும் எரித்து, தடயங்களையும் அழித்து விட்டான்.

பதின்மூன்று வயதில் ஒரு மகளும் இருக்கிறாள்.

தன் மகளின் மரணத்தில் சந்தேகம் ஏற்பட்டதால் சாமியாரின் மாமாவும், மாமியாரும் பொலிசில் புகார் செய்தனர். விசாரணை சூடுபிடித்ததும், சாமியார் அமெரிக்கா போய்விட்டார்.

அவர் திரும்பும்வரை விசாரணைக்காக பொலிஸ் காத்திருக்கிறது. கோடிக் கணக்கான ரூபாய்களை வங்கியில் போட்டு வைத்திருக்கிறான் இந்தப் போலிச் சாமியார்.

சாமியாரின் பதின்மூன்று வயது மகள் தந்தைக்கு எதிராக பொலிசில் சாட்சியம் அளித்துள்ளாள்.

இத்தனைக்குப் பின்னரும்கூட ‘சாமியார் குற்றமில்லாதவர்’ என்று சிலர் நம்புவதுதான் வேடிக்கை.

இன்னொரு தகவல், பெண்களைத் தொட சாமியார் பயன்படுத்திய டெக்னிக் அலாதியானது. பக்தர்களுக்கு கஞ்சி வழங்கப்படுமாம். கஞ்சியில் ஒருவிதமான போதை கலந்திருக்கும். அதனைக் குடிக்கும் ஆண்களுக்கும்,பெண்களுக்கும் உடம்பு முறுக்கிக் கொள்ளுமாம். கண்கள் சொக்கி நிற்கும். அந்த நேரம் பெண் பக்தைகளை அருகில் அழைத்து தன் கைவித்தையை ஆரம்பிப்பான் போலிச் சாமியார். எத்தனை போலிச் சாமிகள் அம்பலமானாலும் ஏமாந்தே தீருவோம் என்று அடம் பிடிப்பவர்களை எப்படித் திருத்துவது?

## இதயத் தாக்குதல்



இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சருக்கு ஐம்பதுக்கு பின்னர்தான் ஆசை வந்திருக்கிறது. அமைச்சரின் பெயர்: விட்சக் மோர்டிசாய். இவரது வயது 54.

1990ல் தனது மனைவியை விவாகரத்து செய்திருந்தார் அமைச்சர். அதன்பின்னர் தனிக்கட்டையாக இருந்த அமைச்சரின் இதயத்தில் தாக்குதல் நடத்தினாள் ஒரு இளம் பெண்.

சட்டப் பல்கலைக்கழகத்தில் படித்துப் பட்டம் பெற்ற கோகவா சின்ஷி என்ற பெண் அமைச்சரின் உதவியாளராக வேலைக்குச் சேர்ந்தாள். அப்போதுதான் இதயத் தாக்குதல் நடைபெற்றது. அமைச்சர் காதல் வசப்பட்டார். காதல் கல்யாணத்தில் முடிந்துள்ளது. காதலியாகி மனைவியாகியுள்ள கோகவா சின்ஷிக்கு 25 வயது.

## விபரீத தமாஷ்



நகைச்சுவை நடிகர் சொந்த வாழ்க்கையிலும் தமாஷ் ஆசாமியாகத்தான் இருக்க வேண்டும் என்பதில்லை. வில்லன் நடிகர் சொந்த வாழ்க்கையிலும் வில்லங்கமான பேர்வழியாக இருக்கவேண்டும் என்பதில்லை.

ஆனால் அமெரிக்க நகைச்சுவை நடிகரான மார்ட்டின் லோரன்ஸ் நிஜவாழ்க்கையிலும் பயங்கரமான தமாஷ் ஆசாமி.

ஒருமுறை, தனது கையில் துப்பாக்கியுடன் தெருவில் ஓடினாராம். பார்த்தவர்கள் மிரண்டு ஓடினார்கள். பொலிசில் புகார் செய்தனர். எல்லாம் ஒரு தமாஷ்தான் என்றார் மார்ட்டின்.

ஹொலிவூட்டில் உள்ள இரவு விடுதி ஒன்றுக்குச் சென்றார் மார்ட்டின். அவருக்கு அருகில் நின்ற ஒருவரின் முகத்தில் பலமாக இரண்டு குத்து இறக்கினார். அதுவும் தமாஷ் வேலைதானாம்.

இப்போது வசமாக மாட்டியிருக்கிறார். மாட்டவைத்தவர் சக நடிகையான கேம்பல். சேர்ந்து நடிக்கும்போது மார்ட்டின் கேம்பலிடம் விஷமம் செய்திருக்கிறார். வெறுத்துப் போன கேம்பல் பொலிசில் புகார் செய்ய, நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## சுசந்திகா விவகாரம்



ஓட்ட வீராங்கனை சுசந்திகா பற்றி கிசுகிசுக்கள் அடிக்கடி வெளிவந்தன. மதுபோதையில் ஆண்கள் விடுதி ஒன்றில் காணப்பட்டது பழைய செய்தி.

இப்போது மற்றொரு புகார். அமைச்சின் அதிகாரி ஒருவர் சுசந்திகாவை படுக்கைக்கு அழைக்கிறார் என்று குற்றம் சாட்டியுள்ளது ஐ.தே.கட்சி.

இந்தக் குற்றச்சாட்டில் உண்மை இல்லையோ இருக்கிறதோ என்று கண்டறிவது ஒருபுறம் இருக்க, கௌரவ அமைச்சர்கள் கூறியுள்ள பதில்கள் சரியாக இல்லை.

“கறுப்பினப் பெண் போன்றும், ஆண் போலவும் உள்ள அப் பெண்ணின் உடலில் யாருக்கும் நாட்டம் இருக்காது”- என்று ஒரு அமைச்சர் கூறியுள்ளார். சுசந்திகா பதக்கம் வென்றதும் அவரைப் பற்றி பக்கம் பக்கமாக பாராட்டிய பத்திரிகைகள்கூட அமைச்சரின் பேச்சை கண்டு கொள்ளவில்லை.

விளையாட்டுத்துறையில் ஈடுபடும் பெண்களின் உடல் இறுக்கமாவது உண்டுதான். அப்படி உடலை வைத்திருந்ததால்தான் சுசந்திகாவால் பதக்கம் பெற்றுக் கொடுக்க முடிந்தது. விளையாட்டுத்துறையில் ஈடுபடும் பெண்களை யாரும் விரும்பமாட்டார்கள் என்பதுபோல இருக்கிறது அமைச்சரின் பேச்சு.

## ஐந்து செக்கண்ட் மட்டும்



ரொம்பக் கொடுமையான சட்டம் என்று காதலர்கள் கொதித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அப்படி என்னதான் சட்டம் போட்டிருக்கிறார்கள்? காதலர்கள் பொது இடங்களிலும், பூங்காக்களிலும் முத்தம் கொடுப்பது அதிகமாகிவிட்டதாம். கண்டதும் காதல் போல, கண்டதும் கொடுக்குமளவுக்கு முத்தம் மலிந்துவிட்டதாம். அதனால் வெனிசூலா நாட்டு அரசாங்கம் .தடைபோட்டுள்ளது.

ஐந்து செக்கண்டுக்கு மேலே முத்தம் கொடுக்கும் ஜோடியை பிடிச்சு உள்ளே தள்ளுமாறு உத்தரவு. அது என்ன ஐந்து செக்கண்ட் கணக்கு என்றுதான் கொதித்து கிளர்ந்து எழுந்துள்ளன காதல் ஜோடிகள்.

மொத்தமாகவே தடை போட்டால் எதிர்ப்பு அதிகமாகுமோ என்றுதான் ஐந்து செக்கண்ட் மட்டும் அனுமதித்தது வெனிசூலா அரசு. அதற்கும் பயங்கரமான எதிர்ப்பு வெடித்திருக்கிறது.

காதலர்கள் முத்தமிடும்போது மணிக்கூட்டைப் பார்த்து கணக்கிட்டுக் கொண்டிருக்கும் வேலையா எமக்கு? என்று பொலிசாரும் முணுமுணுக்கிறார்களாம். விசித்திரமான சட்டம்தான்.



படிப்பகம்

www.padippakam.com

தகவல் பெட்டி

ஓய்விலும் உஷார்



↗ வீதியில் பொதுத் தொலைபேசிகள். தொப்பியுடன் காணப்படுகிறவர்கள் யூத குடிமக்கள். அருகில் நிற்பவர் யூதப்படைவீரர். பணி முடிந்தவுடன் தன் காதலியுடன் ரெலிஃபோனில் ஜொள்ளுகிறார். எப்போதும் துப்பாக்கி. மறுமுனையில் காதலி எப்படிச் சிரித்திருப்பாள்? ரெலிஃபோன் மணிபோல!

# த காவல் லீலை



↗ பாலஸ்தீன-இஸ்ரேலிய சமாதான ஒப்பந்தத்தின் பின்வரும் தீ கனன்று கொண்டிருக்கும் பகுதி ஜெருசலம். மேற்கு ஜெருசலம் யூதர்கள் அதிகமுள்ள பகுதியாகும். கிழக்கு ஜெருசலம் அரபுக்கள் செறிவாக உள்ள பகுதியாகும்.

இரு பகுதிகளையும் பிரித்து முட்கம்பி தடுப்புக்களும், காவலரண்களும், பாஸ் வழங்கும் நடைமுறைகளும் உள்ளன. அப்படி இருந்தும் பாலஸ்தீன போராளிகள் யூதர்களின் பகுதிக்குள் புகுந்து குண்டுத் தாக்குதல்கள் நடத்திவருகின்றனர்.

இதனால் யூதப் படைகள் கண்ணில் விளக்கெண்ணெய் விட்டுக்கொண்டு காவலுக்கு நிற்க வேண்டி இருக்கிறது.

காவலரண்களில் நின்று எதிரிகளின் தாக்கு தலை முறியடிக்கலாம். வனிதைகளின் கண்கள் ஏவும் கணைகளை எதிர்த்து நிற்க முடியுமோ? காதல் வசப்பட்ட யூதப்படைவீரர் ஒருவர் பைன் பூங்காவில் தன் காதலிக்கு முத்தமிட்டு மகிழ்கிறார். இடுப்புப் பட்டியில் துப்பாக்கி தயார் நிலையில் இருக்கிறது.

காதலா? கடமையா? என்ற கேள்விக்கு விடை தேடி நேரத்தை விரயமாக்காமல், இரண்டையும் ஒரே நேரத்தில் கவனிக்கிறார் இந்தப் படைவீரர். முத்தமிட்டுக் கொண்டிருக்கும்போது எதிரி வந்து விட்டால் துப்பாக்கியால் சத்தமிடலாம். முன்னது காதல் லீலை. பின்னது காவல் லீலை.



## துப்பாக்கி விளையாட்டு


↑ சிக்கல் நிறைந்த அறை வீடு. குசினி, ஹால், வரவேற்பறை எல்லாமும் ஒன்றுதான். சிக்கலான வாழ்க்கை. அரசியல் தீர்வில்லை. நெருக்கடி. ஜெருசலத்தின் கிழக்குப் பகுதியில் 20,000 பாலஸ்தீனியர்கள் வாழ்கிறார்கள்.

6 பிள்ளைகளின் தாயான ஹிசாம் ரஜாபி- கணவன் பயங்கரவாதி என இஸ்ரேலியப் படையினரால் கைது செய்யப்பட்டு காலவரையறையின்றி சிறையில் வாடுகிறார்.

தாயார் உணவு தயாரிக்கிறார். இளையமகள் உதவுகிறாள். சட்டிப்பையனான மகனுக்கு விளையாடும் மைதானமும் இந்த அறைதான். பொம்மைத் துப்பாக்கியால் சுட்டு விளையாடுகிறான். சற்று வளர்ந்த பின்னர் நிஜத் துப்பாக்கி கேட்பானோ?

மேலும் ஒரு இலட்சத்து 35 ஆயிரம் பாலஸ்தீனியர்கள் கிழக்கு ஜெருசலத்தில் வாழ்கிறார்கள். இப்பகுதி ஜோர்தான் நாட்டிற்கு 1967வரை சொந்தமாகவிருந்தது. இது பழைய நகரமாகும். '67ல் இஸ்ரேலியப் படைகளால் கைப்பற்றப்பட்டது.

அகதி வாழ்க்கை, அவல வாழ்க்கை அகதி முகாம் கைதுகள்... இவையெல்லாம் பல ஆண்டுகளுக்கு முன்னர் நமக்குச் செய்திகள். இன்று அனுபவங்கள். அதனால் பாலஸ்தீனர்களின் சோகம் சொந்தச் சோகம் போல் புரிகிறதல்லவா.



## யானை ஆட்டம்

→ எத்தனையோ நடனம் பார்த்திருப்பீர்கள். இது போல பார்த்ததுண்டா? இதுதாங்க யானை நடனம்!

சுமோ மல்யுத்த மலைகள் உடற்பயிற்சி செய்யும் காட்சிதான் யானை ஆட்டம்போல தெரிகிறது. முதலில் ஒரு காலை உயர்த்தி வேகமாகப் பதித்து தொம்மென்று குந்தி எழுந்திருப்பார்கள். (நிலம் அதிருமோ?)

சுமோ ஜப்பானின் தேசிய விளையாட்டு. ஆயிரத்தி முன்னூறு ஆண்டுகள் பழமையானது. அதுசரி நம் நாட்டின் தேசிய விளையாட்டு என்னங்க? தற்போதைய நிலவரப்படி யுத்தம்தாங்க!

## ஓய்வதற்கு நேரமில்லை

↓ புலிகளில் மட்டுமல்ல, அரச படை அணிகளிலும் பெண்கள் சேர்க்கப்பட்டு வருகின்றனர். பெண் பொலிசார் வீதிக் காவல்களில் ஈடுபடுகின்றனர். பெண் இராணுவத்தினர் போர்முனைகளில், பணிகளில் உள்ளனர். ஆயினும் நேரடியாகப் போரில் ஈடுபடுவதில்லை. புலிகளின் பெண்கள் அணிகள் படிப்படியாக வளர்ந்து தனியான சண்டைகளில் ஈடுபடுமளவுக்கு அனுபவம் பெற்றுள்ளனர்.

பெண்கள் சைக்கிள் ஓடத் தொடங்கியபோது கேலி செய்தவர்களும் இல்லாமல் இல்லை. இன்று பெண்கள் சண்டை போடுகிறார்கள். நம் சமூகத்தில் ஏற்பட்ட ஆச்சரியமான மாற்றம் இது. பழமையான மரபுகள், பெண்கள் பற்றிய இளக்காரமான பார்வைகளுக்கு பலத்த அதிரடி.

படத்தில், புலிகள் இயக்க பெண் உறுப்பினர் ஒருவர் பொலித்தீன் பையில் தண்ணீர் குடிக்கும் காட்சி. ஓய்வற்ற சண்டைக்கு இடையே தாகம் தணிக்கும் முயற்சி.

படையினராக இருந்தால் என்ன, புலிகள் இயக்க உறுப்பினர்களாக இருந்தால் என்ன, பெற்ற வயிறுகள் கலங்கி நிற்கும் யுத்தம் தேவைதானா? கௌரவமான தீர்வுதான் தீ தணிக்கும்!





## காட்டுக்குள் பவள்

↑ 'ஜயசிக்குறுய்' படையினருக்கும் புலிகளுக்கும் இடையே வன்னியில் நடைபெறும் சமருக்கு வயது ஆறுமாதங்கள். இந்த ஆறுமாதங்களில் இரு தரப்பிலும் உயிர்ப்பலிகள் ஏராளம். அதேசமயம் 'ஜயசிக்குறுய்' படையினரிடம் கைப்பற்றிய கனரக ஆயுதங்களும், கனரக வாகனங்களும் புலிகளின் மரபுச் சண்டை பலத்தை உயர்த்தியுள்ளன. படத்தில் இருப்பது பவள் கவச வாகனம். ஒக்டோபர் 13ல் நடைபெற்ற கரப்புக்குத்தி, விஞ்ஞானகுளம் சண்டையில் புலிகளால் கைப்பற்றப்பட்ட பவள்தான் இது. வன்னிக் காட்டுக்குள் புலிகளின் தளங்களுக்குள் ஓடித்திரிகிறது.



படிப்பகம்.

www.padippakam.com

## காதோடு சொல்லுகிறோம்

மீன் நடிகையின் புதிய படமும் நன்றாக ஓடுகிறது. நடிகைக்கு பிரியமான மூவேந்தர்களில் ஒருவரது பெயர் கொண்ட இயக்குநரின் படம்தான் இதுவும். அந்த இயக்குநர் படங்களில் நடிப்பதால்தான் தனக்கு 'பொற்காலம்' நீடிப்பதாக நம்புகிறாராம் நடிகை. மார்க்கெட் டல்லாக இருந்த நிலையில், புதிய படம் ஹிட்டாகப் போகிறது என்றால் சந்தோசம்தானே.

எப்படித்தான் கவர்ச்சி காட்டினாலும் போதிய சான்ஸ் மட்டும் தேடிவரவில்லை. கவலையில் உள்ள கஸ்தூர நடிகை பத்திரிகை எழுத்தாளராக மாறி இருக்கிறார். வாழ்க்கையில் முன்னேறும் பக்குவங்கள் பற்றி எழுதி வருகிறார். சினிமா உலகின் பக்குவங்களை தெரிந்துகூட இவரால் முன்னேற முடியவில்லை. இவர் யாரை முன்னேற்றப்போகிறார்? என்கிறார்கள்.

நடிகராக வேண்டும் என்ற ஆசையோடு சினிமாவுக்கு வந்து தயாரிப்பாளரானவர் அவர். இரண்டெழுத்துக்கு சொந்தக்காரர். சமீபத்தில் ஒரு துணை நடிகையோடு நட்சத்திர ஹோட்டலுக்கு போனார். என்ன அவசரமோ, கதவைக் கூட சாத்தாமல் காரியத்தில் இறங்கினார். ரூம் பாய் எதார்த்தமாய் கதவைத் திறக்க, பழனியாண்டி கோலத்தில் தயாரிப்பாளர். வந்த ஆத்திரத்தில் ரூம் பாயை அறைந்து விட்டார். அறைவிட்ட பிறகுதான் உறைத்தது. விஷயத்தை வெளியே சொன்னால் என்ன செய்வது? நூறு ரூபாய்களை எடுத்து நீட்டி ரூம் பாயை சமாதானப்படுத்தினாராம்.

மதத்தின் பெயரை தன் பெயராக கொண்ட நடிகை அவர். தொலைக்காட்சி அறிவிப்பாளினி வேலையும் செய்கிறார். படம் ஒன்றில் நடிக்கச் சென்றபோது தந்தையையும் கூட அழைத்துப் போனார். என் மகள் அப்படி நடிக்க மாட்டாள், இப்படி நடிக்க மாட்டாள் என்று தந்தையார் பந்தா காட்டினார். கடுப்பான இயக்குநர் 'மூட்டையைக் கட்டுங்கள்' என்றுவிட்டார். பின்னர் நடிகை தன் தந்தை சார்பாக மன்னிப்புக் கேட்டதுடன், இயக்குநரையும் தனியாகக் கவனித்தாராம்.

## பொறு தலைவா

'கொஞ்ச நாள் பொறு தலைவா, ஒரு வஞ்சிக் கொடி இங்க வருவா' என்று தொடங்கும் பாடலைக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

அருண்குமார் கதாநாயகனாக நடிக்கும் புதிய படத்தின் பெயர், 'கொஞ்சநாள் பொறு தலைவா'. அருண்குமார் ஜோடியாக புதுமுகம் ஒருவர் நடிக்க உள்ளார். அவர் ஒரு கல்லூரி மாணவியாம்.

வடிவேலு, ஆர்.சுந்தர் ராஜன், அலெக்ஸ் ஆகியோரும் நடிக்கின்றனர். இயக்கம் ஏ.ஆர்.ராசாராம். இசை: எஸ்.ஏ.ராஜ்குமார், பாடல்கள்: பழனிபாரதி.

## அப்பாஸ் தாமதம்

புது மனைவியை பிரிய முடியாமல் பசைபோட்டு ஒட்டிக்கொண்டார் அப்பாஸ். 'மனசுக்குள் வரலாமா' படப்பிடிப்பில் கலந்து கொள்ளாமல் இழுத்தடிப்பதாக படத் தயாரிப்பாளர் முறையீடு செய்துள்ளார்.

தயாரிப்பாளர் சங்கம், நடிகர்கள் சங்கம் இரண்டுக்கும் புகார் போயிருக்கிறது. இரண்டு சங்கங்களும் குறிப்பிட்ட தேதியில் படப்பிடிப்புக்கு செல்லுமாறு உத்தரவிட்டதாம்.

அப்படியிருந்தும் அப்பாஸ் குறிப்பிட்ட திகதியில் செல்ல முடியவில்லையாம்.

கருத்துக் கணிப்பு ஒன்றின்படி, திருமணத்தின் பின்னர் பெண் ரசிகைகளிடம் அப்பாஸ் காய்ச்சல் குறைந்திருக்கிறதாம்.

## 15 முட்டைகள்

'மருதநாயகம்' படத்திற்காக உடம்பை மெருகூட்டி வருகிறார் கமல். தினசரி பதினைந்து முட்டைகளை லபக் லபக் கென்று உள்ளே தள்ளுகிறாராம். அரை அவியலாக செய்துதான் சாப்பிடுகிறார்.

படத்தில் குதிரையேற்றம், வாள்வீச்சு என்று பல காட்சிகளில் புகுந்து விளையாட உடல் பலம் தேவைப்படுகிறதாம். அது தான் மெருகேற்றல்.



விஜயசாந்தி-அலெக்ஸ்
படம்: தடயம்

## ரவீனா மறுப்பு

'சாது' படத்தின் பின்னர் தமிழ்ப் பட உலகின் பக்கம் திரும்பாமல் இருப்பவர் ரவீனா ராண்டன். அர்ஜுன் ரவீனாவுடன் நெருக்கமாகப் பேசப்பட்டவர். 'கட்டுமஸ்தான நடிகர்' என்று ரவீனாவும் அர்ஜுனை பாராட்டியிருந்தார்.

'கொண்டாட்டம்' படத்தில் நடிக்க ரவீனாவை அணுகினார் அர்ஜுனன். 'நோ' சொல்லிவிட்டார் ரவீனா. அதற்கு முன்னர் 'தாயின் மணிக்கொடி' படத்திலும் ரவீனாவை நடிக்க வைக்க முயன்றார் அர்ஜுன். பலன் பூச்சியம்தான்.

அர்ஜுனின் மனைவி கிழித்தகிழி இன்னமும் ரவீனாவின் காதில் ஒலிக்கிறதாம். அதுதான் மறுப்புக்கு காரணம்.

## நாலாவது படம்

'பெரிய மனுசன்' படத்தை இயக்கிய குருதனபால் அடுத்து இயக்கும் படத்தின் பெயர் 'வந்தாங்க ஜெயிச்சாங்க' இப் படத்திலும் நாயகன் சத்யராஜ்தான். மணிவண்ணனும் நடிக்கவுள்ளார். சத்யராஜை வைத்து குருதனபால் இயக்கும் நாலாவது படமாக இது இருக்கும்.

## மினி சினி

* நடிகர் திலகம் நடித்த 'எங்க மாமா' போன்றதொரு வேடத்தில்தான் 'பொன்மனம்' படத்தில் பிரபு நடிக்கிறார். இந்தப் படத்தில் பிரபுக்கு ஜோடிகளாக சுவலட்சுமியும், பிரியா ராமனும் நடிக்கிறார்கள்.
* இந்தி, தெலுங்கு, தமிழ் ஆகிய மூன்று மொழிப்படங்களில் நடித்திருக்கும் நக்மா முதன்முறையாக கன்னடப்படமொன்றில் நடிக்கவுள்ளார். இப்படத்தில் நக்மாவுக்கு ஜோடியாக சிவராஜ்குமார் நடிக்கிறார்.
* 'ஆஹா' படத்தில் கதாநாயகனாக நடித்திருக்கும் ராஜீவ் கிருஷ்ணா, பரதன் இயக்கத்தில் அரவிந்தசாமி-ஸ்ரீதேவி நடித்த 'தேவராகம்' படத்தில் வில்லனாக நடித்தவர்.
* கமல் இயக்கி, நடிக்கும் 'மருதநாயகம்' படத்திற்கு இசையமைப்பவர் யார் என்று இன்னமும் அறிவிக்கவில்லை. ஆனால் 'மருதநாயகம்' படத்தின் ட்ரைலருக்கு (மாதிரிப்படம்) இசையமைத்திருப்பவர் இளையராஜாவின் மூத்த மகன் கார்த்திக் ராஜா.
* 'தலைவாசல்', 'அமராவதி' போன்ற படங்களைத் தயாரித்த சோழா கிரியேஷன்ஸ் நிறுவனம் அடுத்து பார்த்திபன் நடிக்கும் படமொன்றைத் தயாரிக்கவுள்ளது. 'மாணிக்கம்' படத்தை இயக்கிய கே.வி.பாண்டியன் இப்படத்தை இயக்கவுள்ளார்.
* நாகார்ஜுன் தெலுங்கில் நடித்து வெற்றி பெற்ற 'அன்னமாச்சார்யா' என்ற படம் தமிழில் மொழிமாற்றப்பட்டு வருகிறது. இந்தப் படத்தில் பானுப்பிரியா, ரோஜா, கஸ்தூரி, ரம்யா கிருஷ்ணன், ஸ்ரீகன்யா ஆகியோர் நடித்துள்ளனர்.
* 'பூமணி' படத்தை இயக்கிய களஞ்சியம் தற்போது 'கிழக்கும் மேற்கும்' என்ற படத்தை இயக்கி வருகிறார். விரைவில் இவர் ஏ.வி.எம். நிறுவனம் தயாரிக்கும் படமொன்றையும் இயக்கவுள்ளார்.
* மன்சூர் அலிகான்-ரஞ்சிதா ஜோடியாக நடிப்பதாக ஆரம்பிக்கப்பட்ட 'கண்ணாத்தாள்' படத்தில் இப்போது மன்சூர் அலிகான்-ரஞ்சிதாவுக்குப் பதிலாக கரண்-'விடுகதை' நீனா நடிக்கிறார்கள்.
* 'மாண்புமிகு மாணவன்' படத்தில் கவர்ச்சி நடனமாடிய ரீத்து, அண்மையில் வெளியான 'பெரிய மனுஷன்' படத்தில் முக்கிய வேடத்தில் நடித்திருக்கிறார். இவர் தனது பெயரை தற்போது அல்போன்ஷா என்று மாற்றியுள்ளார்.
* 'பூவே உனக்காக', 'லவ்டுடே', 'ஒன்ஸ்மோர்' ஆகிய தொடர் வெற்றிப் படங்களில் நடித்திருக்கும் விஜய், முதன் முறையாகப் படமொன்றைத் தயாரிக்கிறார். 'மகாபிரபு' வெங்கடேசன் இயக்கும் இப்படத்தில் ஹீரோவும் விஜய்தான்.

## பாண்டியராஜன் படம்

'காதல் கோட்டை' படத்தில் ஹிட்டான பாடல்களில் ஒன்று 'கவலைப்படாதே சகோதரா'. பாண்டியராஜன் நடிக்கும் புதிய படத்தின் பெயரும் அதுதான். பாண்டியராஜனின் ஜோடியாக நடிக்க இருப்பவர் சுவலட்சுமி. ஜனகராஜ், சார்லி, ராதாரவி, எஸ்.எஸ்.சந்திரன் ஆகியோரும் நடிக்கின்றனர்.

இயக்கம் கேயார். இசை: இளையராஜா. 'ஈரமான ரோஜாவே' உட்பட பல படங்களை இயக்கியவர் கேயார்.



ரவீனா டான்டன்

## ஜொள் மனுசன்

'பெரிய மனுசன்', 'தேடினேன் வந்தது', 'ஜானகி ராமன்'. சத்யராஜ், பிரபு, சரத்குமார் ஆகியோர் நகைச்சுவையில் கொடி நாட்டப் போட்டி போடுகிறார்கள்.

இந்தப் போட்டியில் முன்னணியில் நிற்பவர் பெரிய மனுசன்தான். 'தாய்மாமன்', 'மாமன் மகள்' ஆகிய வெற்றிப் படங்களை சத்யராஜுக்காக இயக்கியவர் குருதனபால். அந்த வெற்றிக் கூட்டணியின் மூன்றாவது படம் இது.

இரண்டு சத்யராஜ். பெரிய மனுசன் சத்யராஜ் மகா மகா ஜொள்ளர். அம்பிகா, சரளா இருவரும் ஜோடிகள். இளம் சத்யராஜுக்கு ஜோடி ரவளி. தோன்றும் போதெல்லாம் சத்யராஜை மட்டுமல்ல, எம்மையும் மிரட்டும் கவர்ச்சிக் குண்டு ரவளி.

பழைய மெட்டில் பாடல்களுக்கு இசை சேர்த்துள்ளார் தேவா. 'ஓஹோ எந்தன் பேபி, வாராய் எந்தன் பேபி' பாடலும், ஜொள்ளுச் சத்யராஜின் ஆட்டமும் தூள்! சிரிக்க உத்தரவாதம். ஜொள்ளர்களுக்கு மட்டுமல்லாமல், நகைச்சுவைப் பிரியர்கள், சண்டைப் பிரியர்கள், சென்டிமென்ட் ஆர்வலர்கள் என்று சகல தரப்பாரையும் திருப்தி செய்கிறார் பெரிய மனுசன்.



சத்யராஜ்-ரவளி 'பெரிய மனுசன்'

## ஹிட்டான பாடல்

'அவள் வருவாளா' என்ற பாடல் ஹிட்டான சூடு தணிவதற்கிடையில், புதிய படத்திற்கு பெயர் சூட்டி விட்டனர் 'அவள் வருவாளா'.

அஜித்குமார், சிம்ரான் இருவரும் ஜோடியாக நடிக்க உள்ளனர். நேருக்கு நேர் படத்தில் சூர்யா நடித்த பாத்திரத்தில் முதலில் நடித்தவர் அஜித்குமார்தான். பின்னர் சூர்யா நடித்தார். படத்தில் 'அவள் வருவாளா' என்ற பாடல் காட்சியில் நடித்தவரும் சூர்யாதான். அஜித் நடித்திருந்தால் அவருக்குத்தான் அப்பாடல் காட்சி கிடைத்திருக்கும்.

இப்போது அந்தப் பாடல் முதல் வரியை பெயராக சூட்டிய படத்தில் நடிக்கிறார் அஜித். அஜித்துடன் முதன் முதலாக ஜோடி சேர்கிறார் சிம்ரான். என்னாகப் போகுதோ!? இயக்கம் ராஜ்கபூர். இசை: எஸ்.ஏ.ராஜ்குமார்.

## நட்புக்காக நாச[...]

பசையுள்ள பக்கம் ஒட்டிக்கொள்வது[...] சினிமா உலக தந்திரம். சினிமா உலகில் உ[...] வித்தியாசமான நடிகர்களில் ஒருவர் நாசர்.

படைப்பாளிகள், தொழிலாளர்கள் பிரச்சனை[...] யார் மனமும் புண்படாமல் நடந்துகொண்[...] நாசர். இத்தனைக்கும் நாசரும் இயக்குநர்தா[...]

நாசரை தம் பக்கம் இழுக்க படைப்பா[...] தரப்பு பலத்த முயற்சி செய்தது. நாசர் போகவி[...] யார் பக்கமும் சாயாமல் இருந்தால் போதும் எ[...] படைப்பாளிகளும் அவரைத் தொல்லைப்ப[...] வில்லை.

ஆனால் மருதநாயகம் படத்தில் கமல[...] நடிக்க நாசர் முன்வந்தபோதுதான் படைப்பா[...] சீறினார்கள். "நடிக்கவேண்டாம், எங்களைப் ப[...] துக் கொள்ளாதீர்கள்" என்று தூதுமேல் [...] விட்டனர்.

பாரதிராஜா, பாலச்சந்தர் உட்பட [...] இயக்குநர்கள் எல்லாம் நாசருடன் பே[...] பேசினார்கள். "கமல் என் நண்பர். அவர் கூப்பிட்[...] நான் போயே ஆகவேண்டும். இதற்கும் உ[...] பிரச்சனைக்கும் சம்பந்தம் இல்லை" என்று கறார[...] கூறினாராம் நாசர். சொன்னதுபோல் மருதநா[...] படத்திலும் நடித்து விட்டார்.

'மகளிர் மட்டும்' படத்தில் நாசரை [...] நாயகனாக போட்டவர் கமல். தனது தயாரிப்[...] படங்கள் அனைத்திலும் நாசரை பயன்படுத்த[...] தவறுவதில்லை.

படைப்பாளிகளை பகைப்பதால் பட [...] புக்கள் பல பறிபோகும் என்று தெரிந்தும், நட்பு[...] இழப்புக்களை எதிர்கொள்ள துணிந்தார் ந[...] வித்தியாச மனிதர்தான்.

www.padippakam.com

## பொன்மனம்

பிரபுவை வைத்து படம் இயக்க ஒப்புக் கொண்ட பாலுமகேந்திரா பின்வாங்கி விட்டார். பிரபு கமல் பக்கம் நிற்பது பாலு மகேந்திராவுக்கு பிடிக்காத சமாச்சாரம்.

பிரபு நடிக்க பாலு மகேந்திரா இயக்க விருந்த படத்தின் தயாரிப்பாளர் பிரமிட் நடராஜன். பாலு மகேந்திரா போனால் என்ன? நான் பிரபு படத்தை எடுத்தே தீருவேன் என்று கூறுகிறார். கே.எஸ்.ரவிக்குமாரின் உதவியாளராக இருந்த எஸ்.பி.ராஜ்குமார் இயக்கத்தில் படம் தயாராகிறது. 'பொன்மனம்' என்று பெயர் சூட்டியுள்ளனர். பாடகராக நடிக்கிறார் பிரபு. இசை: எஸ்.ஏ. ராஜ்குமார்.

## 'ஹாட் அட்டாக்'

'ரட்சகன்' படத்தில் காதல் என்பதற்கு புதுவார்த்தை கண்டுபிடித்திருக்கிறார்கள். 'ஹாட் அட்டாக்'. சுஷ்மிதா சென் அடிக்கடி அந்த வார்த்தையைச் சொல்கிறார். சுஷ்மிதாவை அடிக்கடி நாகார்ஜுன் உதட்டோடு உதடாக கவனிக்கிறார். தாராளத்தின் எல்லைவரை சென்றும் சுஷ்மிதாவை பத்திரிகைகள் பாராட்டவில்லை. ரசிகர்களுக்கும் 'ஹாட் அட்டாக்' ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

## சிரிப்பு வெடி

நகைச்சுவைப் படங்களுக்குத்தான் இப்போது மவுசு. தீபாவளிப் படங்களில் அநேகமாக எல்லாப் படங்களுமே கல கல கல.

மணிவண்ணன் காட்டிலும் மழை. பெரிய மனுசன், ஜானகி ராமன், விடுகதை, பொற்காலம் என்று மணிவண்ணன் வெளுத்துக் கட்டியிருக்கிறார். 'தேடினேன் வந்தது' படத்தில் கவுண்டமணி இருக்கிறார்.

புதுமுகங்கள் நடித்துள்ள 'ஆஹா' படத்திலும் நகைச்சுவைக்குத்தான் முதலிடம். குறைந்த செலவில் நிறைந்த வசூல். ஒருவேளை தோல்வியானால்கூட கையைக் கடிக்காது. அதுதான் நகைச்சுவைப் படங்களுக்கு முதலிடம் கொடுக்கிறார்கள்.

## சிம்ரான் சொன்ன இரகசியம்

அப்பாஸ் தனது முறைப்பெண்ணை கல்யாணம் பண்ணிக் கொண்டதால் சிம்ரானுக்கு வருத்தம் இல்லையாம். அதை நிரூபிக்க ஒரு இரகசியத்தை அவிழ்த்து விட்டிருக்கிறார்.

'காதல் தேசம்' படத்தில் அப்பாஸ் நடித்துக் கொண்டிருந்தபோதே முறைப்பெண் வந்து அவரைச் சந்திப்பாராம். சென்னையில் உள்ள ஹொட்டல் ஒன்றில் இருவரும் அடிக்கடி தனிமையில் இனிமை கண்ட சமாச்சாரமும் சிம்ரானுக்கு தெரியுமாம்.

சிம்ரான் பைத்தியம் ரசிக மகா ஜனங்களுக்கு அதிகமாகி இருந்தாலும், கடைத் தெருவுக்குக்கூட தனியாகத்தான் செல்கிறார் சிம்ரான். அப்போது யாரும் அவரை தொந்தரவு பண்ணுவதில்லையாம். பார்த்தும் பார்க்காத மாதிரிப் போகிறார்களாம்.

என்ன காரணம் தெரியுமா? கடைத் தெருவுக்கு செல்லும்போது சிம்ரான் மேக்கப் போடாமல்தான் செல்கிறார்.

## கமலுக்குப் பாராட்டு

மருதநாயகம் பட விழாவில் தன்னைக் கவர்ந்த விஷயங்களை சத்யராஜ் பட்டியலிட்டு பாராட்டியிருக்கிறார்.

* முதல்வர் கலைஞர் பேசியதைக் கேட்டபோது கமல் என்ற சிறந்த கலைஞனைப் பார்த்தேன்.

* பூஜை புனஸ்காரம் எதுவும் இல்லாமல் விழாவை நடத்தியதில் கமல் என்ற பெரியாரின் சீடனைப் பார்த்தேன்.

* விழாவில் ஈ.வெ.ரா. அவர்களின் படத்தையும், மருதநாயகம் வேடத்தைச் சட்டென்று கலைத்துவிட்டு கறுப்புச் சட்டையும், வேட்டியும் அணிந்துவந்து நின்ற காட்சியையும் பார்த்தபோது கமல் என்ற தீவிர பகுத்தறிவாளனைப் பார்த்து மகிழ்ந்தேன். என்று பாராட்டியுள்ளார் சத்யராஜ்.






வேலுபிரபாகரன்-ரோஜா
படம்: கடவுள்

## கஸ்தூரி தீவிரம்

கமலின் மருதநாயகத்தில் நடிப்பதற்காக சில நடிகைகள் தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். அவர்களில் முதலிடத்தில் இருப்பவர் கஸ்தூரி. 'காதலா காதலா' படத்தில் மீனா நடிக்காமல் நழுவியது தப்பு என்று பகிரங்கமாகவே சாடுகிறார் கஸ்தூரி.

இப்படியெல்லாம் பேசியாவது கமலின் கவனத்தை ஈர்க்க படாதபாடு படுகிறார் கஸ்தூரி என்கிறார்கள் படைப்பாளிகள் தரப்பில் உள்ள நடிகைகள்.

## சாக்சி 420

'மகளிர் மட்டும்' படத்தை இந்தியில் எடுப்பதை ஒத்திவைத்துவிட்டு 'அவ்வை சண்முகி' படத்தை 'சாக்சி 420' என்ற பெயரில் தயாரித்து முடிப்பதில் ஆர்வம் காட்டினார் கமல். கமல் முதன் முதலாக இயக்கும் படம் என்பதால் கமல் ரசிகர்களுக்காக தமிழ் நாட்டிலும் திரையிடப்பட இருக்கிறது சாக்சி 420.

இந்திப் பட ரசிகர்களின் நாடித் துடிப்பை அறிந்தவர் கமல். அதனால்தான் முதலில் 'சாக்சி 420'ஐ இயக்க இருந்தவரான சந்தனு ஷிராரேயுடன் கமலுக்கு கருத்து முரண்பாடு ஏற்பட்டது. சந்தனு புதிய இயக்குநர். அதனால் கமலுடன் அவர் ஒத்துப் போயிருக்க வேண்டும் என்று மும்பாய் படவுலகத்தினரே கூறுகிறார்களாம்.

முகப்பில் நாசர் மீனா
படம்~மருதநாயகம்

## ...லந்திப் பயம்

...நடிகைகளுக்கு கரப்...ன் பூச்சி என்றால் பயம். ...ால் நடிகை சுவலட்சு...து கரப்பான் பூச்சி ...றால் நோ பயம். சிலந்...த்தான் பயப்படுவார். ...த்தில் அவரது காரில் ...ந்தி ஒன்றை கண்டு ...டு வில் என்று கத்தி...ராம். பின்னர் உரிய ...த்தில் கதாநாயகன் ...வதுபோல ஒருவர் ...சிலந்தியை சங்காரம் ...த பின்னர்தான் சுவ...மி மூச்சுவிட்டாராம்.

...ருவ நிலா அருகில் வர
...ம் நழுவிப் பாலில் விழ
...ரக்கம் வந்தே
...கிச் செல்ல
...லவன் வந்தான்
...வைச்
...ல்ல"



வெங்கடேஷ்-நக்மா
படம்: எங்க ஊர் சிங்கம்

# திரையுலக மறுபக்கம் 30 போதைக்கு அடிமையான நடிகை!

## கணவனே வில்லனான சோகம்

லட்சுமிகரமான நடிகையின் வாரிசு நடிகை பற்றி சென்றவாரம் கூறியிருந்தோம். ஐசான அந்த வாரிசு நடிகை பற்றி மேலும் சில தகவல்கள்.

நடிக்கும்போது கிடைத்த வருமானத்தால் நடிகைக்கு தலைகால் புரியவில்லை. கட்டுக்கட்டாக பணத்தைப் பார்த்தவருக்கு தாயின் கண்டிப்புக்கள் எரிச்சலை ஏற்படுத்தின.

லட்சுமிகரமான நடிகையின் தாயாருக்கு மகளைப் பிடிக்காது. மகளைப் பழிவாங்க பேத்தியான ஐஸ் நடிகையை பயன்படுத்த ஆரம்பித்தார். பாட்டியின் சொற்கேட்டு பேத்தியும் தாயாரைப் புறக்கணித்தார். தனியாக பாட்டியோடு சென்று தங்கினார்.

ஐஸ் நடிகையிடம் இன்னொரு பலவீனமும் இருந்தது. தன்னுடன் கூட நடித்த இளம் நடிகைகளுடன் நெருக்கமாகிவிடுவார். அது சாதாரண நெருக்கமல்ல, பலவீன நெருக்கம்.

இந்த விவகாரம் பற்றி பத்திரிகைகள் சிலவற்றிலும் அரசல் புரசலாக எழுதத் தொடங்கினார்கள். ஆனாலும் ஐஸ் நடிகையால் தன் பழக்கத்தை நிறுத்திக்கொள்ள முடியவில்லை.

அப்போது பிரபலமாக இருந்த சில முன்னணி நடிகைகளையும் பழக்கம் பிடித்துக் கொண்டார் ஐஸ் நடிகை. முதலில் தங்கள் வீடுகளில் சந்திப்புக்களை வைத்துக்கொண்டனர். அதையும் தாண்டி ஒரு மாற்றத்திற்காக ஹொட்டல்களில் அறை எடுத்து தங்கியபோதுதான் போதையையும் நாடினார்கள்.

அதன் பின்னர்தான் நடிகையின் பலவீனங்கள் பெரியளவில் பேசப்படத் தொடங்கின. இதனால் 'இந்த நடிகையுடன் பேசினால், தங்களையும் இணைத்து எழுதிவிடுவார்களோ' என்று பல நடிகைகள் ஓட்டம் பிடித்தனர்.

திருமணமான பின்னரும் சில நடிகைகளுடன் 'ஐஸ்' நடிகை தன் நட்பை பேணிவந்தார். இது கணவருக்கும் தெரியும். அப்படி தொடர்பு வைத்திருந்த ஒரு நடிகையுடன், ஐஸ் நடிகையின் கணவர் சபலப்பட்டார். விஷயம் 'ஐஸ்' நடிகைக்கு தெரியவர, பெரிய கலவரமே ஏற்பட்டுவிட்டது.

### போதைவியாபாரி

ஐஸ் நடிகையின் கணவரும் போதைக் கடத்தல்காரர்தான். 'ஐஸ்' நடிகைக்கு போதை மருந்தை விநியோகம் செய்வதில்தான் முதலில் பழக்கம் ஏற்பட்டது. அந்தப் பழக்கம்தான் பின்னர் காதலாகி கல்யாணம் வரை சென்றது.

நடிகை போதை மயக்கத்தில் பல தடவை தன்னை பயன்படுத்த அனுமதித்து இருக்கிறார். ஆனாலும் நடிகையை திருமணம் செய்து கொண்டால், அவரை வைத்து பிழைப்பு நடத்தலாம் என்ற திட்டத்துடன்தான் அவரைக் கல்யாணம் செய்துகொண்டார். நடிகையும் மதம் மாறினார். பெயரையும் மாற்றிக்கொண்டார்.

திருமணத்தின் பின்னர் சில நாட்கள் சென்றவுடனேயே தன் கணவரின் சுயரூபம் நடிகைக்கு புரிந்துவிட்டது. சினிமாப் படங்களில் வருவதுபோலவே கணவர் வில்லனாக மாறினார். தான் கைகாட்டுகிறவர்களுடன் படுக்கையை பகிர்ந்து கொள்ளச் சொன்னார்.

நடிகை மறுத்தபோது போதை ஊசியை எடுத்து ஒளித்து வைத்துவிடுவார் கணவர். போதைக்கு அடிமையான நடிகையால் அது இல்லாமல் இருக்க முடியாது. பைத்தியமே பிடித்துவிடும். அதனால் கணவரின் விருப்பப்படி நடந்துகொள்ள இணங்கினார்.

போதை மருந்துப் பாவனை ஒருபுறமும், தூக்கமில்லாத இரவுகள் மறுபுறம் என்று உடல் இளைத்து ஓடாகத் தேய்ந்துபோனார் நடிகை.

இதற்கிடையே நடிகைக்கு ஒரு குழந்தையும் பிறந்தது. அக்குழந்தையை கொன்றுவிடுவோம் என்று மிரட்டி மிரட்டியே கணவரும், அவரது சகோதரரும் நடிகையை தொழிலுக்கு பயன்படுத்தி சக்கையாகப் பிழிந்தனர்.

### விளாசல்

இடையே ஒரு படத்தில் ஒரே ஒரு பாடல் காட்சியில் மட்டும் தோன்றி ஆடினார் நடிகை. அதற்கு கிடைத்த சம்பளத்தை கணவர் பறித்து வைத்துக்கொண்டார். படப்பிடிப்பில் யாரிடமாவது நடிகை தன் கஷ்டங்களைக் கூறி உதவி கேட்கலாம் என்று சந்தேகப்பட்ட கணவர், கூடவே வந்திருந்து கவனித்துக்கொண்டிருந்தார்.

படத்தின் இயக்குநரோடு நடிகை சிரித்துச் சிரித்துப் பேசியதை கணவர் கண்டுவிட்டார். அன்று இரவு நடிகையை விளாசித் தள்ளினார் கணவர்.

தினமும் ஒருவர் என்பதுபோய், தினசரி ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களை அழைத்து வந்தனர் கணவரும், அவரது சகோதரரும். நடிகையால் அதற்கு மேலும் பொறுக்கமுடியவில்லை. எப்படியோ தாயாருக்கு தகவல் கொடுத்து அனுப்பினார்.

மகளின் நிலை அறிந்த தாயார் பொலிசில் புகார் செய்தார். பத்திரிகைகளின் உதவியையும் நாடினார். அதன் பயனாகவே நடிகை இறுதியில் அந்த நரகத்தில் இருந்து மீட்கப்பட்டார்.

கடந்த சில வருடங்களாக போதையை தொடாமல் இருந்த ஐஸ் நடிகை சமீபத்தில் மறுபடி போதையை நாடத் தொடங்கியிருப்பதாக கூறப்படுகிறது.


படிப்பகம்

## லேடீஸ் ஸ்பெஷல்

உஷ்ணமான உடம்புள்ள குழந்தைகள் தாய்ப்பால் சாப்பிடும்போது தேகம் குளிர்ச்சியடையும். குளிர்ச்சியான உடம்புள்ள குழந்தைகள் தாய்ப்பால் குடித்தால் தேகம் உஷ்ணமடையும். பிறவியிலேயே அமையும் இத்தகைய தேகத்தின் சீதோஷ்ண நிலைகளை மாற்றும் சக்தி தாய்ப்பாலுக்கு மட்டுமே இருப்பதால் 'தேவாமிர்தம்' எனப்படுகிறது.



குழந்தை பிறந்த பிறகு ஓராண்டுக்கு மட்டுமல்ல பல ஆண்டுகளுக்கும் தேவையான சீரான வளர்ச்சியையும் நோய் எதிர்ப்புச் சக்தியையும் குழந்தைக்கு, தாய்ப்பால் கொடுக்கிறது. தாய்ப்பால் குடிப்பதால் குழந்தைக்கு எல்லா தோஷங்களும் விலகும். உஷ்ண சீதோஷ்ண சீதம் தணியும். வாத பித்தம், மூளைக்காய்ச்சல், நாவறட்சி, சந்திக் காய்ச்சல் ஆகியவை வராது. குழந்தையின் வளர்சிதை மாற்றத்துக்கு அரிய உணவாகிறது தாய்ப்பால்.

விஷக்காற்றால் விளையும் கொலரா, வாந்திபேதி மூளைக்காய்ச்சல் போன்றவை தாய்ப்பால் குடிக்கும் குழந்தைக்கு வருவதில்லை.

தாய்ப்பால் குடிக்கும் குழந்தைகளின் மரணவிகிதம் குறைவே, தாய்ப்பால் குடிக்கும் குழந்தைகள் மன உற்சாகம் அடைவதால் தேக பூரிப்புடன் வளர்கின்றன. குழந்தைகள்

## தாய்ப்பால் அமுதம்

தாய்ப்பாலை உறிஞ்சிக் குடிக்கும் பொழுது தாய்க்கு அதன் மேலுள்ள அன்பும் அதை பாதுகாக்க வேண்டுமென்ற உணர்வும் மனச்சாந்தியும் உண்டாகிறது. குழந்தைகளின் ஆரம்பகால பிரச்சனைகளான கண் நோய்க்கு தாய்ப்பால் ஒன்றிரண்டு சொட்டு கண்களில் பீய்ச்சுவது குணமாக்கும்.

காய்ச்சல் வந்தால் மெல்லிய துணியில் தாய்ப்பாலைத் தடவி நெற்றிமீது பற்றுப்போட காய்ச்சல் குணமாகும். குழந்தைக்கு ஒன்றரை ஆண்டுவரை தாய்ப்பால் கொடுத்து வந்தால் தீவிரமான நோய்களான புற்றுநோய், நீரழிவு, ரத்த அழுத்தம் ஆகியவைகள் வருகிற வாய்ப்பு குறையும்.

தாய்ப்பால் கொடுத்து வருகிற தாய் உடனே கருத்தரிக்க மாட்டாள். தாய்ப்பால் சிறந்த நஞ்சு முறிப்பு நாசினி என்பதால் சித்த மருத்துவர்கள் லிங்கம், வீரம் போன்ற பாஷாணங்களை தாய்ப்பாலில் ஊறவைத்து பக்குவப்படுத்துகிறார்கள்.

தாய்ப்பாலை உச்சந்தலையில் தேய்த்தால் தலைவலி தீரும். தாய்ப்பாலுடன் கொஞ்சம் இஞ்சிச் சாற்றைச் சேர்த்து மிளகு 5 சேர்த்து அரைத்து 50 மில்லி நல்லெண்ணெய் கலந்து காய்ச்சி அதை தலையில் தேய்த்து குளித்து வந்தால் மண்டை பீனிசம் காரணமாக வரும் ஒற்றைத் தலைவலி விலகும்.

## முதுகுவலி போகலையா?

முதுகு வலி.. முதுகு வலி யாரைக் கேட்டாலும் முதுகு வலி. எங்கு வேலை செய்பவர்களைக் கேட்டாலும் முதுகுவலி.

இப்படி முதுகு வலி ஏன் ஒரேயடியாய் ஆட்டிப் படைக்கிறது? முதுகுவலி இன்று நேற்றல்ல மனிதர்களுக்கு ஆரம்பகாலம் தொட்டே இருந்து வருகிறது.

மனிதர்கள் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு நகர்ந்து சென்று வேலை பார்ப்பது குறைந்து ஒரே இடத்தில் உட்கார்ந்து வேலை பார்க்கும் நிலை வந்து விட்ட பின்பு இந்த முதுகு வலி வேகமாக தாக்க ஆரம்பித்துவிட்டது.

மனிதர்களுக்கு முதுகுவலி ஏற்பட முக்கிய காரணம் வேடிக்கையானது. ஏனென்றால் மனிதனின் முதுகெலும்பு நிமிர்ந்து நிற்பதற்கு உதவும் வகையில் அல்லாமல் விலங்குகளுக்கு இருப்பது போன்ற அமைப்பில் அமைந்திருக்கிறது. ஆரம்ப காலத்தில் மனிதன் தவழ்ந்தே பல நூற்றாண்டுகள் வாழ்ந்துள்ளான். பிறகுதான் படிப்படியாக இரண்டு கால்களில் நடக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டான்.

தவழ்ந்து நடந்தபோது முதுகெலும்பின் இயக்கம் புவியீர்ப்பு விசைக்கு ஏற்ப இருந்தது. இயற்கையான நிலையை மாற்றிய பின்பு புவியீர்ப்பு நிலைக்கு அப்பால் போனதால் உடம்பின் கனமான பகுதிகளை தாங்கும் பொறுப்பும் முதுகெலும்புக்கு வந்து விட்டது.

சரி. முதுகு வலியை தவிர்ப்பது எப்படி.?

* நீங்கள் நிமிர்ந்த நிலையில் வேலை செய்வதை வழக்கப்படுத்திக் கொள்ளுங்கள்.
* உட்காரும் நாற்காலி கூட நேரான நிலையில் இருக்க வேண்டும்.
* உடலில் கூடுதல் எடைபோட விடாதீர்கள். எடை கூடினால் முதுகு வலியும் சேர்ந்து விடும்.
* மாதவிலக்கு நிரந்தரமாக நின்றபின் பெண்களுக்கு முதுகுவலி வர வாய்ப்பு அதிகம். ஏனெனில் எலும்புகளில் கல்சியம் சத்து அப்போது குறையும். இதனால் முதுகெலும்பும் பலவீனம் அடைந்து முதுகு வலி ஏற்படும்.
* எனவே கல்சியம் அதிகம் உள்ள உணவுப் பொருட்களையும், வைட்டமின் 'டி' உணவுகளையும் அதிகம் சேர்த்துக் கொள்ள வேண்டும்.
* முதுகெலும்பின் இயக்கம் அதனைச் சேர்ந்திருக்கும் தசைகளையும் சார்ந்துள்ளது. இந்த தசைகளை தினமும் உடற்பயிற்சி செய்வதன் மூலம் வலுவாக வைத்துக் கொள்ளலாம். அதோடு முதுகெலும்பு அருகே அனாவசியமாக ஊளைச் சதை எடையும் குறைந்துவிடும்.
* முதுகு வலியை நீக்க வேண்டும் என்பதற்காக கடுமையான மசாஜ் செய்யக் கூடாது முறைப்படி சிகிச்சை பெற வேண்டும்.
* விட்டு விட்டு முதுகுவலி ஏற்பட்டாலும் டாக்டரை அணுகி சிகிச்சை பெறுவது நல்லது.
* மிக உயரமான ஹைஹீல்ஸ் செருப்பு அடிக்கடி அணிவதை தவிர்க்க வேண்டும். நீண்ட நேரம் அணியக்கூடாது.

தொகுப்பு:- திருமதி. எஸ். தேவிகா.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் | மகளிர் மட்டும்



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** CS

பெயர்:.........................

முகவரி:.........................

.........................

கையொப்பம்:.........................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 29-11-1997

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


# கண்ணீரில் கரைந்த இரவுகள் 10

புவனா

டயானாவின் மூத்த சகோதரி ஜேனின் திருமணத்தின் முன்னரும் இளவரசர் சாள்ஸ் டயானாவை சந்தித்திருக்கிறார்.

1961ம் ஆண்டு குளிர்காலத்தில் டயானா குழந்தையாகத் தொட்டிலில் கிடந்தபோது தான் முதன்முதலாக பார்த்தார் சாள்ஸ்.

அப்போது இளவரசர் சாள்ஸுக்கு 12 வயது. டயானா சிறு குழந்தையாக இருந்த போதும் சாள்ஸ் பார்த்திருக்கிறார்.

அப்போது பார்த்ததுக்கும் இப்போது பார்ப்பதற்கும் இடையே நிறைய வித்தியாசம் இருந்தது.

மணப்பெண்ணின் தோழியாக, இளமை பூத்துக் குலுங்கும் பருவப் பெண்ணாக, காந்தக் கண்களால் எதிரே நிற்போரை கவர்ந்திழுக்கும் பெண்ணாக டயானா காட்சியளித்தார்.

டயானாவும் இளவரசர் சாள்ஸ்சின் கண்கள் தன் அங்கங்களில் பட்டு மீள்வதையும், சலனப்படுவதையும் காணவே செய்தாள்.

ஆண்களின் கண்கள் அழகான இளம் பெண்களின்மீது எங்கெங்கு பட்டுத் தாவும், பாய்ந்து மேயும் என்று டயானாவும் அவள் தோழிகளும் அடிக்கடி குறும்பாக விவாதிப்பது வழக்கம்.

செமர்த்தியான குறும்புக்காரியான டயானாவுக்கு சாள்ஸ்சின் கண்களை வைத்தே அவர் மனதை எடைபோடுவது கடினமாக இருக்கவில்லை.

டயானாவை இளவரசர் சாள்ஸ் தவிர இன்னொருவரும் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தார். அந்த இன்னொருவர் பார்வை தன்மீது தாவித் திரிவது டயானாவுக்கும் தெரியவில்லை.

அந்த இன்னொருவர் வேறு யாரும் இல்லை. இளவரசர் சாள்ஸ்சின் பாட்டியான எலிசபெத் மகாராணியின் தாயார்தான் டயானாவின் நடவடிக்கைகளை கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தார்.

இளவரசர் சாள்ஸுக்கு அப்போது 30 வயது. திருமணம் செய்து வைக்க வேண்டிய பொறுப்பு மகாராணி குடும்பத்திற்கு.

தங்களுக்கு பொருத்தமான மணமகளை தேடிக்கொண்டிருந்தனர் மகாராணியும், அவரது தாயாரும்.

திருமண வீட்டில் மான்குட்டிபோல துருதுருவென்று துள்ளித்திரிந்த டயானா மகாராணியின் தாயாரை மட்டுமல்ல, மகாராணியின் கவனத்தையும் ஈர்க்கத் தவறவில்லை.

### சாள்ஸ்சின் சந்தோசம்

டயானாவைக் கண்ட பின்னர், இளவரசர் சாள்ஸுக்கு இருப்பே கொள்ளவில்லை. மனதுக்குள் பட்டாம் பூச்சிகள் பட படத்தன.

டயானாவின் சகோதரி சாரா பத்திரிகைப் பேட்டி ஒன்றில் இளவரசர் சாள்ஸ் தனக்கு மூத்த சகோதரர் போன்றவர் என்று கூறியதால் சாள்ஸ் வருத்தம் அடைந்திருந்தார்.

அந்த வருத்தத்தை டயானாவின் கண்கள் காணாமல் செய்துவிட்டன.

டயானாவை கண்ட தினத்தன்று, தன் சந்தோசத்தை பகிர்ந்து கொள்ள இளவரசர் சாள்ஸ் நாடியது யாரைத் தெரியுமா?

கமீலாவை!

வழக்கத்தைவிட ஈடுபாடாக கமீலாவை முத்தத்தால் நனைத்தார் சாள்ஸ்.

கமீலாவை டயானா என்று நினைத்துக் கொண்டு, கமீலாவின் உதடுகளை டயானாவின் உதடுகளாக கற்பனை செய்துகொண்டு, ஆழமான முத்தங்களால் கமீலாவை திணறடித்தார் சாள்ஸ்.

இளவரசர் சாள்ஸின் வேகம் முத்தங்களில் மட்டுமல்ல, எல்லாவற்றிலுமே பிரதிபலித்தது.

கமீலாவுக்கு அது புதுமையாக இருந்தது. அதனால் சாள்ஸ்சை குடைந்து உண்மையை அறிந்து கொண்டார்.

"டயானா இளமையானவள், தமாஷானவள், துடுக்கானவள்" என்று கமீலாவிடமே வர்ணித்திருக்கிறார் சாள்ஸ்.

கமீலாவுக்கு தனது இடத்தில் இன்னொரு பெண் போட்டியாக வருகிறாளே என்று பொறாமை ஏற்படவில்லை.

கமீலாவிடம் பெற்ற பயிற்சியைப் பல பெண்களிடம் பரிசீலித்துப் பார்த்தார் சாள்ஸ்.

அந்த தகவல் எல்லாம் கமீலாவுக்குத் தெரியும். எந்தப் பெண் சாள்ஸ்சின் இதயத்தில் இடம்பெற்றாலும், அவரால் தன்னை மறக்க முடியாது என்ற நம்பிக்கை கமீலாவுக்கு இருந்தது.

அதனால் சாள்ஸ் டயானாவைக் காதலிக்க கமீலா தடையாக இருக்கவில்லை.

ஏதாவது ஒரு சாக்குப்போக்குக் கூறிக் கொண்டு டயானா வீட்டுக்குச் சென்றுவரத் தொடங்கினார் சாள்ஸ்.

## திருட நினைத்தார் சாள்ஸ்



டயானா மெல்லிய நீச்சல் உடையுடன் காணப்பட்ட படம்தான் அது.

டயானாவின் தந்தை யாருடன் பேசிக் கொண்டிருந்தாலும், சாள்ஸ்சின் கண்கள் டயானாவைத் தேடி அலையும்.

### திருட நினைத்த படம்

டயானாவின் வீட்டில் புகைப்பட ஆல்பம் ஒன்றை இளவரசர் சாள்ஸ் பார்வையிடக் கிடைத்தது.

அந்த ஆல்பத்தில் டயானாவும் அவள் சகோதரிகளும் பலவிதமான கோணங்களில் காணப்பட்டனர்.

அவற்றில் ஒரு படம் இளவரசர் சாள்ஸ்சின் கண்களை விரியச் செய்தது. படபடப்பையும் ஏற்படுத்தியது. லேசாக உடலை சூடாக்கியது.

டயானா மெல்லிய நீச்சல் உடையுடன் காணப்பட்ட படம்தான் அது.

ஆல்பத்திலிருந்து அந்தப் படத்தை உருவி எடுத்துக்கொண்டு போய்விடலாமா என்றுகூட நினைத்தார் சாள்ஸ். ஆனால் அது நாகரிகக் குறைவு என்று அந்த எண்ணத்தை கைவிட்டுவிட்டார்.

அந்தப் படம் பொல்லாத கற்பனைகளை வளர்த்தது என்றால், இன்னொரு படம் பொறாமையை ஏற்படுத்தியது.

ஒரு அழகான வாலிபன் டயானாவை தன்கைகளில் ஏந்திக்கொண்டிருந்தான். இருவருமே சிரித்துக் கொண்டிருந்தனர்.



சாள்சுக்குப் பொறாமை

டயானாவின் கால்கள் பளீரிட்டுக் கொண்டிருந்தன. வாலிபனின் கரங்கள் டயானாவின் தொடைகளை தாங்கி ஏந்திக் கொண்டிருந்தன.

இளவரசர் சாள்ஸின் முகம் கறுத்து விட்டது. அவரது நெற்றி வியர்த்தது. இதயத் துடிப்பு எகிறியது. கைக்குட்டையை எடுத்து தன் நெற்றியை ஒற்றிக் கொண்டார்.

யார் இந்த வாலிபன்? டயானாவின் காதலனா?

குழந்தைபோல அவளைத் தூக்கி வைத்திருக்கும் அளவுக்கு உரிமை பெற்றவனாக இருக்கிறானே?



யார் இவன்?

அந்த வாலிபனைப் பார்க்கப் பார்க்க சாள்ஸுக்கு வில்லனைப் பார்ப்பதுபோன்று இருந்தது.

### வெற்றிக் கோப்பை

டயானாவின் சகோதரி சாராவிடம் 'அந்தப் படத்தில் இருக்கும் வாலிபன் யார்?' என்று விசாரித்தார் சாள்ஸ்.

கேள்வியை கேட்டுவிட்டு, சாரா பதில் சொல்வதற்கிடையே இளவரசர் சாள்ஸின் இதயம் பந்தயக் குதிரைபோல தடதடத்துக் கொண்டிருந்தது.

டயானாவுக்கும் சகோதரிகளுக்கும் கிரிக்கெட் என்றால் உயிர். தோழிகளுடன் சேர்ந்து கிரிக்கெட் அணியொன்றும் வைத்திருந்தார்கள்.

உள்ளூர் அணிகளுக்கிடையே போட்டிகள் நடத்திக் களிப்பார்கள். வெற்றிக் கோப்பைகளும் பரிசளிக்கப்படும்.

டயானாவின் சகோதரரான் சாள்ஸ் ஸ்பென்சரின் நண்பர்களும், கிரிக்கெட் குழுவில் இருந்தனர். ஆண்களும், பெண்களும் கலந்த கிரிக்கெட் அணியாக அது இருந்தது.

ஜேம்ஸ் ஹெயின்ஸ் என்னும் இளைஞனும் அந்த அணியில் இருந்தான். சாள்ஸ் ஸ்பென்சரின் நண்பன். டயானாவுடனும் நெருக்கம்.

உள்ளூர்போட்டியொன்றில் பங்கு பெற முன்னர் டயானாவுக்கும் ஜேம்ஸ் ஹெயின்சுக்கும் இடையே ஒரு பந்தயம்.

போட்டியில் தங்கள் அணி வென்றால், டயானாவைத் தூக்கிக்கொண்டு மைதானத்தை சுற்றி ஓட டயானா அனுமதிக்கவேண்டும் என்றான் ஜேம்ஸ் ஹெயின்ஸ்.

டயானாவும் சம்மதித்தாள்.

அணி வெற்றிபெற்றது.

வெற்றிக்கோப்பையும் கிடைத்தது.

ஜேம்ஸ் ஹெயின்ஸ் என்ன செய்தால் தெரியுமா?

டயானாவை வெற்றிக் கோப்பையா தன் கைகளில் ஏந்திக் கொண்டு மைதானத்தைச் சுற்றி வந்தான்.

"பூங்கொத்து ஒன்றை சுமப்பது போல இருக்கிறது" என்றானாம் ஜேம்ஸ் ஹெயின்ஸ்.

"போடா முட்டாள்!" என்று அவன் அணிந்திருந்த தொப்பியை கழற்றி வீசியெறிந்தாளாம் டயானா.

சாரா இதைச் சொல்லிச் சிரித்தபோது பதிலுக்குச் சிரிக்க மிகக் கஷ்டப்பட்டார் சாள்ஸ்.

அதன்பின்னர் அடுத்தடுத்து பல சுவையான சம்பவங்கள் நடக்கத் தொடங்கின. (அடுத்த வாரமும் வரும்)


### இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? திருகோணமலை வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்
சு. கமலநாயகி,
101, அருணகிரி வீதி, திருகோணமலை.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசகவாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

## நெருப்பு

பஞ்ச பூதங்களில் ஒருவன் நான்!
பஞ்சே எனது–
முதல் பகைவன்!
**
தீபம் என் புன்னகை
காட்டுத் தீ–
என் கடுங்கோபம்!
**
மனிதர்கள் உங்களைப் போலவே
நானும்
'இரண்டின்'–
உரசல்களின் போதுதான்
உற்பத்தியாகிறேன்!
**
பொழிவதில் அழகு மழை போல,
அழிவதில் அழகு வானவில் போல,
மணப்பதில் அழகு மலர்கள் போல,
எனது அழகு, எனக்கு அழகு–
எரிந்து பின், எரிப்பதில்தான்!
**
ஆதவனே எந்தன்
ஆதி மூலம்!
மின் மினி எந்தன்
சுடாத நகல்!
**
பூமியும் நானும்
பிரிய நண்பர்கள்தான்;
இடக்கு முடக்காய்
பூமி நடக்கும் போதுதான்...
சில வேளைகளில்
எரிமலையாய் நான்–
எரிந்து விழுகிறேன்!
**
மானிட நண்பனே...!
காதலி தரும முத்தங்கள்
தகிக்கும் உன் கோபத்தை
தணிப்பது மாதிரி..
கொழுந்து விட்டெரியும்
எனது கோபத்தை
தணிப்பதென்னவோ...
தண்ணீர்த் துளிகள்தான்!
**
என்றாலும் இறுதியாய்
ஒன்று மட்டும் சொல்வேன்!
என்னதான் நான்
குடானவனென்றாலும்...
கொடு மனிதர்கள் சிலரின்
மனங்களின் முன்னால்
என்–
எரிவெப்பம் என்னவோ
இரண்டாம் பட்சமே...!

யூயெல் மப்றூக் –
அட்டாளைச்சேனை.

## கண்ணோடு கண்ணினை கௌவி

முதல் தடவலில்
எந்தக் கருவியும்
இனிய இசை
தருவதும் இல்லை!
•••
முதல் பேச்சில்
எந்த மொழியும்
எவரது நாவுக்கும்
வசப்படுவதும் இல்லை!
•••
முதல் அடியில் எந்த
யுத்தமும்
வெற்றி
பெறுவதும் இல்லை!
•••
எந்த அமைதியும்
முதலாம் தடவையில்
எந்த நாட்டிற்கும்
கிடைத்ததும் இல்லை!
•••
முதல் துளியில்
எந்த நிலமும்
நனைவதும் இல்லை;
பிணைவதும் இல்லை!
•••
யோசித்து, சிந்தித்து
பொருத்தங்கள் பார்த்து
இனம், மதம்
மொழி பார்த்து
'ஏதாவது' வந்தால்
அதன் பெயர் காதலா?
•••
முதல் பார்வையில்
உருவாகா காதல்
காதலே அல்ல!

சுபா வரன்–கண்டி.

## கொ(ல)லை 'நீ'

பதினோராம்
கொலை 'நீ'
எனக்
கோணேஸ்வரி
பரிதவித்து
உயிர்விட்டாள்!
•
அந்தத் தாயிலும்
இருப்பிடம்
தேடி அழிக்கப்பட்டது.
•
நீ பிள்ளையே
பெறகூடாது
என்று
கிரனேட் பேசியது!
•
கணக்குகளிலும்
தடுமாற்றம்;
முன்னுக்குப் பின்
முரண்பாடுகள்!
•
நாலாம்
கொலை 'நீ'
என ஒன்றுக்கு
மேற்பட்டவர்களது
உயிர்களும்
உடமைகளும்
உயிர் வாழ்ந்த
நிலமும் கூட
துப்பாக்கி
ரவைகளால்
விழுங்கப்பட்டது!
•
பட்டியலில்
இன்னும்
கொலை 'நீ'கள்
பதியப்படலாம்;
சமாதானம்
நீளுவதனால்!

மாரிமுத்து யோகராஜன்–
அக்கரைப்பற்று–08.



## யார் இவர்கள்

↑. யார் இந்தக் குட்டிப் பெண் என்று தெரிகிறதா? இன்றைய கவர்ச்சிப் புயல்களில் ஒருவராக இருக்கும் நடிகைதான் இந்தக் குட்டிப் பெண். உங்கள் ஞாபக மடிப்புகளுக்குள் தேடிப்பாருங்கள். மடிப்பு என்றதும் இந்த நடிகையும் ஞாபகத்திற்கு வந்திருப்பாரே? நம்நாட்டுக்குக் கூட வந்து 'கலைச்சேவை' செய்துவிட்டுப் போயிருக்கிறார்.



↑ இன்றைய கிரிக்கெட் நட்சத்திரம்தான் இங்கு குட்டிப் பையனாக இருக்கிறார். நம்நாட்டு கிரிக்கெட் வீரர். சமீபகாலத்தில் அடித்தாடி வருகிறார். மகா மரியாதை உண்டு இரசிகர்களிடம். கண்டுபிடிக்க முடியாதவர்களுக்கு பதிலுதவி 18ம் பக்கத்தில்.

## புது விதி


வாழ்வின்,
ஏற்றமும் இறக்கமும்
எல்லோருக்கும்
பொதுவிதி!
ஆயினும்
தினமும் பொழுதும்
ஏறியிறங்கும்
புது விதி
நமக்கு!

முச்சந்தியில்
முதலிறக்கம்!
பின்னர்,
சிறிது நடை(பெற்று)
மீண்டும் ஏற்றம்–
சீரான ஓட்டம்!

கொள்ளிக் கண்களின்
பார்வை படாதிருக்க
நேர்த்திகள்,
வேண்டுதல்கள்
மனதுக்குள் நீண்ட
பிரார்த்தனைகள்;
நடுங்கும் கரங்களில்
அடையாள அட்டையுடன்
சந்தையடியில்
மீண்டும் இறக்கம்
ஏற்றம் ஓட்டம்
சிறு பொழுதில்,
மாவடியில்
மரக்காலையருகில்,
பண்ணையடியில்..
எல்லா இடமும்.

இறங்கி ஏறி ஓடி
வந்தடையும்
இடத்தில்–
வாழ்க்கைப் பயணம்
தொடரப்
பாடுபட்டு,
அல்லலுற்று
சீரழியும்
பொழுதுகள்
என்று விடியும்??

ஜே. ஜஸ்டின்–
வவுனியா.



## தேன் கிண்ணம்

## பூமி புத்திரர்கள்

உருண்டை உலகமே!
ஏன் இந்த
இரண்டுமுக வேஷம்?
உன் இருண்ட பக்கங்கள்
நாளை
வெளிச்சத்துக்கு வரும்–
வேஷம் கலையும்!
**
துருவங்களில்
பனிமுகம் காட்டுகிறாயே!
உன் பாலைவன முகம்
தென்துருவத்துக்கு
தெரியாதுதான்!
**
பசித்து ஏங்குவதும்
பசிவர ஏங்குவதும்
கொதித்து எரிமலை கிளம்ப
பனிமழை பொழிவதும்
இன்னும் எத்தனையோ...
உன் முகமூடிகள்
ஏன்?
**
மனிதர்கள்
சுயத்தை மறைத்து
மாறு வேடத்தில்
உலவும்போது
முகமூடி மாற்றுவது
உனக்கும் முக்கியமாகியிருக்கலாம்:
ஓ!
பூமியைப்போல
பூமிபுத்திரர்கள்!

உரும்பிராய் சிவன்சுதன்.



## அன்றும்–இன்றும்

← செந்திலின் ஒப்பனை இல்லாத ஒறிஜினல் தோற்றங்கள் இவை. இளமையில் முடியுடன்தான் இருந்தார். பின்னர்தான் முடி தங்கமாட்டேன் என்று போய்விட்டது. அதனால் இப்போது மைதானம்போல் காட்சி தருகிறது.



## சுதந்திரம்

அரசி!
சுதந்திரம் பெற்றுத் தருவாயா?
தேசம் சுதந்திரம் கண்ட
பொன் விழாவிலேனும்!
0–0
உனக்குத்தானே
நாற்காலி தந்தோம்!
அதில்–
மதமும், மொழியும்
எப்படி அரசோட்ச்சும்?
0–0
அனைத்தும் துறந்தவன்
காவிப் போர்வையின்
முடிச்சுக்குள்தானே
இலங்கைத் தீவு!
0–0
பார்த்தாயா
இன வாதமில்லாத
புத்தனின் போதனையிலும்
கலப்படம்!
0–0
சொல்!
இப்படியிருக்க
எப்படியம்மா
ஆலிங்கனித்து வாழ்வது?
மதங்களும், மொழியும்...!
0–0
செங்கோல் எடுத்த
சமாதான தேவதையே!
காவிப் போர்வைக்குள்
இனத்துவேசம் எரியும் வரையும்
தமிழின் எல்லையால்
தீவு கிழிவதென்பதே
தீர்வென்றாகும்!
0–0

எஸ். நளீம்–மீராவோடை.

## இந்த வாரம் உங்கள் பலன்

(23.11.1997 தொடக்கம் 29.11.1997 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- துயர் நீங்கும், பலவித பேறு. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, அந்நியர் நட்பு. | பி.ப. | 1 | மணி |
| புதன்- உயர்ந்த நட்பு, காரிய சித்தி. | பகல் | 12 | மணி |
| வியாழன்- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | பகல் | 11 | மணி |
| வெள்ளி- வீண்குறை கேட்டல், மனக் கலக்கம். | பி.ப. | 1 | மணி |
| சனி- தொழில் சிறப்பு, பண வரவு. | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-1

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மனக்கிலேசம், தேகசுகம் பாதிப்பு. | மு.ப. | 9 | மணி |
| திங்கள்- தொழில் மந்தம், கடன் சுமை. | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- வீண்குறை கேட்டல், மனக் கலக்கம். | மு.ப. | 10 | மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நட்பு. | பகல் | 11 | மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, பண வரவு. | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- பலவித நன்மை, மனக்குறை நீங்கும். | காலை | [illegible] | மணி |
| சனி- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்துமுன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மனக்குறை நீங்கும், குடும்ப மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, முயற்சிகளில் வெற்றி. | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- பெரியோர் சகாயம், பலவித பேறு. | மு.ப. | 10 | மணி |
| புதன்- புதிய முயற்சி, மனக்கிலேசம். | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- தொழில் மந்தம், பணவரவு குன்றும். | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- இனசன நன்மை, வெளியிட வாழ்க்கை. | பி.ப. | 2 | மணி |
| சனி- துயர் நீங்கும், காரியானுகூலம் | காலை | 7 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- தொழில் கஷ்டம், பண முடங்கல். | மு.ப. | 10 | மணி |
| செவ்வாய்- வீண் பிரயாணம், செலவு மிகுதி. | பி.ப. | 2 | மணி |
| புதன்- தேகசுகம் பாதிப்பு, வைத்தியச் செலவு. | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- துயர் நீங்கும், குடும்ப நன்மை. | பகல் | 11 | மணி |
| வெள்ளி- அந்நியர் நட்பு, பணக் கஷ்டம். | பி.ப. | 2 | மணி |
| சனி- தொழில் சிறப்பு, பண வரவு. | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- துயர் நீங்கும், பெரியோர் சகாயம். | பகல் | 12 | மணி |
| திங்கள்- முயற்சி பலிதம், அந்நியர் நட்பு. | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- காரியானுகூலம், பொருள் வரவு. | மு.ப. | 10 | மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- உயர்ந்த நிலை, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| வெள்ளி- பொருள் நஷ்டம், மனக் கலக்கம். | பி.ப. | 2 | மணி |
| சனி- காரியத் தடை, வீண் மனஸ்தாபம். | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம்-5

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| விருச்சிகம் | - சூரியன், புதன். |
| தனு | - செவ்வாய் வெள்ளி. |
| மகரம் | - வியாழன் |
| கும்பம் | - கேது |
| மீனம் | - சனி. |
| சிம்மம் | - இ[illegible] |

★ சந்திரன்- சிம்மம், கன்னி, துலாம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம் வீண் செலவு. | பகல் | 12 | மணி |
| திங்கள்- வெளியிட வாழ்க்கை, அந்நியர் நட்பு. | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- முயற்சியில் வெற்றி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| புதன்- இனசன நன்மை, காரியானுகூலம். | மு.ப. | 10 | மணி |
| வியாழன்- பெரியோர் சகாயம், பிரயாண மிகுதி. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- தெய்வானுகூலம், உயர்ந்த நட்பு. | மு.ப. | 10 | மணி |
| சனி- பலவித பேறு, இனசன மகிழ்ச்சி. | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-3

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- அந்நியர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- துயர் நீங்கும், புதிய முயற்சி. | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- வெளியிடப் பயணம், காரியானுகூலம். | மு.ப. | 10 | மணி |
| புதன் - பயனுள்ள செயல், உறவினர் உதவி. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- பெரியோர் உதவி, பண வரவு. | மு.ப. | 10 | மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, பணக் கஷ்டம். | பி.ப. | 2 | மணி |
| சனி- வெளியிட வாழ்க்கை, முயற்சி பலிதம். | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-7

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- செலவு மிகுதி, கடன் பயம். | காலை | 8 | மணி |
| திங்கள்- தொழில் மந்தம், காரியத் தடை. | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- பெரியோர் சகாயம், கௌரவ மிகுதி. | பி.ப. | 2 | மணி |
| புதன்- தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- மனக்குறை நீங்கும் காரியானுகூலம் | மு.ப. | 9 | மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, தொழில் கஷ்டம். | மு.ப. | 10 | மணி |
| சனி- செலவு மிகுதி, ஆடம்பர வாழ்வு. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பயனுள்ள செயல், காரியானுகூலம். | பகல் | 12 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, உயர்ந்த நட்பு. | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- இனசன மகிழ்ச்சி, பெரியோர் உதவி. | பி.ப. | 1 | மணி |
| புதன்- துயர் நீங்கும், மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- தொழில் உயர்ச்சி, பண வரவு. | மு.ப. | 10 | மணி |
| வெள்ளி- வீண் முயற்சி, உயர்ந்த நட்பு. | பி.ப. | 1 | மணி |
| சனி- பலவித பேறு, காரிய சித்தி. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- துயர் நீங்கும் மன மகிழ்ச்சி | பி.ப. | [illegible] | மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, கௌரவம். | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- பிரயாண மிகுதி, அந்நியர் சகவாசம். | பி.ப. | 2 | மணி |
| புதன்- வெளியிட வாசம், கௌரவக் குறைவு. | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- தொழில் மந்தம், காரியத் தடை. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- இனசனப் பகை, மனக் கலக்கம். | மு.ப. | 9 | மணி |
| சனி- வீண்குறை கேட்டல், அந்நியர் பகை. | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு மனக்குறை நீங்கும் காரிய சித்தி | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- புதிய முயற்சி, உயர்ந்த நட்பு. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- பெரியோர் உதவி, கௌரவ மிகுதி. | மு.ப. | 10 | மணி |
| புதன்- வெளியிடப் பயணம், உயர்ந்த நிலை. | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- துயர் நீங்கும், மன மகிழ்ச்சி. | மு.ப. | 10 | மணி |
| வெள்ளி- வெளியிட வாசம், செலவு மிகுதி. | பி.ப. | 2 | மணி |
| சனி- பலவித பேறு, பண வரவு. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-7

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பயனுள்ள செயல், காரிய சித்தி. | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- துயர் நீங்கும், இனசன மகிழ்ச்சி. | மு.ப. | 10 | மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | மு.ப. | 9 | மணி |
| புதன்- பெரியோர் நட்பு, பண வரவு. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- தொழில் கஷ்டம், மனக் கலக்கம். | மு.ப. | 9 | மணி |
| வெள்ளி- வீண் மனஸ்தாபம், இனசனக் கலகம். | பகல் | 11 | மணி |
| சனி- புதிய முயற்சி, உயர்ந்த நிலை. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

www.padippakam.com





இன்பம் வேண்டில் வானைக் காண்பீர்!
வானொளி தன்னை மண்ணிற் காண்பீர்,
துன்பந் தானோர் பேதைமை யன்றோ
வாராய், நிலவே, வா!

-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# போதுமென்ற மனம்....!



**ஓர்** ஊரின் ஒதுக்குப் புறத்தில் நாய் ஒன்று வசித்து வந்தது. அந்த நாய் மிகவும் பேராசை கொண்டது.

ஒருநாள், அந்த நாய்க்குக் கடுமையான பசி. இரை ஒன்றும் கிடைக்கவில்லை. மிகுந்த பசியுடன் அது கடைப்பக்கம் சென்றது.

அங்கு ஓர் இறைச்சிக்கடை தெரியவே, அதன் பக்கத்தில் சென்றது. அந்த இறைச்சிக் கடைக்காரன் தனக்கு ஏதாவது இறைச்சித் துண்டை எடுத்துப் போடுவான் என்று எண்ணியது நாய்.

ஆனால், நாயைக் கண்ட இறைச்சிக் கடைக்காரன், அதனை விரட்டினான். நாய் ஓடவில்லை. கோபங்கொண்ட கடைக்காரன் பக்கத்தில் கிடந்த எலும்புத்துண்டை, கல் என்று நினைத்து எடுத்து நாயை நோக்கி வீசினான்.

அந்த எலும்புத்துண்டை 'லபக்' கென்று பிடித்துக் கொண்டு வேகமாக ஓடியது நாய். ஊருக்கு வெளியே இருக்கும் ஓடைக்கரைக்குச் சென்று சாப்பிட முடிவு செய்தது.

ஓடையின் பக்கமாக நாய் ஓடிக்கொண்டிருந்தபோது, தற்செயலாக ஓடை நீரைப் பார்த்தது. அதற்கு ஒரே ஆச்சரியம். காரணம் தண்ணீருக்குள் அதைப் போலவே இன்னொரு நாய் எலும்புத்துண்டுடன் இருப்பது போல் தெரிந்தது.

அந்த எலும்புத்துண்டும் கிடைத்தால் மூன்று நாட்களுக்கு வைத்துச் சாப்பிடலாம் என்று எண்ணியது.

தண்ணீருக்குள் இருக்கும் நிழலைப் பார்த்து உறுமியது. இது உறும, தண்ணீரில் தெரிந்த நிழல் நாயும் உறுமுவது போல் தெரிந்தது. கோபங்கொண்ட நாய் உடனே, தண்ணீருக்குள் இருந்த எலும்புத் துண்டைக் கவ்விப் பிடிக்கத் தன் வாயைத் திறந்தது.

அவ்வளவுதான்- அதன் வாயில் இருந்த எலும்புத்துண்டு, தண்ணீரில் வீழ்ந்து மூழ்கியது.

தண்ணீரில் தெரிந்தது தன் நிழல்தான் என்பது நாய்க்கு இப்போது புரிந்தது. 'இனி என்ன செய்வது, சாப்பிட இருந்த ஒரு எலும்புத்துண்டும் போய்விட்டதே!' என்று கவலையுடன் மறுபடியும் கடைப் பக்கம் சென்றது நாய்.

இருக்கின்ற ஓர் எலும்புத் துண்டே போதும் என்று சந்தோஷப்படாமல், பேராசைப்பட்டதால் அந்த நாய்க்கு இந்தக்கதி ஏற்பட்டது.

## அதிசயம் - ஆனால் உண்மை!



**எறும்புகளின் மாடி வீடு**

← ஆபிரிக்காவின் லோச்சா காட்டிலுள்ள எறும்புகள் மழைக்காலம் வருமுன் வீடு கட்டிக் கொள்ளும். மழைக் காலம் அடுத்தடுத்து வருவதால், இவ்வூர் எறும்புகள் ஒவ்வொரு தடவையும் முன்னாள் கட்டிய வீட்டின் மேலேயே வீடுகட்டி மாடி மேல் மாடி கட்டி வாழ்கின்றன.



**நெருப்புக்கோழி மரம்**

↑ தூரத்தில் இருந்து பார்த்தால் நெருப்புக் கோழி போல் தோற்றமளிக்கும் மரம் ஒன்று கலிபோர்னியாவில் உள்ள மோன்டரே என்ற இடத்தில் உள்ளது.




**சிலந்திக் குரங்கு**

← கட்டை விரல் இல்லாத இக் குரங்குகள் தமது வாலின்-வளையக் கூடிய நுனியைப் பயன்படுத்தித்தான் உணவை வாய்க்குக் கொண்டு செல்கின்றன.

**பெரிய வெள்ளரிக்காய்**

→ இங்கிலாந்திலுள்ள ஹாவர் ஹில்லைச் சேர்ந்த ஜோன் பன்ஸ் பயிரிட்ட இந்த வெள்ளரிக்காய் 10 அடி 10 அங்குல நீளம் வளர்ந்தது.



## வாரம் ஒரு நாடு

### பார்படோஸ்

தலைநகர் - பிரிட்ஜ் டவுன்
பரப்பு - 430 சதுர கிலோ மீட்டர்
மக்கள் தொகை - 3 இலட்சம்
மொழி - ஆங்கிலம்.
எழுத்தறிவு - 99%
சமயம் - கிறிஸ்தவம்
நாணயம் - பார்படோஸ் டொலர்
தனிநபர் வருமானம் - 6500 டொலர்.

**அமைவிடம்:**

கிழக்கு கரீபியன் கடலில் அமைந்துள்ளது. ட்ரினிடாட்டில் இருந்து வடகிழக்கே 300 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கின்றது.

**வரலாறு:**

1966ல் பிரிட்டனிடமிருந்து சுதந்திரமடைந்தது. 27 உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றம் உண்டு. என்றாலும் பிரிட்டனின் பிரதிநிதியான கவர்னர் ஜெனரல், மந்திரி சபையின் ஆலோசனையின் பேரில் ஆட்சி செய்கிறார்.



**பொருளாதாரம்:**

விவசாயம்; சுற்றுலாத்துறை ஆகியன முக்கிய பொருளாதார மூலங்கள். சீனி, மதுவகைகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 29.11.1997.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 220
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 218

பரிசுக்குரியவர்:
ஆதிப் இஹ்தியாஸ்,
பாத்திமா மகளிர் மகா வித்தியாலயம், புத்தளம்.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| எம். தினேஷ்குமார், க.ரோ.க. தமிழ் வித்., அம்பிட்டிய, கண்டி. | எம். ஸஜினான், அ.மு.ம.வித்தியாலயம், ஏத்தாலை. |
| ஆர். தர்ஷினி, விவேகானந்தா கல்லூரி, கொழும்பு-13. | சிந்துஷன் சந்திரசேகர், கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். |
| ரி. கயல்ஸ்ரீரூபி, நல்லாயன் கல்லூரி, நுவரேலியா. | பாத்திமா நிஸ்ரீனா நிஸாம், கே/நாங்கல்ல முஸ்லிம் மகா வித்தியாலயம், துல்கிரிய. |
| எம்.எச்.எம். பஸ்மி, க/தளவதுர மு.வி, தெல்லங்க, கெலிஓயா. | ஏ.பாத்திமா ஸப்றா, கமு/ஆமிஷா பாலிகா மகாவித்தியாலயம், அக்கரைப்பற்று. |
| ஆர். சுரதிஸ், க/கலாபொக்க, த.வி.மடுல்கெல. | நர்மதா ஜெயபாலன், ஹோல்புறூக் தமிழ் மகாவித்தியாலயம், அக்கரபத்தனை. |

## இன்னொரு சாய்ந்த கோபுரம்

**சா**ய்ந்த கோபுரம் எங்குள்ளது என்று கேட்டால் இத்தாலியில் உள்ள பைசா நகர் கோபுரத்தைத்தான் சொல்வீர்கள். இங்கிலாந்து நாட்டில் உள்ள பிரிஸ்டல் நகரிலும் ஒரு சாய்ந்த கோபுரம் உள்ளது. இது ஒரு தேவாலயம். 133 அடி உயரமுள்ள இந்தத் தேவாலயம், செங்குத்து நிலையில் இருந்து 5 அடி சாய்ந்துள்ளது.

1460ல் கட்டப்பட்ட இந்தத் தேவாலயத்திற்கென ஒரு கதை வைத்திருக்கிறார்கள். பிரிஸ்டல் நகரம் புகழ்பெறக் காரணமாக இருந்தவை கம்பளியும், துணியும்தான். எனவே . இந்தத் தேவாலயத்தின் அத்திவாரத்தில் கம்பளி மற்றும் சாக்குப் பைகளைப் போட்டு அதன் மீது எழுப்பப்பட்டது இந்தக் கட்டடம்.

1940ல் நடந்த இரண்டாம் உலகப் போரில் நாஸி விமானங்கள் இந்த நகரில் குண்டுகளை வீசி, நாசம் விளைவித்தன. அப்போது இந்தத் தேவாலயம் சாய்ந்ததே தவிர கீழே விழவில்லை. இன்று இந்த சாய்ந்த நிலையிலேயே இருந்து வருகிறது.

## அஞ்சலட்டை (POST CARD)



★ **உ**லகில் முதன் முதலாக ஒஸ்ரியா நாட்டில் 07.10.1869ல் தான் அஞ்சலட்டை அறிமுகப்படுத்தப்பட்டது.

★ கிராஸ் நகரில் இம்மானுவல் ஹெர்மன் என்ற பேராசிரியர் மலிவான விலையில் தபால் அனுப்புவது- எப்படி அமைப்பது என்பது பற்றிப் பத்திரிகை ஒன்றில் கட்டுரை எழுதினார். அந்த யோசனையை ஒஸ்ரிய அரசு ஏற்றதன் விளைவே அஞ்சலட்டை தோன்றக் காரணம்.

★ இது முதலில் ஒஸ்ரிய நாட்டினரால் 'கொரஸ்போண்டிங் கார்டே' என்று தான் சொல்லப்பட்டது. பின்னர் அமெரிக்காவில் இது புழக்கத்துக்கு வந்தபோது இது 'போஸ்டல் கார்ட்' என்று அழைக்கப்பட்டது. பிறகு அது சுருங்கி போஸ்ட் கார்ட் ஆயிற்று.

★ பிரிட்டனில் போஸ்ட் கார்ட் 1870ம் ஆண்டுதான் முதன் முதலாக வெளியிடப்பட்டது. முதலில் இது வெளியிடப்பட்டபோது, அதை வாங்க தபால் கந்தோரில் மக்கள் கூட்டம் அலை மோதியதாம். பின்னர் பொலிசாரை வைத்துத்தான் அக்கூட்டத்தைக் கட்டுப்படுத்தினார்களாம்.

## அனகொண்டா



★ **அனகொண்டா என்றால் என்ன?**
உலகிலேயே மிகவும் நீளமான பாம்பு இனம்தான் அனகொண்டா.

★ **இதன் நீளம் என்ன?**
பொதுவாக இவை 5-6 மீட்டர் நீளமுடையவை. சில அனகொண்டாக்கள் 10 மீட்டர் நீளமுடையவை.

★ **அனகொண்டா விஷமுள்ள பாம்பா?**
இல்லை. இவை தமது இரையான பறவைகள் மற்றும் சிறிய மிருகங்களைப் பிடித்து ஒரு சுருட்டாகச் சுருட்டி விழுங்கிவிடும்.

★ **அனகொண்டாவால் மனிதனை விழுங்க முடியுமா?**
இதுவரை அனகொண்டா மனிதனை விழுங்கியதாக யாராலும் நிரூபிக்கப்படவில்லை. ஆனால் பாம்பு பிடிப்பவர்கள் சொல்கிறார்கள், பெரிய அனகொண்டாவால் ஒரு குழந்தையை விழுங்க முடியும் என்று.

★ **அனகொண்டா பாம்பு இனம் எங்கு காணப்படுகின்றது?**
தென் அமெரிக்காவில் இவை காணப்படுகின்றன.

## கோடிக்குப் பின்....

'**ஒ**ன்று, இரண்டு எண்ணத் தெரியுமா?' என்று கேட்டால் 'ப்பூ.. இது என்ன கேள்வி? கோடி, பத்துக் கோடி வரை எண்ணத் தெரியும்!' என்று எல்லோரும் சொல்வீர்கள். கோடிக்குப் பிறகு பத்துக் கோடி, நூறு கோடி, ஆயிரம் கோடி, இலட்சம் கோடி என்றுதானே



சொல்ல முடியும். அதற்குரிய பெயர்களைச் சொல்ல முடியுமா?

முடியாது.

காரணம்... அந்த எண்களுக்குப் பெயர்கள் இல்லை என்று பலர் கூறுவர். ஆனால் உண்மை அதுவல்ல; கோடிக்கும் மேற்பட்ட எண்களுக்கும் தமிழில் பெயர்கள் உள்ளன. நாம் தான் அதைப் பயன்படுத்துவதில்லை.

பழங்கால தமிழ் இலக்கிய நூல்களில் இந்த எண்களுக்குரிய வார்த்தைகள் சரளமாக இடம் பெற்றுள்ளன.

சரி கோடி வரை எமக்குத் தெரியுமல்லவா? கோடிக்குப் பிறகுள்ள எண்களைப் பற்றிப் பார்ப்போம்.

கோடி என்பது ஒன்றுக்குப் பின் 7 பூச்சியங்களைக் கொண்ட எண். பத்துக்கோடி என்பது 8 பூச்சியங்களைக் கொண்ட எண். இந்த பூச்சியங்களின் எண்ணிக்கைகளின் அடிப்படையில் எண்களும் அவற்றுக்கான பெயர்களும் வருமாறு:

1க்குப் பின் 8 பூச்சியங்கள் (பத்துக்கோடி) - அற்புதம்
1க்குப் பின் 9 பூச்சியங்கள் - நிகற்பதம்
1க்குப் பின் 10 பூச்சியங்கள் - கணம்
1க்குப் பின் 12 பூச்சியங்கள் - கற்பம்
1க்குப் பின் 13 பூச்சியங்கள் - நிகற்பம்
1க்குப் பின் 14 பூச்சியங்கள் - பதுமம்
1க்குப் பின் 15 பூச்சியங்கள் - சங்கம்
1க்குப் பின் 16 பூச்சியங்கள் - வெள்ளம்
1க்குப் பின் 17 பூச்சியங்கள் - அந்நியம்
1க்குப் பின் 18 பூச்சியங்கள் - மத்தியம்
1க்குப் பின் 19 பூச்சியங்கள் - பரார்த்தம்
1க்குப் பின் 20 பூச்சியங்கள் - பூரியம்
1க்குப் பின் 21 பூச்சியங்கள் - பிரமகற்பம்.

இதில் பிரமகற்பம் என்பது கோடி கோடியே கோடி ஆகும்.

'அது சரி.. இதற்கு மேல் எண்கள் இல்லையா?' என்ற கேள்வி எழுகிறதா? முதலில் இதை நடைமுறைப்படுத்திவிட்டு, மற்றவற்றைப் பிறகு பார்ப்போம்.



படிப்பகம்

www.padippakam.com

# வாரம் ஒரு கிரைம் கதை

# யார்?

## கிரைம் சக்கரவர்த்தி ராஜேஷ்குமார்

**போ**ர்டிகோவில் பைக்கை நிறுத்திவிட்டு உள்ளே வந்த இன்ஸ்பெக்டர் ஷியாமை சயன்டிஸ்ட் ஆத்மாராம் எதிர்கொண்டார்.

"வாங்க இன்ஸ்பெக்டர்."

"ஃபோன் பண்ணியிருந்தீங்களாம்....?"

"ஆமா."

"என்ன விஷயம்..."

"உள்ளே வாங்க சொல்றேன்..." சொல்லி தன்னுடைய பிரத்தியேக அறைக்குக் கூட்டிக் கொண்டு போன சயன்டிஸ்ட் ஆத்மாராம் ஐம்பதுகளின் ஆரம்பங்களில் இருந்தார். மீசை, தாடி இல்லாத சுத்தமான சதுர முகத்தில் நாசியோரமாய் இரண்டு சுருக்கக் கோடுகள். க்ரே நிற சஃபாரி அவருடைய வயதை குறைக்க முயற்சி செய்திருந்தது. கம்ப்யூட்டர்கள் இயங்கிக் கொண்டிருந்த ஜில்லிப்பான ஏ.ஸி. அறைக்குள் நுழைந்தார்கள்.

இன்ஸ்பெக்டர் ஷியாமை உட்கார வைத்து பின் மேஜை ட்ராயரிலிருந்து இரண்டங்குல சதுர பரப்பில் இருந்த ஒரு வெள்ளை பேப்பரை எடுத்து நீட்டினார்.

"இதைப் பாருங்க இன்ஸ்பெக்டர்."

அவர் வாங்கிப் பார்த்தார். கம்ப்யூட்டரில் பிரிண்ட் செய்யப்பட்ட புள்ளி எழுத்துக்கள் வார்த்தைகளாக மாறியிருந்தன.

'ஆத்மாராம்! உன் ஆத்மா விரைவில் சாந்தி அடையப் போகிறது!'

இன்ஸ்பெக்டர் ஷியாம் அந்தக் காகிதத்தை திருப்பி பார்த்தார். ஓரத்தில் துளைகள் போட்ட கம்ப்யூட்டர்களில் உபயோகப்படுத்தப்படும் ப்ரிண்ட் அவுட் காகிதம் அது.

கேட்டார்,

"இது எப்படி இங்கே வந்தது மிஸ்டர் ஆத்மாராம்...?"

"தெரியலை இன்ஸ்பெக்டர்.... நான் டெல்லிக்குப் போய் ஒரு செமினாரை அட்டெண்ட் பண்ணிட்டு ஒரு மணி நேரத்துக்கு முந்திதான் திரும்பிவந்தேன். அறைக்குள்ளே வந்து பார்த்தா பாஸிமர் மேஜைமேல் இந்த மிரட்டல் கடிதம்..."

"நீங்க டெல்லி போயிருந்தபோது இந்த கம்பியூட்டர்களை கவனிக்கிற பொறுப்பு யாரோடது...?"

"இங்கே எனக்கு உதவியாளர்கள் யாரும் கிடையாது. வீட்டைப் பார்த்துக்க வேலைக்காரனும், வேளாவேளைக்கு சமைச்சுப்போட ஒரு சமையல்காரியும் மட்டும் இங்கே இருக்காங்க... அதுவும் இல்லாம நான் டெல்லி போனபோது இங்க ரூமை மேக்னட் லாக்கர் மூலமா பூட்டிக்கிட்டு போயிருந்தேன். அந்த லாக்கரை யாராலேயும் ஒப்பன் பண்ணியிருக்க முடியாது...."

"நோ...நோ....யூ...ஆர் ராங்க் மிஸ்டர் ஆத்மாராம். சமீபத்திய இன்வெஸ்டிகேஷன் ரிக்கார்ட்ஸ்படி இந்த உலகத்தில் திறக்க முடியாத லாக்கர்ன்னு எதுவும் கிடையாது. நீங்க டெல்லிக்குப் போயிருந்த நேரத்துல யாரோ வந்து இந்த மிரட்டல் கடிதத்தை வச்சிட்டுப் போயிருக்கலாம். பை...த...பை.. உங்களுக்கு யார் மேலாவது சந்தேகம் இருக்கா....?"

ஆத்மாராம் தன் முன் வழுக்கை மண்டையை நுனி ஆட்காட்டி விரலால் கீறிக் கொண்டே அவஸ்தையாய் புன்னகைத்தார்.

"யார் மேல சந்தேகப்பட முடியும் இன்ஸ்பெக்டர்? எல்லாருமே என் முகத்துக்கு முன்னாடி சிரிக்கிற ஃப்ரண்ட்ஸ். தொழிலில் போட்டியாளர்கள் அதிகம். ஆனால் அவங்க பொறாமை பிடிச்சவங்களான்னு எனக்குத் தெரியாது...."

"சரி டெல்லிக்கு நீங்க எதுக்காகப் போனீங்க?"

"நான் கண்டுபிடிச்ச புதுவகையான கம்ப்யூட்டர் ஒண்ணை டெமான்ஸ்ட்ரேட் பண்ணிக்காட்ட."

இன்ஸ்பெக்டர் ஷியாம் சில விநாடிகள் யோசித்து பின் நிமிர்ந்தார்.

"உங்களுக்கு எவ்வளவு நண்பர்கள் இருப்பாங்க...?"

"பர்சனலாவா... தொழில் ரீதியாவா...?"

"ரெண்டிலேயும் சேர்த்துச் சொல்லுங்க..."

"சுமார் ஐம்பது பேர்..."

"அவங்க ஃபோன் நம்பர்களோடு முழு முகவரியும் கூடிய லிஸ்ட் வேணும்...."

"தர்றேன்..."

"தைரியமா இருங்க மிஸ்டர் ஆத்மாராம். இது வெறும் மிரட்டல் கடிதமாகக்கூட இருக்கலாம். இப்படி லெட்டர் எழுதி உங்களை ஒருவித பயத்துக்கு உட்படுத்தி உங்க திறமைகளை டைவர்ட் பண்ற முயற்சியாகக் கூட இருக்கலாம். உங்க பாதுகாப்புக்கு நான் ஏற்பாடு பண்றேன்...."


"தேங் யூ... இன்ஸ்பெக்டர்..."

□–□–□

**இ**ன்ஸ்பெக்டர் ஷியாம் விடைபெற்றுக் கொண்டு போனதும் போர்டிகோவின் தூணோரமாக பவ்யமாய் நின்று கொண்டிருந்த வேலைக்காரன் சேதுவை ஆத்மாராம் கையசைத்துக் கூப்பிட்டார்.

அவன் வேக வேகமாய் வந்து பக்கத்தில் நின்றான்.

"அய்யா...!"





"சேது...! பொலிசுக்கு தகவல் கொடுத்தாச்சு.... ஆனா அந்த லெட்டரை யார் கொண்டு வந்து உள்ளே வைச்சிருப்பாங்கன்னு உனக்குத் தெரியாம இருக்காது..."

"அய்யா..! நான் உங்க வீட்டு நாய், என்னைப்போய் சந்தேகப்படுறீங்களே?"

"நான் டெல்லியில் இரண்டு நாள் இருந்தப்ப இந்த பங்களாவுக்குள்ளே இருந்தது நீ...."

"அய்யா...! நான் இந்த வீட்டு வாசற்படியிலேயே பழியாகக் கிடந்தேன். இரண்டு நாளா ஒரு ஈ, எறும்பு கூட உள்ளே போகலை. என் பொண்டாட்டி புள்ளைங்க சத்தியமா எனக்கு ஒண்ணுமே தெரியாதய்யா..."

"நீ என்ன சத்தியம் பண்ணினாலும் சரி நான் நம்பமாட்டேன். இன்ஸ்பெக்டர் கிட்ட உன்னைப்பத்தி நான் எதுவுமே சந்தேகமா சொல்லலை. என் ஃப்ரண்ட்ஸோட லிஸ்ட் கேட்டார் எடுத்து விட்டிருக்கேன். இரண்டு நாளைக்குள்ளே அவர் மிரட்டல் கடிதம் எழுதியவனைக் கண்டுபிடிக்கலைன்னா இன்ஸ்பெக்டர்கிட்டே உன் மேலதான் சந்தேகம்னு சொல்ல வேண்டியிருக்கும்."

சேது கைகளைக் குவித்து கண்களில் நீரைக் காட்டினான். "அய்யா..! என்னை நம்புங்கய்யா..."

"பெத்த அம்மா அப்பாவையும் கட்டின மனைவியையும் நம்ப முடியாத காலம் இது. என்கிட்டே சம்பளம் வாங்கற வேலைக்காரன் நீ! உன்னை எப்படி நம்பறது...?"

"அய்யா..."

"போ... போய் வேலையைக் கவனி... இன்னைக்கு இல்லேன்னா.... நாளைக்காவது உண்மை வெளியே வராம போயிடுமா....?"

சேது வாயைப்பொத்தி அழுகையை அடக்கியபடி நகர்ந்தான்.

ஆத்மாராம் தன்னுடைய கம்ப்யூட்டர் அறைக்குள் நுழைந்து மேக்னடிக் லாக் மூலம் கதவைச் சாத்திக் கொண்டு ஃபைஃபர் நாற்காலியில் போய் சாய்ந்தார்.

அவருடைய பிரைவஸி டெலிஃபோன் கிணுகிணுத்தது. ரிஸீவரை எடுத்தார்.

"ஹலோ..."

மறுமுனையில் லாயர் பேசினார். கடந்த இருபது வருஷமாய் ஃபேமிலி லாயர்.

"என்ன ஆத்மாராம்... பொலிஸ்ல கம்ப்ளைய்ண்ட் பண்ணிட்டீங்களா...?"

"பண்ணிட்டேன்."

"இன்ஸ்பெக்டர் என்ன சொன்னார்?"

"என் ஃப்ரண்ட்ஸ்களோட லிஸ்ட்டை வாங்கிட்டு போயிருக்கார்."

"ஆத்மாராம் என்னோட மனசுக்குள் தோணறதைச் சொல்லட்டுமா?"

"சொல்லுங்க..."

"உங்களுக்கு எதிரி வெளியே இல்லை..."

"பின்னே...?"

"வீட்டுக்குள்ளேயே இருக்கான்..."

"யாரு...?"

"வேலைக்காரன் சேது...."

"அவன் மேல உங்களுக்கு ஏன் சந்தேகம்...?"

"மூணு மாசத்துக்கு முன்னாடி நடந்த சம்பவம் உங்களுக்கு மறந்து போச்சு போலிருக்கு..."

"எதைச் சொல்றீங்க...?"

"சேதுவோட அழகான பெண்டாட்டியை நீங்க கட்டாயமா தொட்டு நாசம் பண்ணியதும் அதுக்கு அடுத்த நாளே அவ தூக்கு போட்டுக்கிட்டு செத்துப் போனதும் மறந்து போச்சா...?"

"சேதுவுக்குத்தான் தன் பெண்டாட்டி தற்கொலை பண்ணிக்கிட்டதுக்கான காரணம் தெரியாதே...?"

"அப்படீன்னு நீங்க நினைச்சிட்டிருக்கீங்க... ஒருவேளை அவனுக்கு தெரிஞ்சிருந்தா...?"

"நோ....லாயர் ஸார்...! மிரட்டல் கடிதத்துக்குக் காரணம் சேதுவா இருக்கமுடியாது. ஏன்னா லெட்டர் கம்ப்யூட்டரில் பிரிண்ட் அவுட் செய்து எடுத்த லெட்டர்... இந்த பிராசஸ் எல்லாம் அவனுக்குத் தெரியாது..."

"எதுக்கும் நீங்க அவன் மேல ஒரு பார்வை வெச்சிட்டிருக்கிறது நல்லது..."

"கவலைப்படாதீங்க... லாயர் ஸார்! நான்பார்த்துக்கிறேன்..."

இரவு பதினொரு மணி.

பொலிஸ் கான்ஸ்டபிள்கள் இரண்டு பேர் துப்பாக்கிகளோடு வெளியே காவல் இருக்க கம்ப்யூட்டர் அறைக்குள் இருந்தார் ஆத்மாராம்.

கடந்த ஆறுமாத காலமாய் அரும்பாடு பட்டு அவர் நிர்மாணித்த ரோபோ-கம்-கம்ப்யூட்டருக்கு முன்பாய் உட்கார்ந்திருந்தார்.

ப்ரோக்கிராம் ஃபீட் செய்து பரிசோதிப்பதற்காக கம்ப்யூட்டரின் ப்ரோவிஷன் பகுதியை சரிப்படுத்த முயல கம்ப்யூட்டரின் திரை அவசர அவசரமாய் வேண்டுகோள் விட்டது.

'பொறுங்கள் ஏற்கனவே ஒரு ப்ரோக்கிராம் செயல்பாட்டில் உள்ளது.'

ஆத்மாராம் ஆச்சரியப்பட்டார். பொத்தானைத் தட்டி கம்ப்யூட்டர் பாஷையில் கேட்டார்.

"என்ன...?"

"சொல்கிறேன்! எனக்கு மின்சாரம் போதாது. அதிகப்படியான மின்சாரம் வேண்டும்!"

ஆத்மாராம் முறைத்தார்.

"இந்த ரோபோ கம்ப்யூட்டர் கொஞ்சம் அதிகப் பிரசங்கி..தன்னிச்சையாய் ப்ரோக்கிராம்களை நிர்மாணிக்கும். இதன் 'சிப்'பை முதலில் ரிமூவ் செய்யவேண்டும்!"

'மின்சாரம்...மின்சாரம்...'

என்று ரத்தச்சிவப்பு எழுத்துக்களில் திரை பூராவும் பெரிய எழுத்துக்களோடு கேட்டது.

'என்ன செய்யப் போகிறது பார்க்கலாம்.'

அதிகப்படியான மின்சாரத்தைக் கொடுத்து விட்டு நாற்காலியில் வந்து உட்கார்ந்தார் ஆத்மாராம்.

அவர் உட்கார உட்காரவே-

கம்ப்யூட்டரின் இடதுபக்கமிருந்து முளைத்த உலோகக் கை சட்டென்று நீண்டு ஆத்மாராமின் மணிக்கட்டை கெட்டியாகப் பற்றிக்கொள்ள மின்சாரம் பாய்கின்ற உடலோடு 'விலுக் விலுக்'கென்று துடித்தார்.

முழுதாய் முப்பது விநாடிகள்.

ஆத்மாராம் நிறம்மாறி உயிரை விட்டிருந்தார்.

**அ**தே விநாடிகளில்..

டெல்லியில் கம்ப்யூட்டர் கம்யூனிகேஷன் ரிசர்ச் சென்டரில் இரண்டு விஞ்ஞானிகள் பக்கம் பக்கமாய் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

"சயன்டிஸ்ட் ஆத்மாராம் கண்டுபிடித்த ரோபோ-கம்- கம்ப்யூட்டர் ஒரு அற்புத முயற்சிதான். அது கிட்டத்தட்ட தொண்ணூறு சதவீத மனிதன். தப்பான காரியங்களை மோப்பம் பிடித்து செல்ஃப் ப்ரோக்கிராம் யூனிட் மூலமாக அது சில தன்னிச்சையான முடிவுகளை எடுத்தால் அதற்கு நாம் கட்டுப்பட்டாக வேண்டும். அவ்வளவு புத்திசாலித்தனமான கம்ப்யூட்டர் இப்போது நடக்கும் ஊழல் நிர்வாகத்துக்கு ஒத்து வராது. அதை நிராகரிக்க மத்திய அரசுக்கு சிபாரிசு செய்வது தான் சரி."

"எனக்கும் அதே கருத்துத்தான்!" ■

---

கிரைம் தொடராக வந்தது
உடைந்த இரவு.
அடுத்ததையும்
தொடராகத் தராமல்
ஒரு வித்தியாசத்திற்காக
சில வாரங்களுக்கு
வாரம் ஒரு
கிரைம்கதையாகத்
தந்தால் என்ன?
அந்த யோசனையின்
விளைவே
இந்தக் கதை!
அசத்தலான– படு சூடான
கதைகள்
இடம்பெறவுள்ளன.
வாரம் தவறாமல்
படித்து வாருங்கள்.

---

## அரங்கம்













பெயர்: எஸ். யோகராஜ்,
வயது: 27
முகவரி: எனிக் எஸ்டேட், உடப்புசல்லாவ.
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: ஏ. வசந்தி,
வயது: 26
முகவரி: SALWA BLOCK-06, STREET -10, NO.25, KUWAIT.
பொழுதுபோக்கு: ரீ.வி.

பெயர்: எஸ். தியாகராஜா,
வயது: 22
முகவரி: P.O.BOX-5803, MANAMA, BAHRAIN.
பொழுதுபோக்கு: ரீ.வி., பத்திரிகை.

பெயர்: எம். பாஹிம்,
வயது: 20
முகவரி: விரு தொடை, மருதங்குளி.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: சீ. ரனீலா,
வயது: 21
முகவரி: HOUSE NO-24, BLOCK-4, STREET - 41, RUMAITHIYA, KUWAIT.
பொழுது போக்கு: பத்திரிகை, ரீ.வி.

பெயர்: எம். நஸ்ருல்லா
வயது: 20
முகவரி: P.O.BOX-12869, DOHA, QATAR.
பொழுது போக்கு: பத்திரிகை, ரீ.வி.

பெயர்: எஃப். முகமது முஸ்தபா,
வயது: 24
முகவரி: 295/ஏ, அக்கரை-4, ஒலுவில்.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: ஏ. திருமுகம்,
வயது: 26
முகவரி: பனங்காடு, அக்கரைப்பற்று.
பொழுதுபோக்கு: வானொலி, உதைபந்து.

பெயர்: வி. அகில்,
வயது: 23
முகவரி: 192/3,செட்டியார் தெரு, கொழும்பு-11
பொழுதுபோக்கு: பேனா நட்பு, பத்திரிகை.

பெயர்: வி. நில்ஷான்,
வயது: 25
முகவரி: 40/7, கொஸ்புட்டதெனிய, ஹெந்தளை, வத்தளை.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: யூ. நிஸாம்தீன்,
வயது: 23
முகவரி: 269, ரன்வடியாவ, கலேவல.
பொழுது போக்கு: பேனா நட்பு, கிரிக்கெட்.

பெயர்: ஐ. அப்துல் சலாம்,
வயது: 27
முகவரி: 32/3, ஆலங்குடா, ஏத்தாலை, புத்தளம்.
பொழுது போக்கு: ரீ.வி., பேனா நட்பு.



படிப்பகம்

www.padippakam.com




5

சுபாஷை மதுமிதா நெருங்கியதும், கையெழுத்து வேட்டைக்காரர்கள் அவள் பக்கம் தாவினார்கள்.

நாற்காலியில் அமர்ந்து பொறுமையாகக் கையெழுத்துப் போடத் துவங்கினாள்.

"எப்படி இவ்வளவு அழகா இருக்கீங்க?"

"பூ மாதிரி இருக்கீங்க."

"இது நிஜமா, இல்லை விக்கா?"

"ஆமாம், உங்களுக்கு என்ன வயசு?"

புன்சிரிப்பைத் தவிர வேறெதையும் பதிலாகத் தர முடியாத கேள்விகள் அவளை மொய்த்தன.

ஏதாவது பேச வேண்டும். பதில் ஒரு பொருட்டல்ல. அந்தக் கேள்வி அவள் கவனத்தை ஈர்த்தால் போதும். அந்தப் புன்சிரிப்பு பதிலே எதேஷ்டம். பிரபல இசை அமைப்பாளரின் இன்னிசைக் கச்சேரி துவங்கி விட... ரசிகர்களிடமிருந்து நழுவி மொட்டை மாடி, ஷோமியானா அடியில் தட்டுக்களில் வேண்டியதை எடுத்துப் போட்டுக் கொண்டு ஒதுங்கி நின்றார்கள் மதுமிதாவும் சுபாஷும்.

அவள் அந்த ஹாட்டீன் வடிவ கட்லெட்டை துண்டு போடுவதில் கவனமாய் இருந்தாள்.

"இப்பல்லாம் பழைய மதுமிதாவைப் பார்க்க முடிவதில்லை!"

குலோப்ஜாமூன் சுவைத்தபடி கேட்ட சுபாஷை நிமிர்ந்து பார்த்தாள் மதுமிதா.

"என்ன சொல்றீங்க சுபாஷ்?"

"வேலியோரத்துப் பூக்கள், படம் தானே நீயும், நானும் சேர்ந்து பண்ணின முதல் படம்?"

"ஆமாம்.?"

"அந்த ஷூட்டிங்ல எவ்வளவு பேசின தெரியுமா நீ? ஒரு உற்சாகப் புயலா இருந்தே? நீ சிரிக்கிற சத்தம் செட்டுக்கு வெளில கேட்கும். எல்லார்கிட்டேயும் ஏதாச்சும் ஒரு குறும்பு பண்ணிட்டு இருப்பே. 'மதுமிதா வருது, ஒளிஞ்சுக்குங்க... கடி ஜோக் சொல்லி அறுத்திடும்'னு கிண்டல் செய்வோம். என்ன ஆச்சு இப்ப?"

"ஏன் நான் எப்பவும் போலத்தானே இருக்கேன், சுபாஷ்?"

"பொய்! புஸ்தகத்தைத் தூக்கிக்கிட்டு உக்கார்ந்துடறே! யார்கிட்டேயும் நாலு வார்த்தைக்கு மேல பேசறதில்லை."

"எதையும் யோசிக்கலைன்னா, பிரச்சனை இல்லை சுபாஷ் யோசிக்க ஆரம்பிச்சிட்டா, எல்லாமே அபத்தமாப்படுது! இந்த வாழ்க்கை, நடிப்பு... நடிப்புக்குள்ளே ஒரு நடிப்பு... எல்லாம்!"

"இது வேதாந்தமா. இல்லை விரக்தியா?"

"ரெண்டுமில்லை. பாடம்! அனுபவம் தந்த பாடம்"

"கமான்யா! என்னாச்சு? இந்த வருஷம் அவார்டு எதுவும் எதிர்பார்த்து கிடைக்கலையா? இல்லை எவனாச்சும் பெருசா செக் கொடுத்து பவுன்ஸ் ஆயிடுச்சா?"

"போதும்பா?"

"இந்த சினிமா வாழ்க்கையைச் சொல்றேன்."

"ஏன்?"

"வேற மாதிரி வாழ்க்கைக்கான தாகம் தான் காரணம்."

"புரியலை"

"யோசிச்சா இது ஒரு மாயைதான். நம்ம மனசு இருக்கே அதை மாதிரித் தந்திரம் பண்றதுக்கு யாராலயும் முடியாது. அதுக்கு ஏதாச்சும் ஒரு குறை இருந்துகிட்டே இருக்கும்."

"மதுமிதா மாதிரி ஒரு வாழ்க்கை அமையாதான்னு எத்தனை லட்சம் பேரு ஏங்கிக்கிட்டிருக்காங்க தெரியுமா?"

"தெரியும். அதே மாதிரித்தான் என் ஏக்கமும், நிறைய உழைச்சிட்டேன் சுபாஷ். என் சம்பாத்தியம் எதுக்காகன்னு புரியலை. மேல மேல பணம் குவிச்சு, என்ன பண்ணப் போறேன்னு தெரியலை. அதான்.. விலகிட்டு, வீட்ல உட்கார்ந்தடலாம்னு யோசனை. புருஷன் எப்ப வருவான்னு காத்துக்கிட்டு வீட்ல இருக்கிற ஒரு குடும்பப் பெண்ணுக்கு பாசத்தைத் தவிர வேற சிந்தனையே இருக்காது சுபாஷ். சம்பாதிக்கிற பொறுப்பை இறக்கி வெச்சிடணும் ஒரு ஸ்டேஜ்ல. இல்லைன்னா எல்லாக் கனவுமே கனவாத்தான் இருக்கும்."

சுபாஷ் சென்று தயிர்சாதம் எடுத்துப் போட்டுக் கொண்டு வந்து, "எதுக்கு பணம்னு கேக்கறே! அதே சமயம் பெரிய பட்ஜெட்ல படம் எடுத்திட்டிருக்கே! முரண்பாடா இல்லை?" என்றான்.

"அது என் அம்மா செய்ற வேலை! என் பேரை, புகழை கடைசி சொட்டு வரைக்கும் காசாக்கணும் அவங்களுக்கு."

"அப்படி என்ன வெறி அவங்களுக்கு?"

"தோத்துப் போன வெறி! தான் சம்பாதிச்சது எல்லாத்தையும் இழந்து நின்னாங்க! அதில பணம் மேல ஒரு வெறி வந்து அநியாயத்துக்கு துரத்திட்டிருக்காங்க. எங்க ரெண்டு பேர் அலைவரிசையும் வெவ்வேற சுபாஷ் தினம் வீட்ல ஒரு போராட்டம் தான். என்னைக் கேக்காம இவங்க பாட்டுக்கு புதுப்படத்துக்கு ஒத்துக்கிட்டு அட்வான்ஸ் வாங்கிடுவாங்க!"



பட்டுக்கோட்டை பிரபாகர்

சுபாஷ், திறந்ததும் இனிமையாக இசை எழுந்த சிகரெட் கேஸிலிருந்து ஒன்றை எடுத்துக்கொண்டு, அவளிடம் நீட்டினான். மதுமிதா ஒன்றை எடுத்துக் கொண்டாள். இரண்டுக்குமாகப் பற்ற வைத்தான்.

"ஸோ...?" என்றான், புன்னகைத்தான்.

"ஸோ...?" என்று திருப்பிக் கேட்டாள்.

"எப்போ கல்யாணம் பண்ணிக்கப் போறே?"

"சீக்கிரத்தில"

"யாரு, தேவகுமாரா?"

"பார்த்தீங்களா, பத்திரிகைக்காரன் மாதிரி கேக்கறீங்களே?"

"ஓ.கே. நான் கேக்கலை."

"சுபாஷ், என் கல்யாணத்துல உங்க உதவி வேணும்,"

"ஷ்யூர், என்ன செய்யணும்? தோரணம் கட்டணுமா?"

"விளையாடாதீங்க!"

"சீரியஸ்! சொல்லு. என்ன பிராப்ளம்?"

"அம்மா தான் பிராப்ளம்!"

"நான் பேசி கன்வின்ஸ் செய்யட்டுமா?"

"யார் பேசினாலும் அவங்க கன்வின்ஸ் ஆகமாட்டாங்க."

"பின்னே?"

"படப்பைல உங்களுக்கு ஒரு ரெஸ்ட் ஹவுஸ் இருக்குது இல்லே, உள்ளேயே சலவைக் கல்லுல பிள்ளையார் கோவில் எல்லாம் வெச்சு... இன்னும் உங்ககிட்ட தானே இருக்கு... வித்துடலையே?"

"விலைக்கு வேணுமா? தனிக்குடித் தனமா? டேக் இட்! இப்ப நான் அங்க போறதில்லை."

"விலைக்கு வேணாம். உபயோகத்துக்கு வேணும். அந்தக் கோயில்ல உங்க முன்னிலைல நான் கல்யாணம் பண்ணிக்க நினைச்சிருக்கேன். அந்த பங்களாவுல கல்யாணம் முடிஞ்சதும் பத்திரிகைக்காரங்களைக் கூப்பிட்டு விருந்து கொடுக்கணும்னு திட்டம்."

"தாராளமா! தாராளமா! எவ்வளவு பெரிய நல்ல காரியம். தாராளமா எடுத்துக்கம்மா.. எத்தனை நாள் வேணும்னாலும் நீ யூஸ் பண்ணிக்கலாம். வாட்ச்மேனுக்கு ஃபோன் பண்ணிச் சொல்லிடறேன். எப்ப வேணாலும் நீ போகலாம்."

"ரொம்ப தேங்ஸ் சுபாஷ்!"

"சரி, எப்போ?"

"சீக்கிரத்தில... முழுக்க பிளான் பண்ணிட்டு நான் அவரோட வந்து உங்களைப் பார்க்கறேன். அறிமுகப்படுத்தி வைக்கிறேன். அதுவரைக்கும் இந்த மேட்டரைப் பத்தி யார்கிட்டேயும் டிஸ்கஸ் பண்ணிடாதீங்க, ப்ளீஸ்."

"அந்த வாக்குறுதி மட்டும் என்னால தர முடியாது. தூரத்தில என் பொண்டாட்டி நம்மையே பார்த்துக்கிட்டு சாப்பிட்டுக்கிட்டு இருக்கா.. வீட்டுக்குப் போனதும், 'என்ன பேசினிங்க... அவ்வளவு நேரம்'னு கேப்பா... கஷ்ரப்பட்டு பொய் சொல்றதா?"

"சரி, அவங்ககிட்ட மட்டும் சொல்லுங்க!" என்றாள் மதுமிதா.

★★★

"அவ்வளவு நேரம் அந்த சுபாஷ் கிட்டே அப்படி என்ன பேசிட்டிருந்தே?" என்றாள் துர்க்கா பாலிதீன் பையைக் கிழித்து பீடா எடுத்துப் போட்டுக் கொண்டபடி.

காரின் ஜன்னலுக்கு வெளியே ஓடுகின்ற நியான் வெளிச்சங்களைப் பார்த்தபடி வந்த மதுமிதா திரும்பி, "ஷூட்டிங்ல நடந்த ஒரு கலாட்டா பத்தி பேசிட்டிருந்தோம்மா," என்றாள். வீட்டிற்கு வந்த போது, இனியா காத்திருந்தாள்.

மதுமிதா பட்டுப்புடவையிலிருந்து நைட்டிக்கு மாறியதும், குரல் கொடுத்து அவளை அழைத்தாள்.

இனியா அவள் அறைக்குள் வந்து, "என்னக்கா?" என்றாள்.

மதுமிதா சோபாவில் அமர்ந்தபடி, "உட்காரு," என்றாள்.

"பரவாயில்லை, சொல்லு!"

"சாப்ட்டியா?"

"சாப்ட்டேன், சொல்லு!"

"யார் அது ஆகாஷ்?"

"ஏன்? என் ஃபிரெண்ட்!"

"உனக்கு படிப்புல அக்கறை இல்லையா?"

இனியா மௌனமாக இருந்தாள்.

"சொல்லுடி! உனக்கு என்னை மாதிரி நடிகையாகணும்னுதான் ஆசையா? வாயைத் திறந்து சொல்லு!"

'ஏன், அப்படி ஆசைப்படக்கூடாதா?' முனகினாள் இனியா.

சில வினாடிகள் அவளை அமைதியாகப் பார்த்துக்கொண்டு இருந்து விட்டு, "போய் கதவை சாத்திட்டு வா சொல்றேன்." என்றாள் மதுமிதா.

(தொடரும்)

---




ஆஃபீஸ் முடிந்து கோபமாய் வீட்டுக்குள் நுழைந்து என் ஆறுமாத புது மனைவியைத் தேடினேன். காணவில்லை. கிச்சனில் சில்வர் குடமும் இல்லை. பக்கத்து பைப்பிற்கு தண்ணீர் எடுக்க போயிருக்கிறாள் என்பதைத் தெரிந்து கொண்டேன். வரட்டும் பார்க்கலாம்! என பற்களைக் கடித்துக்கொண்டேன். என் வீட்டு 'அந்த' ஜன்னலைப் பார்த்தேன். அதன் அருகில்-மிக அருகில் அமைதியாய் அமைந்திருக்கும் மற்றொரு ஜன்னல் வழியே அடுத்த வீட்டின் நடுஹால் அப்படியே தெரிந்தது..

அங்கே அந்த வீட்டின் இளைஞன் திமிராகப் படுத்திருந்தான். எனக்கு கோபம் கொப்பளித்தது. ஜன்னலை அடைத்து, ஆணியால் அடித்து, திறக்கவே முடியாமல் செய்து விட்டு கோபமாய் அமர்ந்தேன்.

இந்த ஜன்னல் வழியேதான் என் மானம் வெளியே போகுது! இதுக்காக நிறையத் தடவை அவகிட்ட சண்டை போட்டும் நான் இல்லாத நேரத்துல பழக்கத்த தொடர்ந்திருக்கா!

கல்யாணம் ஆகி ஆறு மாசங்கூட ஆகல... அதுக்குள்ளயும் என்னையே ஏமாத்துறா! இன்னிக்கு என் ஃப்ரெண்ட் வசந்தன் என்னைப் பார்க்க வந்திருக்கும்போது இந்த ஜன்னல் வழியே எட்டிப் பார்த்து சிரிச்சிட்டே நின்னுட்டு இருந்திருக்கா! அப்புறம் அவனிட்ட ஏதோ பொய் சொல்லி சமாளிச்சிருக்கா..! அவனுக்கு விஷயம் தெரியாது. பேசும் போது தெரியாம எங்கிட்டயே சொல்லிட்டான். அதனால வசமா மாட்டிக்கிட்டா.

'முறைப் பெண்ணுங்கிறதுக்காக இந்த படிக்காத, பட்டிக்காட்டை கட்டினதுக்கு என் மானமே போகுது!' என நான் புலம்பிக் கொண்டிருக்கையில் குடத்துடன் அவள் உள்ளே வர, 'சடார்... சடார்..'என கன்னத்தில் விளாசினேன். இடுப்பிலிருந்து குடம் உருண்டோட, துடித்துப் போனாள்.

"நீ திருட்டுத்தனமா பார்த்து பார்த்து ரசிச்சதை வசந்தன் சொன்னான்டி!" என நான் கத்த ஆதாரத்தோடு பிடிபட்டுக் கொண்டதைப் புரிந்து கொண்டு அழுது கொண்டே கிச்சனை அடைகாத்துக் கொண்டாள்.

இரவு மணி பத்துவரை நான் பேசவில்லை. அவளும்தான்..

நான் தனியாகப் படுத்தேன், அவளும் தான். கொஞ்ச நேரத்தில் அவளின் அழுகைச் சத்தம் கேட்டது. பின்பு சப்தம் கூடியது. எனக்குப் பாவமாகிப்போனது. எழுந்து அவளருகில் மெதுவாய் பூனைபோல் படுத்தேன். அடிபட்ட கன்னங்களைத் தொட்டேன். அதனால் மீண்டும் அழுதாள். "கன்னம் ரொம்ப வலிக்குதா? சாரிடி! கோவத்துல அடிச்சிட்டேன். ப்ளீஸ் இங்கிட்டு திரும்புடா.." நான் கெஞ்ச கொஞ்ச மெதுவாய் திரும்பினாள். "பின்ன என்ன..? ஜன்னல் வழியே அடுத்த வீட்ல பார்க்காதே..! அவங்களுக்கும் எனக்கும் ஏற்கெனவே பிடிக்காது.. அசிங்கமா பேசறாங்கன்னு எத்தனை தடவை சொல்லியிருக்கேன். இன்னும் ஒரு மாசம் உன்னால பொறுக்க முடியாதா? அழகா புதுசா சூப்பர் கலர் 'டி.வி' வாங்கிவர்றேன்னு சொல்லிருக்கேன்ல!" என நான் அணைக்க கண்ணீர் பன்னீர் ஆனது.

---




அந்த சந்து அருகே வந்ததும், நின்ற நிர்மலா திரும்பிப் பார்த்தாள்.

பத்தடி பின்னால் அவன் வந்து கொண்டிருந்தான்.

கடந்த பத்து, பதினைந்து நாட்களாகவே அவன் தன் பின்னால் வருவதை கவனித்து வந்தாள் நிர்மலா.

அந்தச் சந்தில் விளக்குகளே கிடையாது. இருளாக இருக்கும். எப்பொழுதாவது ஒரு சிலர் அப்படி வருவார்கள், போவார்கள். அவ்வளவுதான்.

நிர்மலா இரண்டு பவுன் செயின் அணிந்திருந்தாள். வலது கையில் ஒவ்வொரு பவுனில் இரண்டு பட்டை வளையல்கள். இடது கை மோதிர விரலில் மோதிரம். காதுகளில் ஸ்டட்டும், குடை ஜிமிக்கியும். மூக்கில் ஸ்ரீதேவி மூக்குத்தி. காலில் வெள்ளி கொலுசு. தோளில் தொங்கும் பையில் எதற்கும் இருக்கட்டும் என்று எப்போதும் வைத்திருக்கும் நூறு ரூபாய்.

இவைகளை எல்லாம் அபகரித்துச் செல்லத்தான் அவன் தினசரி வருகிறான். நோட்டம் பார்க்கிறான். எவருமே இல்லாத வேளையில் கத்தியைக் காட்டி பயமுறுத்தி வழிப்பறி செய்யத் தருணம் பார்க்கிறான்!

தோளில் தொங்கும் பையை மார்போடு அணைத்துக் கொண்டு வேகமாக நடந்தாள் நிர்மலா. வீட்டை அடையும் பொழுது அவளுக்கு உடம்பு முழுவதும் வியர்த்து விட்டிருந்தது.

இரவு நடுச் சாமம்-

'திருடன்! திருடன்!' என்று அடுத்த வீட்டிலிருந்து ஒரு பெண்ணின் கூச்சல் கேட்டது. டார்ச்சை எடுத்துக் கொண்டு அப்பா ஓடினார். நிர்மலாவும் ஓடினாள். திருடன் தாலிக்கொடியை அறுத்துக் கொண்டு ஓடி விட்டிருந்தான்.

"உங்க வீட்டுக்காரர் இல்லையா?" என்று அவளிடம் கேட்டாள் நிர்மலா.

"இதோ இருக்காரம்மா!"

பார்த்தாள் நிர்மலா. தினசரி சந்தில் அவளைத் தொடர்ந்து வருபவன். அஞ்சி நடுங்கி சுவரோடு சாய்ந்திருந்தான்.

"ரொம்பப் பயந்த சுபாவமுங்க... சந்து வழியா இருட்டிலே வரக் கூட பயம். யாராவது வந்தா அவங்க பின்னாலே வீடு வந்து சேர்வாருங்க...!" என்றாள் அடுத்த வீட்டுக்காரி.

இப்போது அவனைப் பார்க்க பரிதாபமாக இருந்தது நிர்மலாவுக்கு!



படிப்பகம்

www.padippakam.com

# பையன் தூங்கட்டும்

"**தி**வ்யா, விக்னேஷ் தூங்கிட்டானா?"

"ஐயோ நீங்க ஒரு அவசரக்குடுக்கை. கொஞ்சம் கூடப்பொறுமையே கிடையாது. கொஞ்ச நேரம் பொறுமையா இருங்க, இன்னும் கொஞ்ச நேரத்தில விக்னேஷ் தூங்கிடுவான்," கணவன் கார்த்திக்கை செல்லமாகக் கோபித்துக் கொண்டாள் திவ்யா.

"இன்னிக்கி, ஸ்கூல் ஏன்தான் லீவு விட்டுத் தொலைச்சாங்களோ?" முணுமுணுத்தான் கார்த்திக்.

"இன்னிக்கு ஞாயிற்றுக்கிழமை. உங்க அவசரத்துக்காக அவுங்க ஸ்கூல் வைக்க முடியுமா? ராத்திரியில விக்னேஷை தூங்க வைக்கிறதே சிரமம். அதுவும் இந்தப் பகல் நேரத்துல, உங்களுக்காக அவனை தூங்கப் போட வேண்டியிருக்கு. அது என்னடான்னா மொச்சக்கொட்டை மாதிரி முழிச்சுக்கிட்டே கிடக்குரேன்கிறது," முணுமுணுத்தாள் திவ்யா.

"திவ்யா, என்னாச்சு தூங்கிட்டானா?"




"ஆக்கப் பொறுத்தாலும், ஆறப்பொறுக்க மாட்டீங்களே? இப்பதான் அயர்ந்து தூங்கப் போறான், சத்தம் போடாதீங்க!" என்றாள் திவ்யா.

நிமிடங்கள் இரண்டு தொலைந்தன.

"திவ்யா விக்னேஷ் தூங்கிட்டானா?"

"ஆமாங்க தூங்கிட்டான்!"

"சீக்கிரம் திவ்யா."

"என்னங்க எனக்கு பயமா இருக்கு, பகல் நேரம் வேற; திடீர்னு முழிச்சுத் தொலைச்சுட்டான்னா பார்த்துப்புடுவான்!"

"அடிபயித்தியமே! சின்னப் பையன் தூக்கத்துல அடிக்கடியா விழிப்பான்? நீ வாடி!" என்றான் கார்த்திக்.

அடுத்த சில வினாடிகளில் ஃபிரிட்ஜில் இருந்த ஐஸ்கிரீமை எடுத்து இருவரும் சுவைக்க ஆரம்பித்தார்கள்.

"பாவங்க விக்னேஷ். அவனுக்கு தடிமன் பிடிக்காம இருந்திருந்தா அவனும் தின்பான்!" என்றாள் திவ்யா. ■

# நெருப்பு வாழ்க்கை!

கர்மாராஹில்

**சி**லோன் இன்' ஹோட்டலுக்குள் பாலன் நுழையும்போது ஏழு மணியாகியிருந்தது. வரவேற்புப் பிரிவுக்குச் சென்று அடையாள அட்டை சகிதம் தன்னை அடையாளப் படுத்திவிட்டு, பணத்தையும் செலுத்திவிட்டு அறைக்குள் புகும்போது பெரும் நிம்மதியாக இருந்தது.

'பேக்கை' ஒரு புறம் வைத்துவிட்டு அந்த அறையை விழிகளால் மேய்ந்தான் பாலன். முன்புற ஜன்னலின் இமையை விலக்கினான். காலி வீதியில் வாகனங்கள் நகர்ந்து கொண்டிருந்தன. ஜன்னலை மூடினான்.

பாத்றூமுக்குள் நுழைந்தான். இதயம் திருப்தியை ஆமோதித்தது. உடைகளைக் கழற்றினான். இதயம் நனையும் வரை அவனின் மேனி நீரைப் பருகியது.

**பா**லன் யாழ் மண்ணின் மைந்தன். உயர்தர விஞ்ஞானப் பிரிவில் தன்னுடைய காலத்தை அர்ப்பணித்திருந்தான்.

"உந்தப் போருக்குள்ள எப்படியப்பா படிக்கப்போறியள்? படிக்கேக்க நிம்மதி வேண்டாமோ?" இதே கேள்விகள்தான் மாணவர்களின் மனங்களில். குண்டுகளின் கோரங்களைக் கடந்து 'ஷெல்' தாக்குதல்களின் தீவிரத்தைக் கடந்து, துப்பாக்கி வெடிகளின் உயிர்ப் பசியைத் தாண்டி, கண்ணி வெடிகளின் அங்க இழப்புக்களையெல்லாம் தாண்டி ஒரு மனிதன் சுவாசிப்பது என்பது மகா பெரிய சாதனைதான்.

"மோனே! உப்புடி எத்தன நாளைக்குத்தான் வாழப் போறியள்? எல்லா சனங்களும் வெளியால வெளிக்கிட்டினம்... உதுக்குள்ள படித்து உருப்படவும் முடியாது. உயிர் வாழ்றதும் கடினம்....!"

அவனின் அம்மாதான் சூழ் நிலையை விளங்கப்படுத்தினாள். ஆபத்து இருப்பதை விளக்கு வைத்துக் காட்டினாள்.

ஆண்பிள்ளையென்றும், ஆசைக்கென்றும் அவன்தான் இருந்தான்.

மூத்தது அக்கா மாலதி, இளையது தங்கை மோகனா. இரண்டு பேர்களுக்கும் எதிர்காலம் பாலன்தான்; அவர்களுக்கு வசந்தம் வழங்குவான் என்றுதான் அம்மா நம்பிக்கை வைத்திருந்தாள்.

"மோன... பாலா.. உவள் மாலதிக்கும் மோகனாக்கும் நீர்தான் ஒரு வழி காட்டணும்...!" ஒருமுறை அம்மா அவனிடம் விண்ணப்பித்தாள்.

"ஏனம்மா கவலப்படுறியள்...? நீங்கள் உந்தக் கவலய விட்டுப் போடவேணும்..." பாலனும் உறுதி அளித்தான். அந்தக் குடும்பத்திற்கு ஒளியூட்ட வேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தான்.

> அன்று ஒன்பது மணியிருக்கும்–ரியூசன் வகுப்பு இன்னமும் ஆரம்பமாகவில்லை. மோகனா மூச்சிரைத்தாள். "அண்ணா....அண்ணா...!"

'அப்பா இருந்திருந்தால்...' பாலன் பலமுறை தன் தந்தையைப் பற்றி தனக்குள் விசாரித்திருக்கின்றான்.

அவர் சுவாசம் இழந்து இரண்டு வருடங்கள் உதிர்ந்து விட்டன. அவரின் வார்த்தைகள் அவனுக்குள் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன. அவரின் புத்திமதிகளை இதயத்தில் செதுக்கி வைத்திருந்தான் பாலன்.



"பாலா...! நீர் நல்லாப் படித்து வைத்தியனாக ஆகவேணும்...!"

".........."

பாலன் அமைதியாக இருந்தான். அவன் திறமை உள்ள மாணவனாக இருந்தும் தந்தையின் ஆசையை நிறைவேற்றுவதில் சந்தேகம் இருந்தது. இரவுகளையும் பகல்களையும் தனது கல்விக்கு அர்ப்பணித்தான்.

**அ**ன்று ஒன்பது மணியிருக்கும். 'ரியூசன்' வகுப்பு இன்னும் ஆரம்பமாகவில்லை.

"அ..ண்..ணா.. அ ண்..ண்... ஆ..ஆ....!...." மோகனா மூச்சிரைத்தாள். அவளின் வார்த்தைகளும் வேதனைப்பட்டு ஒலித்தன. அவளின் பதற்றத்தை அறிந்த பாலனின் இதயமும் பதற்றம் அடைந்தது.

"என்...ன.... நடந்து... போட்டுது..... மோ...கனா...?....."

"அண்..ண்...ணா..ணா...."

அவளின் விழிகள் கண்ணீருக்குள் காணாமல் போயின. பல மாணவப் பூக்களும் அந்த இடத்தில் குழுமிவிட்டார்கள்.

"அப்பாவை... யாரோ... சுட்டுப்... போட்....டாங்கள்.... அண்..ண்...ணா... சுட்டுப்...போட்....டாங்கள்....ள்...ள்... அண்..ண்...ண்...ஆ....ஆ...."

பாலனின் இதயம் குண்டு வைத்துச் சிதறியது போலானது. அவனின் மூச்சு நின்று இயங்கியது. பாலனின் நினைவுகள் குருதி சிந்தின. அவனுக்குள் வார்த்தைகள் மரணித்தன.

"மோ...க...ன...ா...!"

அவளையும் அழைத்துக் கொண்டு நேராக வீட்டுக்குச் சென்றான்.

அம்மா வேதனையின் முழுத்துன்பத்தையும் அனுபவித்துக் கொண்டிருந்தாள்.

அக்கா கண்ணீருக்குள் தன் மூச்சை இழந்து கொண்டிருந்தாள்.

உற்றார்
உறவினர்கள்
ஊரவர்கள்

எல்லோரும் குழுமிவிட்டார்கள். அந்த வீட்டுக்குள் அழுகை மழை பெய்து கொண்டிருந்தது. பாலனும் கண்ணீரை அர்ப்பணம் செய்தான். அவனின் எதிர்காலம் நொறுங்குண்டு கிடந்தது.

கனவுகள்
நினைவுகள்
கருகி உதிர்ந்தன. அவனின் வாழ்க்கை எரிந்து கொண்டிருந்தது.

யுத்தம்
மோதல்
இரத்தங் குடித்தது. மக்கள் மண்ணுக்குள் புதைந்தார்கள். அகதியாக ஆக்கப்பட்டார்கள். அவர்களின் விலாசங்கள் சிதைந்தன. இதனால் வாழ்க்கை புகைந்தது.

பாலன் கல்விக்கு முற்றுப்புள்ளி வைத்தான்.

"என்..ன மன்னிச்சிடுங்கப்பா... உங்களின் ஆசைய நிறைவேற்ற முடியல்...ல...!"

மானசீகமாக மனதுக்குள் வேண்டிக் கொண்டான். தோட்டத்தில் உழைப்பை விதைத்தான். பலனை அறுவடை செய்து குடும்பத்திற்கு ஆணிவேராக மாறினான் பாலன். அவர்களின் தாகம் தீர்க்கும் நீரானான்.

இரவு நட்சத்திரங்களை இழந்திருந்தது. கருமேகங்கள் இருளுக்குள் இன்னமும் கறுப்புத்தீட்டி இருந்த அந்த இரவில் பாலன் சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

அம்மா பரிமாறிக் கொண்டிருந்தாள்.

"மோ..ன... பாலா... சுவிசுக்குப் போறியே?"

அம்மாவை விழிகளால் மேய்ந்தான்.

"........"

"........"

"என்...ன.. பேசாம இருக்கிறீர்..? விருப்பமில்லையே...?"

"......."

"கொழும்பில புரோக்கர் இருக்கிறாங்கள். அவங்கள் கேட்கின்ற பணத்தக் கொடுத்திட்டால் போதுமாம் எண்டு மகேஸ்வரன் அங்கிள் சொன்னவர்..." அவன் கை கழுவினான்.

"அம்மா! உங்களின்ர விருப்பம்...?"

"அப்போ... நாளைக்கே கொழும்புக்குப் போட்டுவாறீரே... அட்றஸ் கூட இருக்கு..!" அவள் முகவரியைக் கொடுத்தாள்.

"அம்...மா... பணத்துக்கு என்..ன செய்யப் போறியள்...?"

"அந்தக் கவல உமக்கேன்...? நகைகள் இருக்கு... வங்கியிலேயும் கொப்பர்ர கணக்கு... நீர் நாளைக்கே கொழும்புக்குப் போட்டு வா...."

"**ஏ**ஸ்... சுமிய...." என்ற குரல் பாலனை உசுப்பி நினைவுகளில் இருந்து மீட்டது.

'றூம் போய்' இரவுச்சாப்பாட்டை வைத்துவிட்டுச் சென்றான்.

பாலனின் உடல் கொழும்பில் இருந்தாலும் அவனின் இதயம் யாழ்ப்பாணத்து நினைவுகளைத்தான் சுவாசித்துக் கொண்டிருந்தன. அதனால் நேரம் கரைந்தது தெரியவில்லை.

பத்துமணிக்கு ஏழு நிமிடங்கள் இருந்தன. எழுந்தான். சாப்பிட்டான். அவன் உறக்கத்தினுள் இறங்கினான்.

காலை ஒன்பது மணி.

"கலதாரி ஹோட்டலில் குண்டு வெடிச்சிட்டாம். ......."

பாலன் தடுமாறினான். பயந்தான்.

படையினரின் முற்றுகை.

பாலனும் கைது செய்யப்பட்டான். அவன் மன்றாடினான். அவர்களுக்கு விளங்கவில்லை. அது பற்றி அக்கறையும் இல்லை.

பாலன் ஆற்றிலிருந்து கரையேறி கிணற்றுக்குள் விழுந்தவன் போலானான்.

அவன் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டான்.

பாவம்! அவனின் அம்மா அவனை எதிர்பார்த்துக் கொண்டிருப்பாள். ■

# காதல் கடிதம்

"இந்த கடிதத்தை பாருங்க. இது நீங்க எழுதி டைப் செய்ததா?"

**சு**மித்ராவை தெரியுமா உங்களுக்கு? தெரியாவிட்டால் பரவாயில்லை. எங்கள் கம்பெனி கிளையின் மேலதிகாரி.

சிவந்த நிறம். அழகான முகம். முகத்தில் சதுர வடிவக் கண்ணாடி. தினமும் விதவிதமாக 'டி.வி' செய்தி வாசிப்பாளர் போல வித்தியாசமான ஒப்பனையோடு வலம் வருபவள்.

சுமித்ராவை நினைத்தால், நெஞ்சுக்குள் நெருப்புப் பொறிதான் எழும் எனக்கு.

பார்வையில் நெருப்பைக் கக்குவாள். வேலையில் மிகவும் கடுமையாக நடந்து கொள்வாள். இந்தக் கம்பெனியில் எனக்கு அதிக தடவை 'மெமோ' கொடுத்த புண்ணிய ...தி. கல்யாணம் ஆகாதவள்.

நானும் அவளைப் போல 'பச்சலர்'தான். ...ன்றாவது ஒருநாள் அவள் பார்வை என்மீது ...ிழாதா என்ற ஏக்கமும் என்னிடம் உண்டு.

சுமித்ராவை எப்படியாவது அடக்க ...வண்டும். அவளின் 'அழகி' என்ற கர்வத்...தையும், 'மேலதிகாரி' என்ற இறுமாப்பையும் ...டுக்க வேண்டும் என்ற உத்வேகம் என்னுள் ...றந்தது.

'எஸ் மேடம்... ஓ.கே. மேடம்' என்று ...வள் முன் கைகட்டி நிற்கும்போது ...ஞ்சாண் உடம்பு குறுகிப் போகிறதே!

சுமித்ராவை காதல் வயப்படுத்தி விட்டால் ...தல் போதையில் எல்லாமே மாறிவிடும்.

நினைப்பைச் செயலாக்க முயன்றேன்.

சுமித்ராவை பாட்ஸ் பாட்லாய் வர்ணித்து ...டிதம் தீட்டினேன். கடிதத்தின் பி.கு. ...டும் இங்கே!

***'பி.கு: அன்பே! நான் யாரென்று என்னை ...றிவித்துக் கொள்ளாவிட்டாலும் உன் ...ருகிலேயே இருக்கிறேன். என்னை புரிந்து ...ாண்டு உன் காதலை தொடரலாம்.'***

எப்போதும் உன் அன்பை நாடும் ...ல்வன். -கடிதத்தை சுத்தமாக தமிழில் ...ப் செய்து தபாலில் சேர்த்தேன்.

'கிர்ர்ர்... கிர்ர்ர்....' அழைப்புமணி கேட்டு ...ன் எழுந்து போனான். திரும்ப வந்த ...து அவன் முகம் வெளுத்திருந்தது.

"என்னப்பா கந்தசாமி... மேடம் என்ன ...ன்னாங்க... ஏன் ஒரு மாதிரி ஆயிட்டே?" ...ன்றேன்.

"என்னத்தை சொல்றது... எந்த கஸ்மா...மோ அம்மாவுக்கு டாவடிக்கிற கடுதாசி ...ட்டிருக்கான். அம்மா மொளகாய கடிச்ச ...திரி 'சுள்ளு'ன்னு எரிஞ்சு விழறாங்க," என்றவன், "போங்க... ஒவ்வொரு ஆளா வர்ச்சொல்லுறாங்க!" என்றான்.

என்முறை வந்தபோது நான் மெதுவாக உள்ளே சென்றேன்.

"வாங்க மிஸ்டர் செல்வம், உட்காருங்க!" என்றாள். வார்த்தையில் மிகவும் பணிவு தெரிந்தது. இது நடிப்போ... ஒரு பூகம்பத்துக்கு முன் ஏற்படும் அமைதியோ...?

"இந்தக் கடிதத்தை பாருங்க... இது நீங்க எழுதி டைப் செய்ததா... ஜஸ்ட் ஒரு அபிப்பிராயம்தான். ஆனால், நீங்கதான்னு சொல்லலை. ஏன்னா இந்த ஆபீஸ்ல இன்னும் ஏழு ஆண்கள் வேலை பார்க்கறாங்க....!" என்றாள்.

'அப்பாடா...' என்றிருந்தது. நிச்சயம் சுமித்ரா என்னை சந்தேகிக்கவில்லை.




"மேடம்... நான் இந்த லெட்டரை எழுதலை," என்றேன்.

"ஓ.கே. நீங்க போகலாம்," என்றாள்.

ஒருவர் பின் ஒருவராக சுமித்ராவின் கேள்விக்கு பதில் சொல்லிவிட்டு வந்தனர்.

எல்லாருமே நிச்சயமாக நான் சொன்ன பதிலைத்தான் சொல்லியிருக்கவேண்டும்.

எல்லாருடைய முகங்களிலும் கலவரம் தெரிந்தது. அவரவர் இருக்கையில் போய் அமர்ந்து, தத்தம் பணிகளில் ஈடுபடுவதாக பாவனை காட்டினார்கள். ஆனால், அந்த 'எக்ஸ்' யாராக இருக்கும் என்பதை மூளைக்குள் ஆராய்ச்சி செய்து கொண்டிருப்பார்கள் என்னைத் தவிர!

சிறிது நேரத்தில் அறைக்கதவை தள்ளிக் கொண்டு வெளிப்பட்டாள் சுமித்ரா.

அவள் கையில்,'அந்தக் கடிதம்' இருந்தது.

"இந்தக் கடிதத்தை எழுதி அனுப்பியது யாரென்று சொல்லி விடுங்கள். உங்களில் யாரோ ஒருத்தர்தான் எழுதியிருக்கீங்க. இன்னும் இரண்டு மணிநேரம் அவகாசம்தர்றேன். அப்படி யாரும் சொல்லாவிட்டால் என்னை அவமானப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தில் எழுதப்பட்டதுன்னு மேலிடத்துக்கு புகார் எழுதி எல்லாருக்கும் ஒரு மாத சம்பள பிடித்தமும், கட்டாய விடுப்பும், பிரமோசன் ஏற்படாத நடவடிக்கைக்கும் பரிந்துரை செய்வேன்," என்று கொக்கரித்தாள்.

'அட கடவுளே! பிள்ளையார் பிடிக்க குரங்காய் போன மாதிரி ஆகிவிட்டதே!' என்று தவித்தேன் மனதிற்குள்.

"என்ன சார்... அந்தம்மா இப்படி திடீர்னு குண்டைப் போட்டுட்டு போறாங்களே... இப்ப என்ன பண்றது?" என்றார் கணபதி.

"ரொம்ப அநியாயம் சார்...இது யாரோ ஒரு முகம் தெரியாத தொடை நடுங்கி, 'நான் உங்க அருகிலேயே இருக்கிறேன்,'னு எழுதினாலும் எழுதினான். உடனே அவன் நம்ம ஆபிசிலேயே இருக்கணும்னு கட்டாயமா...? வெளியேயும் இருக்கலாமல்லவா...? இதுக்காக நம்மை பழிவாங்கறது எந்தவிதத்தில் நியாயம்?" என்று உணர்ச்சி வசப்பட்டார் மற்றொருவர்.

"ரெண்டு மணிநேரக் கெடு கொடுத்திருக்கே.... அதுக்குள்ளே நாம என்ன முடிவெடுக்கிறது?" என்றார் மற்றவர்.

"சார்... நீங்க எல்லாரும் சம்மதிப்பீங்கன்னா நானொரு யோசனை சொல்லட்டுமா?" என்றான் மாறன்.

"என்ன?" எல்லாரும் கோரசாக கேட்க–

"அந்தக் கடிதத்தை நானே எழுதியதாக ஒப்புக் கொள்கிறேன். மேடம் என்ன தண்டனை கொடுத்தாலும் ஏற்றுக்கொள்கிறேன்."

"மாறன் இதென்ன வைத்தியக்காரத்தனம்...? தியாக உணர்ச்சியா..? அல்லது அதை நீயேதான் எழுதினாயா?" என்றேன்.

"இத்தனை பேரும் கஷ்டப்படணுமா? அதனால்தான் நான் இதை ஏத்துக்கறதுன்னு முடிவு பண்றேன்...!"

"விஷப்பரீட்சை.. வேண்டாம் மாறன். இன்னும் ரெண்டு நாள் அவகாசம் கேட்கலாம். பொறுமையாயிரு...!" என்பது இன்னொருவரின் அட்வைஸ்.

"இல்லை சார்.. நானே முன் வந்து அதை ஏத்துக்கிறேன்!"

"உன் வேலைக்கு உலை வச்சுக்காதே," என்றேன்.

"பரவாயில்லை!" என்றவன் விடுவிடுவென சுமித்ராவின் அறைக்குள் நுழைந்தான்.

**மா**லைநேரம்–

மாறனை தனியாய்ச் சந்தித்து, அவனுக்கு கிடைத்த மண்டகப் பொடியை தெரிந்து கொள்ளும் ஆவலுடன் கேட்டேன்.

"அடங்காப்பிடாரி சுமித்ராகிட்டே, கடிதம் எழுதியது நான்தான்னு போய் சொன்னாயே... உன்னை சஸ்பெண்ட் பண்ணிட்டாளா...?" என்றேன்.

"இல்லை. ஹஸ்பெண்ட் பண்ணிட்டாள்!" என்றான்.

"என்னப்பா சொல்றே?" புரியாமல் கேட்டேன்.

"சுமித்ராவிற்கு தன்னை யாருமே இதுவரை காதலிக்கவில்லையே என்ற ஏக்கம் மனசுக்குள்ளே இருந்திருக்கு. அதுவும் மேலதிகாரி ஆயிட்டதால தன்னுடைய தகுதி, அந்தஸ்தை பார்த்து தைரியமா யாருமே 'ஐ லவ் யூ' சொல்ல மாட்டேங்கிறாங்களேன்னு ஏங்கிகிட்டு இருந்திருக்கா. இப்படி அங்க அங்கமா அவளோட அழகை வர்ணித்து எழுதியிருந்த கடிதத்தைப் பார்த்ததும் இன்ப அதிர்ச்சி அவளுக்கு! அந்த நேரத்தில, 'நான்தான் கடிதம் எழுதினேன்,'னு சொன்னதும், ஓடிவந்து என்னைக் கட்டிப்பிடிச்சு கன்னத்திலே மாறி மாறி கிஸ் பண்ணி, 'ஐ லவ் யூ.... ஐ லவ் யூ... ஐ லவ் யூ.'ன்னு சொல்லி என்னை திணறடிச்சுட்டாள். அந்த 'லவ் லெட்டர்' எழுதின புண்ணியவான் எங்கிருந்தாலும் நல்லா இருக்கணும்," என்று மாறன் சொல்லிக் கொண்டே போக–

என் அடிவயிற்றில் அமிலத்தை வார்த்தது போலிருந்தது. ■

# பையன்

சூரியா

"**அ**ம்மா மீரா! இங்க கொஞ்சம் வாம்மா...!"

"என்னப்பா?"

"இந்த போட்டோவுல இருக்கற பையனை உனக்குப் பிடிச்சிருக்கான்னு பார்த்துச் சொல்லு....!"

ஒரு முறைப்புடன் வெடுக்கென்று முகத்தைத் திருப்பிக் கொண்டாள் மீரா.

"எந்தப் பையனையும் நான் பார்க்கப் போறதில்ல. பேசாம அத எடுத்திட்டுப் போங்க!"

"அப்படி இல்லேம்மா... அதது காலா காலத்துல நடக்க வேண்டியது நடந்தாத்தானே நல்லது. எதையெடுத்தாலும் அப்புறம்.. அடுத்த வருஷம்னு ஒத்திப்போட்டா எப்போதான் ஒரு காரியம் முடியறது. அதான் கூடிய சீக்கிரத்துல உனக்கேத்த பிள்ளையா செலக்ட் பண்ணிடணும்னு ட்ரை பண்றேன். அது தப்பா?"

"நான்தான் உங்களுக்கு அந்த சிரமமே வேண்டாம்னு சொல்லிட்டேனேப்பா.. எனக்கென்னவோ ஏற்கெனவே நல்லா பரிச்சயமானவனா பழகிப் பார்த்தவனா இருந்தாத்தான் நல்லதுன்னு படுது. இப்படி முன்னப் பின்ன தெரியாதவனை ஏத்துக்கறதிலே எனக்குக் கொஞ்சமும் சம்மதமில்லே...!"

"ஏதேது நீ சொல்றத பாத்தா. அந்தப் பையன் பாபுவையே முடிவு பண்ணிட்டாப்பல தெரியுது!"




"ஆமாப்பா! பாபுவாயிருந்தா நம்ம பரம்பரையில் வந்தவன்தானேன்னு எங்களுக்கும் ஒரு திருப்தியா போயிடும். என் மாமியார், மாமனாருக்கும் வித்தியாசம் தோணாது. அதனாலதான் என்ர மச்சானின்ர மூணாவது பிள்ளை பாபுவையே தத்தெடுத்துக்கறதுன்னு தீர்மானிச்சோம். என்ர மச்சானும் அவனுக்கு ரெண்டு வயசு நிறைஞ்சதும் எங்கிட்ட தந்துடறதா சொல்லியிருக்கார். நீங்க என்னடான்னா அதுக்குள்ள யாரையோ போய் தத்தெடுக்கச் சொல்லி என்னை அவசரப்படுத்தறீங்களே!"

"ம்..! ஏதோ பொண்ணுக்கு கல்யாணம் முடிச்சு இத்தனை வருசமாகியும் இன்னும் பேரனைப் பார்க்க முடியலியேங்கற ஆதங்கம்! இந்தப் பையனும், அந்தப் பாபுப்பயலை விட கண்ணுக்கு அம்சமாயிருந்தானா.. உங்கிட்ட காட்டித்தான் பார்ப்போமேன்னு ஒரு நப்பாசை! ஹூம்.." பெருமூச்சுடன் சொன்ன மீராவின் அப்பா, போட்டோவிலிருந்த அந்த ஒன்றரை வயதுப் பையனின் அழகு முகத்தை மீண்டும் ஒரு முறை இரசிக்க ஆரம்பித்தார் ஆசையாக! ■



படிப்பகம்

www.padippakam.com



# ஒரு நாள் வரும்

இலக்கிய நயம்

தருவது ரசிகன்

என்றுமில்லாத உருக்கம்
என்றுமில்லாத நெருக்கம்

அவன் செய்த கேலிகளால்
கண்ணில் நீர்வழியச் சிரித்தாள்!
அவள் சொன்ன பகடிகளால்
உடல் குலுங்க சிரித்தான்!

சிரிப் பொலியும்
சில்மிஷ நகைப்பொலியும்
மறுக்கின்ற குரல் ஒலியும்
கொடுக்கின்ற 'இச்' ஒலியும்
புரள்கின்ற மஞ்சத்தின்
பொறுக்காத முனகொலியும்
அறையெங்கும் நிறைந்து
கட்டில் களப் போருக்கு
முரசறைந்து கொண்டிருந்தது!

"ஒன்றும் ஒன்றும் சேர்ந்தால்
இரண்டாகும்!-என் கணக்கு!
ஒன்றும்-ஒன்றும் சேர்ந்தாலும்
ஒன்றாகும்! இது எம் கணக்கு!"

அவன் சொல்ல
அவள் சரிந்தாள்
பலகையென விரிந்த மார்பில்!

"கணக்கும் தப்பாகும் கண்ணே
நம் காதல் பிணைப்பில்!
பிணக்கும் பொய்யாகும் கண்ணே
நம் காதல் கலப்பில்!" என்றான்.

அவன் மார்பில் சாய்ந்தவள்
செல்லமாய் குத்தினாள்.

"முட்படுக்கை போலிருக்கிறது
முரட்டுத் தேகம்" என்றாள்.

அவன் மார்பின் உரோமங்களை
விரல் இறகால் வருடிக்கொண்டாள்.
வாள் வீச்சால் விளைந்த வடுவை
வாய் இதழால் வருடிவிட்டாள்!

"முரடன் என்றா சொன்னாய்
முறித்தாவிட்டேன் உன்னை?"

"தப்புத்தான்!
திருடன் என்றுதான்
செப்பியிருக்க வேண்டும்!"

கைகளை தொட்டுப் பார்த்தாள்
இரும்புச் சட்டங்கள்!

கால்கள் மட்டும் என்னவாம்
இரும்புத் தூண்கள்!

புடைத்திடும் தோள்கள்
துடித்திடும் உதடுகள்
இவை கடித்திடுமாயின்
இதழ்களின் கதி என்னாகும்?

எண்ணித்தான் பயந்து போனாள்
ஆசைக்கு அச்சம் தடையோ?
எண்ணத்தை ஆசை வெல்லும்!

"திருடனா? நானா?
திருடியது நீதான்!
முரடனா? நானா?
முட்டியது நீதான்!
கொம்புமான் நீதான்
கொம்புத்தேன் நீதான்
முட்டுவாய் மார்பில்
மோகத்தை ஊட்டுவாய்
தட்டினாய் காதல் கதவை
தங்கினாய் நெஞ்சக் கூட்டில்!"

"ம்ஹூம்..." உதடு சுளித்து உரைத்தாள்:
"அலைந்தது பின்னால் யாராம்?
குழைந்தது முன்னால் யாராம்?
எட்டி எட்டி கிட்ட வந்தது யாராம்?
தட்டியதும் நீர்தான்! காதல் கதவை
தட்டியதும் நீர்தான் மறவாதீர்!"

அவளின் காது மடலில்
உதட்டை சாத்திவைத்து
அன்றொருநாள் நடந்த
திருட்டைச் சொன்னான்!

"கண்கள் பட்டதும்
கனிந்த மாங்கனி
என் கைமில் வீழ்ந்தது!
காதல் பார்வையில்
கூதல் போனது
கள்ளப் பூங்கொடி
கைக்குள் வளைந்தது!"

சிணுங்கினாள் மெல்லப்
பிணங்கினாள்-ஆயினும்
உள்ளூறும் ஆசையில்
மயங்கினாள்!

"பின்னால் அலைந்து
முன்னால் வளைந்து
கால்கள் தேய்ந்து
கண்கள் இரங்கி
காட்சி நீர் தந்தீர்!
போனால் போகட்டும் என்று
சம்மதம் தந்தேன்!"

"இரக்கம் என்றால்
பிச்சை போடலாம்!
இளமை துள்ள
இச்சை காட்டலாமோ?
அது ஏன் பெண்ணே
கதை சொல் கண்ணே!"

அவன் கேள்வியால்
கொக்கி போட
கள்ளி சிக்கிவிட்டாள்!

கனிந்த கன்னம்
நனைந்தது முத்தத்தால்!
வளைந்த புருவம்
துடித்தது வெட்கத்தால்!

கலைந்த கூந்தல்
விரிந்தது வேகத்தால்!

மல்லாந்து சாய்ந்தது
மண்ணில் உதித்த நிலா

"நிலாவில் உள்ளதோ
மேடும் பள்ளமும்?"
நெஞ்சுக்குள் கிளர்ந்தது வினா!

"காதலாய் பார்க்கும் போது
வீழ்த்தும் பார்வை!
காமமாய் நோக்கும் போது
விழுங்கும் பார்வை!"

சொன்னவள் கையால்
பின்னினாள் அவன் கழுத்தை!

"உண்டால்தான் தேன்
இனிக்கும்.
உன்னை கண்டாலே
மனம் இனிக்கும்!
உண்டால்தான் கள்
வெறிக்கும்
உன்னை கண்டாலே
மனம் வெறிக்கும்!
தென்றல் பட்டால்தான்
தேகம் குளிரும்!
உன்னைக் கண்டாலே
தேகம் சிலிர்க்கும்!"

அவன் பட்டியலிட
"அவளவுதானா?" என்றாள்.

"மலர் நீ, மணம் நான்
பால் நீ, வெண் நிறம் நான்
தெளி தேன் நீ, சுவைநான்!
என்றும் பிரியாத வரம்தா
என நான் கேட்பேன் பரமனிடம்!"

சொன்னவன் வாய்மூட முன்னர்
கேட்டவள் மறுத்தாள்.

"நம்பேன் இதை
நான்!" என்றாள்.

வம்போ? என அவன்
நினைத்தான்.

"ஏன் கண்ணே
என்னில் இல்லையோ
நம்பிக்கை?"

"இருள் இருந்ததால்
ஒளியும் வரும்.
அமைதி தொடர்ந்திருந்தால்
புயலும் வரும் ஒருநாள்!
உறவு இனித்திருந்தாலும்
பிரிவும் வரும் ஒருநாள்!"

"இது என்ன கண்ணே
குருவாளாய்
வீசலாமோ வேதாந்தம்?"

"குருவாள் அல்ல
குறள் தரும் கூற்று!
மேதையான காதலர் வாழ்விலும்
பிரிவு என்பது உண்டு ஒருநாள்!"

என்றவள் சொன்னது
உண்மைதான்
என்று பட்டது!

"அரிதரோ தேற்றம் அறிவுடையார்
—கண்ணும்
பிரிவோ ரிடத்துண்மை யான்"
குறள்-1153. அதிகாரம்:116

தோடுதான் கேட்கிறார் போல் இருக்கிறது. "எதிர்க்கட்சியின் யோசனையை ஆராய்கிறோம்" என்று வெளியுலகம் முன்னால் கூறக் கூடியதாக இருக்குமல்லவா!

●●

★ சமீபத்தில் தங்களை கவலைகொள்ள வைத்த சம்பவம்?

ஜி. ஆதம்பாவா, மன்னார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியாகும் பத்திரிகை ஒன்றில்! போலிச்சாமி பிரேமானந்தாவின் பிறந்த நாளுக்காக யாரோ ஒருவர் விளம்பரம் செய்திருப்பதைப் பார்த்தேன். சக பத்திரிகை ஒன்று அதனை பிரசுரித்தது பற்றி கருத்துக் கூறுவது நாகரிகமல்ல. ஆனால் மனித மிருகத்துக்கு பிறந்தநாள் வாழ்த்துக் கொடுத்தார் பாருங்கள், அந்த ஆசாமியை நிற்கவைத்து....... தப்பேயில்லை என்பேன்! கீறிட்ட இடத்தை உங்கள் விருப்பப்படி நிரப்பவும்!

●●

★ ஈராக்மீது அமெரிக்கா போர் தொடுக்க ஆயத்தமாவது பற்றி?

மா. வாகீசன், ஹட்டன்.

வடிகட்டின பயங்கரவாதம்! ஆயுத உற்பத்தி பற்றிப் பேச அமெரிக்காவுக்கு என்ன யோக்கியதை இருக்கிறது?! இலங்கையில் உள்ள அமெரிக்க தூதரகம் முன்பாக இங்குள்ள முற்போக்கு சக்திகளும், முஸ்லிம் அரசியல்வாதிகளும் போராட்டம் நடத்தியிருந்தால் பாராட்டியிருக்கலாம்! சல்மான் ருஷ்டியைப் பற்றிப் பேசியவர்கள், ஆபத்தான சாத்தான் அமெரிக்கா! என்பதை மட்டும் மறந்து போனார்களோ? எல்லாம் அரசியல்தான்!

●●

★ ஹைக்கூ கவிதைகள் உங்களுக்குப் பிடிக்குமா?

எஸ். குமார், கொழும்பு-07.

ஹைக்கூவாக இருந்தால் பிடிக்கும். நிற்க, எழுத்தாளர் சுஜாதா ஹைக்கூ பாணியில் சொல்லியுள்ள ஒரே வாக்கிய கிரைம் கதை ஒன்று பார்க்கிறீர்களா?

"காப்பியைக் குடித்துவிட்டு உதட்டைத் துடைத்துக்கொண்டு, "உன்னை நான் கொல்லப் போகிறேன்!" என்று சொல்லி முடிப்பதற்குள் செத்துவிழுந்தான்– காப்பியில் நான் கலந்த விஷம்!"

●●

★ ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா ரூபவாகினிக்கு அளித்த பேட்டியைப் பார்த்தீர்களா?

எம். சுபைர்கான், கொழும்பு-09.

பார்த்தேன்! அரசியல் தீர்வு யோசனைகள் நிறைவானதல்ல என்பதை கூறுவதில் காட்டிய ஆணித்தரம், ஏனைய கேள்விகளுக்கான பதில்களில் இல்லையே! ஏனைய தமிழ்க் கட்சிகளுக்குள் இருப்பது நட்பு முரண்பாடு என்று அவர் கூறியது ஞாயிற்றுக்கிழமை. மறுநாள் திங்கட்கிழமை வவுனியாவில் இரண்டு தமிழ்க் கட்சிகள் நட்பாகச் சுட்டும், கைக்குண்டு வீசியும் மோதிக் கொண்டார்கள்! எல்லோருக்கும் புலிகளாகத்தான் ஆசை, முடியாது போனதால்தான் 'சீச்சி இந்தப் பழம் புளிக்கும்' என்கிறார்கள் என்பதற்கு மற்றொரு உதாரணம்!

●●

## சிந்தியா பதில்கள்

★ ஆசைப்படலாம், அளவுக்குமீறி ஆசைப்படக்கூடாது என்று முன்னர் ஒரு கேள்விக்குப் பதில் சொல்லி இருந்தீர்கள். அது எப்படி?

திருமதி பாமா நேசரத்னம், கண்டி.

பைரஸ் என்ற கிரேக்க மன்னன் ஒரு சமயம் இத்தாலிமீது படையெடுக்க ஆயத்தமானான்.

அப்பொழுது சீனியாஸ் என்ற ஞானி அங்கே வந்தார். மன்னனின் பிரயாணத்தைப் பற்றி விசாரித்தார்.

"ரோமாபுரியை ஜெயிப்பதுதான் என் முதல்வேலை" என்றான் மன்னன்.

"அடுத்தது?" என்றார் ஞானி.

"அடுத்தது இத்தாலியை ஜெயிப்பது!"

"அடுத்தது?" என்று தொடர்ந்து கேட்டார் ஞானி.

"இத்தாலியை வென்றதும் சார்த்தேஜ், மாஸிடோனியா, ஆபிரிக்கா ஆகிய தேசங்களின்மேல் படையெடுப்பேன்."

"சரி, எல்லா நாடுகளையும் ஜெயித்த பின்னர் என்ன செய்யப் போகிறாய்?"

"மீதியுள்ள காலத்தை அமைதியாகவும் இன்பமாகவும் கழிப்பேன்." என்றான் மன்னன்.

"அரசே! கடைசியில் செய்யப்போகும் அந்தக் காரியத்தை இப்போதே ஏன் செய்யக்கூடாது?" என்று கேட்டார் ஞானி.

மன்னன் வாயடைத்துப் போனான். அமைதியாகவும், இன்பமாகவும் வாழ்நாளை கழிக்க நினைத்தது நியாயமான ஆசை. நாடுகளைப் பிடிக்க நினைத்தது பேராசை.

●●

★ சந்தன மரக் கடத்தல்காரன் வீரப்பன் தகவல்களை பரிமாற 'கசட்டை' தேர்ந்தெடுத்திருப்பது ஏன்?

வி. நாகபூசனி, வவுனியா.

கம்பியூட்டர் தெரியாத காரணத்தால். தெரிந்திருந்தால் 'டிஸ்க்' மூலம் தகவல்களை அனுப்பியிருப்பான்!

ஸ்போர்ட்ஸ்

## "வெல்வதற்கு முயற்சிப்போம்"

"இந்திய மண்ணில் இந்திய அணியை வீழ்த்துவது என்பது கடினமான பணியே. இருப்பினும் டெஸ்ட் தொடரை வெல்வதற்கு முனைப்புடன் செயற்படுவோம்!" என்று இலங்கை கிரிக்கெட் அணியின் கப்டன் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இம்மாதம் 13ம் திகதி சென்னை விமான நிலையத்தில் அர்ஜுன ரணதுங்க நிருபர்களுக்குப் பேட்டியளித்தார். அதன் விபரம் வருமாறு:

**கேள்வி:** டெஸ்ட் தொடரில் இலங்கை அணியின் வெற்றி வாய்ப்பு எவ்வாறு உள்ளது?

**அர்ஜுன:** இந்திய அணியை இந்திய மண்ணில் வீழ்த்துவது கடினமே. இருப்பினும் இலங்கை வீரர்கள் அனைவரும் சிறப்பாக விளையாட வேண்டும் என்ற ஆவலுடன் உள்ளனர். இந்த டெஸ்ட் தொடரை வெல்வதற்கு நாம் முனைப்புடன் செயற்படுவோம்.

**கேள்வி:** அண்மையில் முடிவடைந்த பாகிஸ்தான் 'சுதந்திர பொன்விழா' கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி, தொடர்ச்சியாக இரண்டுமுறை தென் ஆபிரிக்க அணியிடம் தோல்வியைத் தழுவியதே....?

**அர்ஜுன:** லீக் போட்டியை நாங்கள் சாதாரணமாக எடுத்துக் கொண்டதால் தோல்வியடைந்தோம். இறுதிப்போட்டியில் தென் ஆபிரிக்க அணி அபாரமாக விளையாடியதால் நாங்கள் தோல்வியடைய நேரிட்டது.

**கேள்வி:** ஒருநாள் போட்டிகளைப் பொறுத்தவரை தென் ஆபிரிக்க அணியைப் புதிய உலக சம்பியனாகக் கருதலாமா?

**அர்ஜுன:** தென் ஆபிரிக்காவின் இரண்டு வெற்றிகளை அடிப்படையாகக் கொண்டு நீங்கள் எப்படி இவ்வாறு கூற முடியும்? தென் ஆபிரிக்கா- இலங்கை அணிகள் இதுவரை 10 போட்டிகளில் மோதியுள்ளன. இதில் இரு அணிகளும் தலா 5 போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளன.

மேலும் அடுத்த உலகக்கோப்பை முடிவடையும்வரை இலங்கைதான் அதிகாரப்பூர்வமாக சம்பியன் என்பதைக் கவனத்தில் கொள்வது நல்லது.

## கிரிக்கெட் துளிகள்

★ 99 ஓட்டங்கள் எடுக்க 500 நிமிடங்களாயிற்று ஓர் இந்திய கிரிக்கெட் வீரருக்கு. யார் அவர்?

ஜெயஸிம்ஹா (1960ல் பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில்)

★ பேட்டிங் ஓடரில் எட்டாவதாக வந்து மிக அதிக ரன் எடுத்தவர் யார்? எத்தனை ஓட்டங்கள்?

இம்தியாஸ் அஹமட் (பாகிஸ்தான்). 209 ஓட்டங்கள்.

★ அலுமினிய பேட் எடுத்து ஆடவந்த பேட்ஸ்மன் யார்?

அவுஸ்திரேலிய வீரர் லில்லி.

★ ஐந்து பந்துகளில் நான்கு பாகிஸ்தான் வீரர்களை அவுட்டாக்கிய இங்கிலாந்து வீரர் யார்?

கிரைஸ் ஓல்ட்.

★ 'சன்னி டேய்ஸ்' என்ற புத்தகத்தை எழுதிய கிரிக்கெட் வீரர் யார்?

இந்தியாவின் சுனில் கவாஸ்கர்.

## வக்கார் யூனுஸ் நீக்கம்

பாகிஸ்தான் 'சுதந்திர பொன்விழா' கிரிக்கெட் போட்டிக்காக பாகிஸ்தானுக்குச் சென்ற மேற்கிந்தியத்தீவு அணி, அங்கு பாகிஸ்தானுடன் 3 டெஸ்ட் போட்டிகளில் விளையாடுகிறது.

பாகிஸ்தான்- மேற்கிந்தியத்தீவு அணிகளுக்கிடையே நடைபெறும் டெஸ்ட் தொடரில், பாகிஸ்தானின் வேகப்பந்து வீச்சாளர் வக்கார் யூனுஸ் அணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

மேற்கிந்தியத்தீவுக்கெதிராக விளையாடும் பாகிஸ்தான் வீரர்கள் பட்டியல் அண்மையில் வெளியிடப்பட்டது. இதில் வக்கார் யூனுஸின் பெயர் இருக்கவில்லை. இவருக்குப் பதிலாக ஷஹிட் நஸீர் இடம் பெற்றுள்ளார்.

யூனுஸ் நீக்கத்திற்கான காரணம் என்ன? என்று தெரிவிக்கப்படவில்லை.

பாகிஸ்தான் தேர்வாளர்களின் இந்த முடிவு தனக்கு வியப்பளிப்பதாக யூனுஸ் தெரிவித்துள்ளார்.

## இவர்கள்தான் அவர்கள்



விசித்ரா



ரொஷான் மகாநாம

★ 'கற்பழித்து கொலை', 'கற்பழிப்பு, மாறி மாறி கற்பழித்தனர்', 'பலமுறை கற்பழித்தனர்' புளித்துப் போன இந்த பதப்பிரயோகங்களுக்கு முடிவு எப்போது?

செல்வி அ. தயாநிதி, கல்முனை.

குறிப்பிட்ட பதப்பிரயோகங்களை பயன்படுத்துவோரின் இரத்த பந்தங்களுக்கு கேடு வந்தால்தான் முடிவு வரும்! எங்கள் பெண்களை கேவலப்படுத்தும் ஒரு வார்த்தைப் பிரயோகத்தைக்கூட திருத்திக்கொள்ள முற்படாதவர்களின் பொறுப்புணர்வை எண்ணி வேதனைப்பட வேண்டியதுதான்!

●●



பெரியமனுசன் படத்தில் சத்யராஜ்–கிளாரா

★ டிசம்பர் 16ம் திகதிக்குள் ஐ.தே.கட்சி தனது யோசனைகளை சமர்ப்பிக்க வேண்டும் என்று நீதியமைச்சர் கூறியுள்ளாரே?

என். நவாஸ், புத்தளம்.

அடுத்த ஆண்டு இறுதியில்தான் தீர்வு என்றுள்ளார் ஜனாதிபதி. நீதியமைச்சர் கேட்பதைப் பார்த்தால், அடுத்த ஆண்டு இறுதி வரை விவாதிக்கத் தோதான திட்டத்

## கற்பை ஏன் அழிக்கிறார்கள்?

★ தீபாவளிப் படங்களில் முதலிடத்தில் உள்ள மூன்று கூறுக?

பி. சிவமனோகரன், திருமலை.

வினாப்பத்திரம் தயாரிப்பவரா நீங்கள்?

குசும்புக்கு- பெரிய மனுசன், ஜானகிராமன்.

குடும்பத்தோடு இரசிக்க- பொற்காலம், ஆஹா.

பிரமாண்டம்+கவர்ச்சி= ரட்சகன்

முக்கிய குறிப்பு: வீடியோவில் 'பொற்காலம்' பார்ப்பதாயின் கனமான கைக்குட்டை ஒன்று வைத்திருக்கவும். கண்ணீர் துடைக்க உபயோகப்படும்.

●●

★ தன்னடக்கம் உள்ளவர்கள் எப்படி இருப்பார்கள்?

சி. லோரன்ஸ், மட்டக்களப்பு.

பிரிட்டிஷ் பிரதமர் சர்ச்சில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுவதற்காகச் சென்றிருந்தார். ஒரு இலட்சம் பேருக்கு மேல் கூட்டம் திரண்டிருந்தது. சர்ச்சிலின் நண்பர் சர்ச்சிலிடம் சொன்னார்:

"உங்கள் சொற்பொழிவைக் கேட்க, எவ்வளவு மக்கள் பார்த்தீர்களா? மக்கள் உங்களிடம் எவ்வளவு அன்பும், அபிமானமும் வைத்திருக்கிறார்கள் என்பதைத் தான் இது காட்டுகிறது."

உடனே சர்ச்சில் என்ன சொன்னார் தெரியுமா?

"கூட்டத்தை கண்டு ஏமாறக் கூடாது. என்னை இன்று நடுத் தெருவில் தூக்கில் போடுகிறார்கள் என்று அறிவித்தால், அதை வேடிக்கை பார்க்க இதைவிட மூன்றுமடங்கு அதிகமாகக் கூட்டம் வந்திருக்கும்."

●●



படிப்பகம்

www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 109

## இலங்காபுரியெங்கும் எழுந்தது பெரும் ஓலம்

இராமபிரான் தியானத்தில் ஆழ்ந்திருந்தார். தம்பி இலக்குவன் இந்திரஜித்துடன் போராடப்புறப் பட்டுச் சென்றபோது, அவருடைய உள்ளத்தில் பெரும் வேதனை அலைமோதியது. இலக்குவன் இந்திரஜித்தை நிச்சயமாக வென்று திரும்புவார் என்று திடமாக நம்பியிருந்தபோதிலும், இந்திரஜித்து சிறந்த



### இராஜகாமரி

வீரன் மட்டுமல்லாமல் மாயாஜால வித்தைகள் தெரிந்தவன் என்பதனால் தன் தம்பிக்கு ...ிருந்த உடல் வேதனையைக் கொடுப்பான் ...ன்றுதான் அவர் கவலைப்பட்டார். 'இந்திர ...ித்தின் கணைகள் இலக்குவன் உடலைச் ...ல்லடையாகத் துளைத்து குருதியைக் கொட்ட ...வைக்கும். தம்பி துடிதுடிப்பானே!' என்றெல் ...லாம் அவர் துடித்தார். இவ்வாறு தனது ...னதை வீணாக அலையவிடலாகாது என்று ...ருதியமையினால்தான் புலன்களை அடக்கி ...யானத்திலமர்ந்தார்.

இத்தனை நாட்கள் நடைபெற்ற யுத்தம் ...லங்காபுரி நகரின் வடவாயிற் கோட்டை ...ருகே நடைபெற்றமையினால், தான் இருந்த ...டத்திலிருந்த வண்ணம் சற்றுத் தொலை ...ில் நடைபெற்ற சம்பவங்களை இராம ...ிரான் ஓரளவாவது காணக்கூடியதாக இருந் ...து. ஆனால் இந்திரஜித்துவுக்கும் இலக்கு ...னுக்கும் நடைபெற்ற போரோ சற்றுத் ...தாலைவிலுள்ள நிகும்பலை தேவதையின் ...லயத்தின் அருகே நடைபெற்றது. போர் ...னைக்கு ஆஞ்சநேயரின் தோள்மீது ஏறிப் ...றப்பட்டபோது இருவருமே மானசீகமாக ...ராமபிரானை துதித்ததை அவர் உணர்ந்து ...சியையும் வழங்கினார்.

இந்திரஜித்து மாண்டதும் வானரவீரர் ...ளின் ஜயகோஷம் வானைப் பிளந்தது. ...ாலியின் மகன் அங்கதன், இந்திரஜித்தின் ...லையைத் தன் கையில் எடுத்துக்கொண்டு ...த்தாடிய வண்ணம் முன்சென்றான். ...தாடர்ந்து வானர சைனியம் அலையலை ...ாகச் சென்றது. இடையில் இலக்குவனைச் ...ந்த வண்ணம் ஆஞ்சநேயர் சென்றார். ...வ்வாறு மகிழ்ச்சி ஆரவாரத்துடன் இராம ...ிரானின் பர்ணசாலையை வீரர்கள் அடைந்த ...தே வேளையில் அவரும் தியானம் ...லைந்து கண் விழித்திருந்தார். அன்னாரின் காலடியில் இந்திரஜித்தின் தலையை வைத்து சாஷ்டாங்கமாக அங்கதன் விழுந்து வணங்கினான். அவனை வாரி எடுத்து அணைத்து ஆசி வழங்கினார் இராமபிரான்.

ஆஞ்சநேயர் அடுத்து, இலக்குவனைத் தாங்கியவண்ணம் ஓடி வந்து இராமபிரான் முன்தரை இறக்கிவிட்டு, அண்ணலின் தாள் தொட்டு வணங்கினார். அங்கதனை அணைத்ததைப் போன்று ஆஞ்சநேயரையும் இறுக அணைத்து தனது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொண்டார்.

### காயங்கள் மறைந்தன

இலக்குவனைக் கண்டதும் இராமபிரானின் கண்களில் கண்ணீர் பெருகியது. அவருடைய பாதங்களைப் பற்றிய வண்ணம் இலக்குவன் தரையில் வீழ்ந்து வணங்கினார். இராமபிரான் தம்பியைத் தூக்கி நிறுத்தி மார்புறத் தழுவினார். இலக்குவனின் உடலெங்கும், இந்திரஜித்து எய்த பாணங்களால் எண்ணற்ற ரணங்கள் காணப்பட்டன. அத்தனையும் குருதியைப் பெருக்கிய வண்ணம் இருந்தன. இராமபிரானின் மார்பிலும் இலக்குமணரின் உடலிலிருந்து வெளிப்பட்ட குருதி தோய்ந்தது.

**காளமேகத்தைச் செக்கர்**
**கலந்தெனக் கரிய குன்றில்**
**நான் வெயில் பரந்தது என்ன**
**நம்பிகள் தம்பி மார்பில்**
**தோளின் மேல் உதிரச் -**
**-செங்கேழ்ச்**
**சுவடு தன் உருவில்**
**தோன்ற**
**தாளின் மேல் வணங்கினானைத்**
**தழுவினன் தனித்து ஒன்று இல்லான்.**
(யுத்த காண்டம்-3123)

**பொருள்:**

*கருமை நிறைந்த முகில் கூட்டமானது சிவந்த வானத்தை அணைத்துக் கொண்டது போலவும், கருமையான மலையின் மீது பகலவன் ஒளி படர்ந்தது போலவும், இலக்குவனின் மார்பிலும் தோள்மீதும் இருந்த காயங்களிலிருந்து வெளிப்பட்ட குருதி தனது மேனியில் படியும் படி, தன் தம்பியைத் தவிர வேறு எவருமற்றவரான இராமபிரான், தனது தாளினைத் தொட்டு வணங்கியவனை எடுத்து தன்னுடன் அணைத்துக்கொண்டார்.*

இலக்குவனின் மேனி முழுவதும் இருந்த காயங்கள் அதுவரை பெரும் வேதனையை அளித்தது. இராமபிரானின் அரவணைப்புடன் வேதனை இருந்த இடம் தெரியாமல் மறைந்து போயிற்று. காயம்பட்ட வடுக்கள் கூட மறைந்துபோயின. இலக்குவனைப் பார்த்த இராமபிரான் புன்முறுவலுடன், "இலக்குமணா! இந்திரஜித்து உண்மையில் ஒரு மாபெரும் வீரன்; அவனை வெல்வது என்பது சாதாரணமான ஒரு விடயமல்ல. உன்னுடைய திறமைகளினாலோ ஆஞ்சநேயரின் ஆற்றலினாலோ மட்டும் இந்திரஜித்து வீழ்த்தப்படவில்லை. அவனுடைய பலவீனம் எது என்று தக்க தருணத்தில் உங்களுக்கு எடுத்துக் கூறி, அவனைக் கொல்வதற்கு வழிகாட்டியவர் விபீடணர் அவர்களே!" என்று கூறினார். அந்த உண்மையை அனைவரும் ஏற்றனர். விபீடணர் இதனைக் கேட்டதும் கண்ணீர் மல்க இராமபிரானின் தாளினைத் தொட்டுத் தன் கண்களில் ஒற்றிக் கொண்டார். கண்கள் ஊற்றெனக் கண்ணீரை உகுத்தன.

இந்திரஜித்து பிறந்து வளர்ந்த காலத்தில் தன் சித்தப்பாவான விபீடணரின் தோள் மேலும் மார்மேலும் மடிமீதும் ஏறித் துள்ளி விளையாடியவன். அவன் மீது அளவற்ற அன்பு சொரிந்தவர் விபீடணர். ஆகவே அவர் இப்போது சொரிந்த கண்ணீர் அவன் மீது வைத்திருந்த பெரும் பாசத்தின் அடிப்படையாகவும் எழுந்திருக்கலாம் என்பதை இராமபிரான் முதலாக அங்கு நின்றிருந்த அனைவரும் உணர்ந்திருந்தனர்.

***

### இராவணன் கலக்கம்

வானர வீரர்கள் நிகும்பலையிலிருந்து இராமபிரான் இருந்த இடம்வரை வெற்றிக் களிப்புடன் ஆடிப்பாடி மகிழ்ந்து, ஊர்வலமாகச் சென்றபோது எழுப்பிய கோஷங்கள் இலங்கை மாநகரக்கோட்டையிலும் எதிரொலித்தன. அங்கிருந்த அரண்மனைகள், அந்தப்புரங்கள் எங்கும் கேட்டன. போர் முனையிலிருந்து தப்பி ஓடிய அசுர வீரர்கள் பலர் கோட்டைக்குள் ஓடிச் சென்றனர். இராவணன் இருந்த இடத்தை அணுகிய தகவலாளர்கள், அவனுடைய அருமை மகன் இந்திரஜித்து மறைந்த செய்தியை எப்படிக் கூறுவது என்று தெரியாமல் தவித்தனர். தனது மாளிகையில் ஒரு புறத்தே சிந்தனையிலாழ்ந்திருந்த இராவணனுக்கு வானர வீரர்களின் வெற்றிமுழக்கம் கேட்டவண்ணம் இருந்தமையினால் மனம் கலங்கிய நிலையிலிருந்தான். சோகமே உருவாக சேவகர்கள் நின்றதைக் கண்டு, அவர்களை அருகே வருமாறு சைகை மூலம் பணித்தான். அதுவரை பல நல்ல செய்திகளைக் கூறி பல பரிசில்களைப் பெற்றவர்கள், துன்பம் தோய்ந்த இத்தகவலைக் கூறத்துணிவற்ற நிலையில் நின்றனர்.

"என்ன நடந்தது? உண்மையை உள்ளபடி கூறுங்கள்!" என்ற இராவணனின் குரலில் எப்போதுமிருக்கும் கடுமை காணப்படவில்லை. இதனால் சேவர்கள் இந்திரஜித்து மாண்ட செய்தியைக் கூறினார்கள்.

"மகனே! இந்திரஜித்தா! உன்னை நானே கொலைக்களம் அனுப்பிவிட்டேனா? என்னைப்போல் மூன்றுலகையும் உன்னடிப் படுத்தி, ஒப்புயர்வற்ற மாமன்னனாக இலங்காபுரியின் சிம்மாசனத்தில் வீற்றிருப்பாய் என்று கனவு கண்டேனே! அத்தனையும் பொய்யாகிவிட்டதேடா!" என்று அந்த அரண்மனையே அதிரும் வண்ணம் பெரும் சப்தத்துடன் அழுதான். அதனைத் தொடர்ந்து தன் கண்களை மூடியவண்ணம் அருகே இருந்த இருக்கையில் சாய்ந்தான். சிறிது நேரம் அமைதியாக இருந்தவன் மீண்டும் எழுந்து துன்பம் தாங்காமல் பைத்தியம் பிடித்தவன்போல் அரற்றலானான். அவனுடைய வாய்கள் பத்தும் இந்திரஜித்தின் பல தரப்பட்ட பெருமைகளையும் தனித்தனியாக வர்ணித்துப் புலம்பின.

### சோக வெள்ளத்தில் இலங்காபுரி

கொலைக்களம் சென்று தனது மகனுடைய சடலத்தைக் கண்டு, அதனைத்தானே சுமந்துவர நோக்கம் கொண்டவனாக இராவணன் புறப்பட்டான். அங்கே அவன் கண்ட காட்சி அவனை வேதனையின் உச்சத்துக்கே இழுத்துச் சென்றது. தலையற்ற வெறும் முண்டமாகவே அவனுடல் காணப்பட்டது. துயரத்துடன் அடக்க முடியாத கோபமும் தலைக்கேறியது. அழுது புலம்பிய வண்ணம் இந்திரஜித்துவின் உடலைத் தன் தோளில் சுமந்த வண்ணம் நகருக்குள் புகுந்தான்.

இதற்கிடையில் காட்டுத் தீபோல் இலங்காபுரியெங்கணும் இளவரசன் இந்திரஜித்து மாண்ட செய்தி பரவியிருந்தது. நகர மக்கள் அனைவரும் சோக வெள்ளத்தில் மூழ்கியிருந்தனர். இராவணன் கால் நடையாக நகரை விட்டு வெளியேறியதைக் கண்ட மக்கள் அவனைத் தொடர்ந்து சென்றனர். சடலத்துடன் திரும்பிய இராவணனுடன் மக்களும் ஓவெனக் கதறிக்கொண்டு திரும்பினர்.

இராவணனின் பத்தினி மண்டோதரி, தன் மகன் இறந்த செய்தியால் பெரும் துயரடைந்தாள். பெரும் சப்தமிட்டு அழுது புலம்பிய வண்ணம் இராவணன் இருந்த இடம் சென்றாள். அவன் மண்டோதரியை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. பார்ப்பதற்கேற்ற தைரியமும் இராவணனிடம் அப்போது இருக்கவில்லை.

அரக்க இனப் பெண்களின் அவலக் குரலும் வான் முட்ட எழுந்தது. அவற்றையெல்லாம் தன் காதுகளில் வாங்கிய இராவணனின் கோபம் கொலை வெறியாக மாறியது. இத்தனை துன்பங்களுக்கும் காரணம் சீதைதான் என்ற முடிவுக்கு வந்தவன், பிராட்டியாரை தன் உடைவாளால் ஒரு வெட்டாக வெட்டிக் கொன்றுவிட வேண்டும் என்ற முடிவுக்கு வந்தான். உடைவாளை உருவிய வண்ணம் புறப்பட்டான்.

(தொடர்ந்து வரும்)

### இராமாயணப் போட்டி: 107

சரியானவிடை:- (1)தேர்ப்படை, (2)யானைப்படை, (3)குதிரைப்படை, (4)காலாட்படை

1. எம். உதுமன், ...பாடசாலை வீதி, மட்/ கரையாக்கந்தீவு, கன்னங்குடா.
2. செல்வி சசிந்தா சதாசிவம், ...உன்னஸ்கிரிய, பெரியமோலை, எல்கடுவ.
3. செல்வி லரீமா லஹுான், அக்கர மல, மக்கொனை.
4. பி. சுந்தரேஸ்வரி, இல. 70/1, டனல் பங்களா, ஹட்டன்.
5. செ. அர்ஜுனி தேவி, இல 165/8, பிரதவெல வீதி, மாத்தளை.

**போட்டி இல. 109** கேள்வி:- **இந்திரஜித்துவின் தாயின் பெயர் என்ன?**

...வம்பர் 29 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**இராமாயணப் போட்டி-இல.109, தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.**

# ஒற்றுமையான உதை

### காதிலை பூ கந்தசாமி

**பொதுஜன முன்னணியும், ஐக்கிய தேசியக் கட்சியும் கைகுலுக்கிக் கொள்கின்றன. ஆனந்தக் கண்ணீருடன் அக்காட்சியை கண்டு இன்புறுகின்றன தமிழ்க்கட்சிகள்.**

**தமிழ்க் கட்சிகள்:** (தமிழ்க் கட்சிகள் சார்பாக சீலன் மாமா பாடுகிறார்)

ஓ..வாட் எ லக்கி டே!
ஓ..வாட் எ லக்கி டே
குட் குட் ஒற்றுமை
குட் குட் ஒற்றுமை

**சபா சிதம்பரம்:** (குரல் துடிதுடிக்கப் பாடுகிறார்)

காணக் கண் கோடி வேண்டுமய்யா
இந்த காட்சியைக் காண
காண.. காண.. காண
கண் கோடி வேண்டும் ஐயா
கண் கொள்ளாக் காட்சி ஐயா
கண் படப் போகுதய்யா
காணக் கண்கோடி வேண்டும் ஐயா!

**பொது.ஜ.மு:** உங்கள் முயற்சிக்கு எங்கள் பாராட்டுக்கள்! உங்கள் முதுகுகளையும், தோள்களையும், ஏன் தலைகளைக்கூட குனிந்து நாங்கள் கால்வைத்து ஏறிச்செல்ல உதவினீர்கள்! நாங்கள் ஒற்றுமைகாணப் படிக்கட்டுக்களாக இருந்த உங்களுக்கு நன்றி சொல்லப் போவதில்லை.

**த.கட்சிகள்:** (அதிர்ச்சியாகின்றன) என்ன.. ஒரு.. ஒரே ஒரு நன்றிகூடவா இல்லை?

**பொ.ஜ.மு:** ஹாஹாஹா... உங்கள் முதுகுகளுக்கும், தோள்களுக்கும், குனிந்த தலைகளுக்கும்தானே நன்றி சொல்லவேண்டும்..... ஹாஹாஹா!

**சபா சிதம்பரம்:** ஆஹா.. இதுவரை கூறப்பட்டவற்றில், நாம் கேள்விப்பட்டவற்றில் முன்னேற்றமான பாராட்டு இது. இந்த நன்றி கூறும் யோசனையை யாரும் குழப்பவேண்டாம் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்!

**த.கட்சிகள்:** (ஜால்ரா தட்டிக்கொண்டு பாடுகின்றன)

ஒன்னாயிருக்கக் கத்துக்கணும்!-இந்த
உண்மையைச் சொன்னா ஒத்துக்கணும்!
காக்கா கூட்டத்தைப் பாருங்க! அதுக்கு
கத்துக் கொடுத்தது யாருங்க?

**ஐ.தே.கட்சி:** தாங்யூ, தாங்யூ வெரிமச்! நீங்கள்தான் எங்களுக்கு கற்றுத் தந்தீங்க! நாங்கள் உங்களுக்கு கற்றுத்தரப் போறோம் பாருங்க!

**தமிழ்க் கட்சிகள்:** (துள்ளித் துள்ளிப் பாடுகின்றன)

ஒன்று எங்கள் ஜாதியே
ஒன்று எங்கள் நீதியே
ஒன்று எங்கள் ஜாதியே
ஒன்று எங்கள் நீதியே

**ஐ.தே.க:** (பொது ஜன முன்னணியை நோக்கி) தமிழ்க் கட்சிகளின் இந்த யோசனை பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**பொ.ஜ.மு:** எந்த யோசனை?

**ஐ.தே.க:** ஒரே ஜாதி ஒரே மக்கள்!

**பொ.ஜ.மு:** ஒரே தேசம் ஒரே மக்கள் என்று நாங்கள் சொன்னோம். இவர்கள் அதைவிட கீழே இறங்கிவிட்டார்களப்பா. நாங்கள் இரண்டு பேரும் இன்னமும் இறுக்கமாக நின்றால், 'ஒரே வீடு ஒரே மக்கள்' என்றாலும் ஒகே என்பார்கள்.

**தமிழ்க் கட்சிகள்:** நீங்கள் ஒன்றுபட்டு விட்டீர்கள்! இந்த நன்நாளில் நானிலம் போற்றும் பொன்னாளில் நமக்கு ஒரு நல்ல தீர்வு சொல்லுங்கள்?

**பொ.ஜ.மு:** நண்பரே! இந்த கோரிக்கைக்கு பதிலை நான் சொல்லட்டுமா? அல்லது நீரே சொல்கிறீரா?

**ஐ.தே.க:** நீர் சொன்னால் என்ன, நான் சொன்னால் என்ன? நீர் பாதி நான் பாதி. இதில் ஏது மீதி?

**பொ.ஜ.மு:** அப்படியானால் நீரே செப்பும்.

**த.கட்சி இல1:** செப்பினால் என்ன துப்பினால் என்ன, விரைவாகச் சொன்னால் நன்று.

**த.கட்சி இல2:** விரைவாகச் சொல்லுங்கள் ஆனால் பார்த்து கொஞ்சம் நியாயமாகப் போட்டுத்தாருங்கள்.

**சபா சிதம்பரம்:** தயவு செய்து யாரும் குழப்ப வேண்டாம். இதுவரை தர நினைச்சதைவிட இவை தரப்போறதுக்கு நிறை அதிகம். நல்லா வளைஞ்சு நில்லுங்கோ. அப்பதான் முதுகில் தூக்கிவைக்க ஈசியாக இருக்கும். நிமிர்ந்து நின்று குழப்பவேண்டாம்!

குனிந்து நில், குழைந்து பேசு
பணிந்து போ, பவ்வியமாய்ச் சிரி
பதவி பறிபோகாது பின்னாய்!

**த.கட்சிகள்:** என்னய்யா இது, துணிந்து நில், தொடர்ந்து செல் தோல்வி கிடையாது தம்பி என்றுதானே உங்கள் எலக்ஷன் கூட்டங்களில் ஸ்பீக்கரில் பாட்டுக் கேட்டனாங்கள்.

**சபா சிதம்பரம்:** ஹிக்கிஹி ஹிக்ஹி.. இளமைத் துடிப்பில் நாங்கள் போட்ட பாட்டுகள் தம்பிமார் அது. அந்தப் பாட்டெல்லாம் ஏன் போட்டோம், ஏன் கேட்டோம் என்று இன்று நான் வருந்தாத நாள் கிடையாது. இந்த வருத்தம் உங்களுக்கும் வயதான பின்னர் வரக்கூடாது. தயவு செய்து குனிஞ்சு நில்லுங்கோ.. பொதியைச் சுமக்க முதுகு ரெடியா இருக்கட்டும்.

**ஐ.தே.க:** (தொண்டையை செருமிக் கொண்டு பாடுகிறது)

ஒன்னாயிருக்க கத்துக்கணும்-இந்த
உண்மையைச் சொன்னா ஒத்துக்கணும்
தமிழ்க் கட்சிகள் ஒன்னாயிருக்க
கத்துக்கணும், கத்துக்கணும்
உலகம் இதை ஒத்துக்கணும்

காக்கா கூட்டத்தைப் பாருங்க
அதுக்கு கல்லெறிஞ்சா ஓடுங்க
நீங்களும் அப்படி ஓடுங்க
பொதியை மறந்து பாடுங்க

**த.கட்சிகள்:** என்னப்பா இது அநியாயம்? ஒன்றுபடச் செய்தது நாங்கள்? எங்களுக்கே போதிக்கிறீர்களே? இது நியாயமா?

**பொ.ஜ.மு:** எது நியாயம், எது அநியாயம் என்று தமிழ்க்கட்சிகள் கற்றுத்தரும் அளவுக்கு கெட்டுப் போகவில்லை நாங்கள்.

**த.கட்சிகள்:** இதை உலகம் அறிந்தால் என்னாகும் தெரியுமா?

**பொ.ஜ.மு:** ஒன்றும் ஆகாது! ஏன் தெரியுமா? நாங்கள் இரு தரப்பும் ஒன்றுபட்டு விட்டால், எல்லாவற்றையும் வென்றுவிடலாம் என்று எங்கள் சார்பாக உலகத்துக்குச் சாட்சி சொன்னதே நீங்கள் தானே! ஹாஹாஹா

**த.கட்சிகள்:** எங்களை ஏமாற்றி விட்டதாக எடுத்துச் சொல்லுவோம்!

**ஐ.தே.க:** நாங்கள் ஒன்றுபட்ட செய்தியை உரத்துக் கத்தி கத்திச் சொன்னதில் உலகத்தின் செவியே அடைத்துவிட்டதாம். இந்த ஆரவாரத்தில் உங்கள் குரல் யார் காதில் விழப்போகிறது? ஹாஹாஹா ஹிஹிஹி.

**த.கட்சிகள்:** பொதியை தாருங்கள். நாங்கள் போய்விடுகிறோம்.

**பொ.ஜ.மு:** பொதியை சுமந்து செல்வது யார் என்பதில் உங்களுக்குள் ஒற்றுமை இருப்பதாகத் தெரியவில்லை.

**ஐ.தே.க:** ஆம்.. ஆம்.. தெரியவில்லை!

**பொ.ஜ.மு:** கனமான பொதியாகத் தந்தால் நீங்கள் தனியாக போய்விடுவீர்களோ என்றும் சந்தேகமாக உள்ளது.

**ஐ.தே.க:** அதனால் பிரிக்க முடியாத பொதியாக தருகிறோம். சுமந்துகொண்டு போங்கள். ஒன்றரை வருடத்தின் பின்னர் பிரித்துப் பார்க்கலாம்.

**த.கட்சிகள்:** அது என்ன ஒன்றரை வருடக் கணக்கு?



**ஐ.தே.க:** நாங்கள் ஆராய ஆறுமாதம். இவர்கள் அலச ஆறுமாதம். இரண்டையும் ஒன்றாக்கி கலக்கிப் பார்க்க ஆறுமாதம். மொத்தம் ஒன்றரை வருடம்.

**பொ.ஜ.மு:** அதன்பின்னரும் தமிழ்க் கட்சிகளாகிய நீங்கள் ஒன்றுபடத் தயாராக இல்லையென்றால் அதற்கான முயற்சியில் நாம் தனியாக ஆறுமாதம், அவர்கள் தனியாக ஆறுமாதம் தீவிரமாக ஈடுபடுவோம்.

**த.கட்சிகள்:** இதைவிட நீங்கள் ஒன்றுபடாமலேயே இருந்திருக்கலாம்.

**ஐ.தே.க:** யோவ்! நாங்களாக உங்களிடம் வந்து, எங்களை ஒற்றுமைப்படுத்தச் சொல்லிக் கேட்டோமா? நீங்கள்தானே முன்னும் பின்னுமாக அலைந்து எங்களை சேர்த்து வைத்தீர்கள்! இப்போது என்ன முணு முணுப்பு வேண்டிக்கிடக்கு?

**த.கட்சிகள்:** ஐயா! சிதம்பரம் ஐயா! நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

**சபா சிதம்பரம்:** இரண்டு கட்சியும் இணைந்தது ஒரு வரலாற்றுத் திருப்பம்! ரேனிங் பொயின்ற்! இதனை குழப்ப வேண்டாம். கடந்த காலத்தை மறக்கக்கூடாது! எந்தக் காலத்திலாவது இப்படி இணைந்து நின்று இரு கட்சிகளும் பேசியது உண்டோ? இந்த பொன்னான வாய்ப்பை கெடுக்காமல் குனிஞ்சு நில்லுங்கோ.

இரு கட்சிகளும் தமிழ்க் கட்சிகளின் முதுகுகளில் ஏறி நின்று அகில உலகத்துக்கு கையசைக்கின்றன.

பின்னர் தோளில் ஏறி நின்று, விக்கெட்டை வீழ்த்திய மகிழ்ச்சியில் கிரிக்கெட் வீரர்கள் கைகளை உயர்த்தி தட்டுவதுபோல தட்டிக் கொள்கின்றனர்.

உலகம் திருப்தியாகப் புன்னகைக்கிறது.

பின்னர் கீழே இறங்கி நின்று பாடுகின்றன.

ஒன்னாயிருக்க கத்துக்கணும்
பொதி சிறிசா இருந்தாலும்
ஏத்துக்கணும்!
தமிழ்க் கட்சிகள் ஒன்னாயிருக்க
கத்துக்கணும்!
நாங்கள் தருவதை நீங்கள்
வாங்கிக்கணும்!

பொ.ஜ.முயும், ஐ.தே.கவினரும் ஒன்றாக ஸ்லோ மோசனில் தங்கள் கால்களை உயர்த்தி உதைக்கிறார்கள். தமிழ்க் கட்சிகள் முகம் குப்புற விழுகின்றன.



படிப்பகம்

Regd. as a News Paper at the G.P.O.(QD/45/NEWS/97)

www.padippakam.com




அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS
பெண்களின் அழகோ இரகசியம்! அதை
எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன
கிளை:
105, காலி வீதி,வெள்ளவத்தை,கொழு-06 580230
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
436331


# இளமை



➡ புகைப்படங்களுக்கு போஸ் கொடுப்பது, எடுத்த புகைப் படங்களை பத்திரமாக வைத்திருப்பது என்பவை சிறு வயதில் இருந்தே டயானாவுக்கு பிடித்தமானவை. அப்போது டயானாவை துரத்தித் துரத்திப் படம் எடுக்க ஆளில்லை. ஆனாலும் நீச்சல் உடை உட்பட பல விதமான உடைகளுடன், பலவித கோணங்களில் டயானாவை அவரது தோழிகள், சகோதரிகள் ஆகியோர் படம் எடுத்தனர். இங்குள்ள படமும் டயானாவின் திருமணத்தின் முன்னர் எடுக்கப்பட்ட படம்தான்.

நேரில் அழகாக இருப்பவர்களை கமராவால் கிளிக் செய்து புகைப்படமாக பார்த்தால் சகிக்காது. சிலர் நேரில் சுமாராக இருப்பார்கள். புகைப்படத்தில் ஜொலிப்பார்கள். ஆனால் டயானா நேரிலும், புகைப்படங்களிலும் அழகாக தெரிந்தார். இவ்வாறான வர்களின் முகங்களை 'போட்டோஜெனிக் பேஸ்' என்று அழைப்பர். என்றும் இளமை, புகைப்படங்களில் செழுமை, டயானாவை கமரா வெளிச்சங்கள் தேடி அலைந்ததுக்கு அதுவும் ஒரு காரணம்.




ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்
SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
323657


# விரல் நுனியில்

⬇ தொலைத் தொடர்பு சாதனங்களின் பிரமிப்பான முன்னேற்றம் உலகத்தை சுருட்டி விரல் நுனியில் தருகிறது.

படத்தில் இருக்கிறார் பாருங்கள் நங்கை, 21ம் நூற்றாண்டில் கால் வைக்க இப்போதே ரெடியாகிவிட்டார்.

கையில் மணிக்கூடு மாதிரியான அமைப்பில் இருப்பது கம்பியூட்டர் கருவி. தலையில் ஹெல்மெட் போல இருப்பது சின்னத் திரை கொண்ட கருவி. இவற்றின் உதவியால் நடுத்தெருவில் நின்றபடியே இன்டர்நெட்டுடன் தொடர்பு கொள்ளலாம். காதலன் அனுப்பும் கவிதைகளை திரையில் படிக்கலாம். அலுவலகத்தில் உள்ளவர்களுக்கு தேவையான கட்டளைகளை வழங்கலாம். செய்திகளை ஈ.மெயிலில் அனுப்பலாம். உலகின் எந்த மூலையில் குண்டு வெடித்தது என்ற தகவலைப் பெறலாம். இன்று பங்குச் சந்தை நிலவரம் என்ன, ஜெயசூரியா அடித்தது எத்தனை சிக்ஸர், லேட்டஸ்ட் செக்ஸ் ஜோக் என்ன எல்லாமே பட்டனை தட் பட் பட் என்று அறியலாம்.

இந்த நவீன தொலைத்தொடர்பு கருவியை பரிசீலித்துப் பார்த்துள்ளனர். இது பாவனைக்கு வந்தால், அலுவலகங்கள்கூட தேவையில்லை. தெருவின் ஓரத்தில் நின்று கொண்டே வர்த்தக அலுவல் முதல், சகல வித்தகத்தனங்களையும் கவனிக்கலாம். நாம்தான் எங்கோ நிற்கிறோம். பின்னேற்றம்!





# ஊஞ்சல்

⬆ தூக்கணாங் குருவிகள் கூடு கட்டுவதில் ஸ்பெசலிஸ்டுக்கள் என்பது தெரிந்ததே. ஆனால் இங்கு காணப்படும் கூடு தூக்கணாங் குருவிக்கூடுகள் போன்றதல்ல. சொன்னால் மலைத்து நிற்கப் போகிறீர்கள்.இது காதல் கூடு. தன் காதலுக்காக மாளிகைகளையும், மஹால்களையும் கட்ட மனிதனால் மட்டும் தான் முடியுமா? இந்தக் குருவியைப் பொறுத்தவரை இதுவும் ஒரு தாஜ்மஹால்தான்.

என்ன நம்ப இயலவில்லையா? நாம் அறியாத சுவையான சங்கதிகள் பல உண்டு. அதில் இது ஒன்று. இப்போது அறியலாமா?

தொங்கும் குருவியின் பெயர் 'புளொசியஸ் கியுக்கிலேட்டஸ்'. 'கிராமத்து நெசவாளன்' என்று அழைக்கப்படுகிறது. அந்தளவுக்கு சூப்பராக கூடு கட்டுகிறது.


ஏன் கூடு கட்டுகிறது? அங்கேதான் இருக்கிறது சமாச்சாரம்.

தனக்கு ஒரு துணையைத் தேட வேண்டும் என்ற எண்ணம் எழுந்ததும் ஆண் குருவி ஒரு தென்னை மரத்தைத் தேடிச்சென்று தென்னை ஓலையின் அடிப் பகுதியில் ஒரு கூட்டினை அமைக்கும். பச்சைப் புல்லைக் கொண்டுதான் கூடு கட்டப் படுகிறது. ஒவ்வொரு புல்லாகச் சேகரித்துக் கொண்டுவந்து, துணி நெய்வதைப் போல் கூட்டினை அமைக்கும். (காதல் கூடென்பதால் இரசனையுடன் கட்டுகிறதோ?)

கூடு அமைத்து முடிந்ததும் கூட்டின் வாயிலில் தொங்கிக் கொண்டு செட்டைகளை அடித்து அந்தாளத்துக்கேற்ப பாடத் தொடங்கும் (அவன் ஒரு வாளா ஸ்டைலில் பாடுமாக்கும்) இந்த ஆண் பறவையின் இன்னிசை கேட்டு மயங்கும் பெண் குருவி ஆண்குருவியுடன் வந்து அணையும். ஆனால் ஆண் குருவி கட்டியுள்ள கூடு தனக்குப் பிடிக்கவில்லை என்றால், தாமதிக்காமல் பறந்து சென்றுவிடும். இதனால் கோபங்கொண்ட ஆண்பறவை உடனடியாக அக்கூட்டை உடைத்து எறிந்து விட்டு புதிய கூடு ஒன்றினைக் கட்டத் தொடங்கிவிடும்.

இரண்டாவது கட்டியகூடு பின்னர் வரும் பெண் குருவிக்குப் பிடித்துவிட்டால் இரண்டும் இணை சேர்ந்துவாழும். பெண் குருவி முட்டையிட்டதும் ஆண்குருவி பறந்தோடிச்சென்று மற்றோர் மரத்தில் கூட்டினைக் கட்டிக்கொண்டு மற்றுமொரு பெண் பறவைக்கு வலை விரிக்கும். (பொல்லாத சபலிஸ்ட்)

# உலா



➡ சாட்சாத் லொறியேதான். பார்த்தால் 'நடமாடும் இரதம்' போலத் தெரிகிறதல்லவா. எந்தத் திருவிழாவுக்கு என்று கேட்காதீர்கள். பொருட்களை ஏற்றி இறக்கும் சாதாரண வர்த்தக லொறியைத்தான் இப்படி ரதம்போல அலங்கரித்து வைத்திருக்கிறார்கள். பாகிஸ்தானில் கராச்சியிலிருந்து புறப்பட்டு இடைநடுவே ஓரிடத்தில் ஓய்வு எடுக்கும்போது கிளிக் செய்யப்பட்ட காட்சிதான் இது.

பண்டைக்காலச் சித்திரங்கள், சிற்பங்கள் வரையப்பட்டும், குடைந்தும் நடமாடும் இரதம் போல செப்பனிட்டுள்ளனர். லொறிகளை, அதுவும் சரக்கு லொறிகளைக் கண்டாலே ஓரமாய் ஒதுங்கிவிடுவர் தெருவில் செல்வோர். ஆனால் இந்த லொறிகளைக் கண்டால் ரசித்துப் பார்க்கிறார்கள். தெருக்களில் இவை செல்கையில் கண்கொள்ளாக் காட்சியாக இருக்குமாம்.

நம்நாட்டில் லொறிகள் என்றாலே அலர்ஜியாகி விட்டது. எனவே இவ்வாறான அழகுபடுத்தும் யோசனைகளை சிபாரிசு செய்தால் லொறிக்காரர்கள் உதைக்க வருவார்கள்.

பஞ்சாபிஸ், சிந்தி, பல்தூன், முஹாஜிஃஸ், மற்றும் பலுச்சி ஆகிய ஐந்து பிரதான இனங்களைக் கொண்ட நாடு பாகிஸ்தான். அரசியல் பூசல்கள் இருந்தாலும் உழைப்பால் உயர்ந்து வருகிறது பாகிஸ்தான். மொத்த சனத்தொகை 14 கோடி.

# 1 வது பிறந்தநாள் வாழ்த்து



## ஷந்தோஷ்

யோகேந்திரன்-சகலேஸ்வரி தம்பதியினரின் செல்வப்புதல்வன் ஷந்தோஷ் தனது முதலாவது பிறந்த நாளை 11.10.97 அன்று கனடாவிலுள்ள தனது இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடினார். ஷந்தோஷை அன்பு அம்மா, அப்பா, பாசமிகு உற்றார், உறவினர்கள் சகல சௌபாக்கியங்களும் பெற்று இறையருளால் நீடுழி காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

தகவல்:- திரு. திருமதி யோகேந்திரன் சகலேஸ்வரி-ரொரன்ரோ, கனடா.

# வீட்டுக்குள் சினிமா

வீடியோக்களில் படம் பார்க்கத் தொடங்கியதால் திரையரங்குகளின் பக்கம் கூட்டம் இல்லை. நூறுநாட்கள் ஓடக்கூடிய படங்கள்கூட ஐம்பது நாட்களுக்குள் திரையரங்கை விட்டு ஓடிவிடுகின்றன. சின்னத் திரை பெரிய திரையை விழுங்கிக்கொண்டிருக்கிறது- என்பது சினிமாக்காரர்களின் குற்றச்சாட்டு.

வெறுமனே குற்றம்சாட்டி என்ன பயன்? அதனால் சின்னத் திரையில் பார்த்தால் காட்சிகள் நன்றாக தெரியாதளவுக்கு கமரா வித்தை காட்டி படம் எடுத்தார்கள். (உ-ம்:மணிரத்னம் படங்கள்) குறிப்பிட்ட படங்களின் பிரமாண்டத்தை பார்க்க வேண்டுமானால் ரி.வி.திரை போதாது. திரையரங்குக்கு சென்றே ஆக வேண்டும். உதாரணமாக ஜுராசிக் பார்க் படத்தை ரி.வி. திரையில் பார்த்தால் அலுப்பாக இருக்கும்.

சினிமாக்காரர்களின் இந்த தந்திரம் வெற்றி அளித்து வந்தது. அதற்கும் இப்போது சவால் வந்துவிட்டது. வீட்டுக்குள் பெரிய திரையில் படம் காண்பிக்கக்கூடிய கருவி ஒன்று விற்பனைக்கு வந்துவிட்டது. படத்தில் இருக்கும் கருவிதான் அது. வீடியோ கசட், அல்லது லேசர் டிஸ்க் போன்றவற்றை உபயோகித்து, இந்தக் கருவிமூலம் படம் பார்க்கலாம். 30 அங்குலம் முதல், 12 1/2 அடி அகலம் வரை உள்ள திரையில் இக் கருவி படம் காட்டும். இக் கருவியின் எடை பத்து கிலோதான். இதன் பெயர் சன்யோ எல்சிடி கலர் புறொஜெக்டர். திரையரங்கம் வீட்டுக்குள்ளேயே வந்துவிட்டது. திரையரங்க உரிமையாளர்கள் பாடு கஷ்டம்தான்!





படிப்பகம்